விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

நாவாந்துறை பிள்ளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 19 வியாழக்கிழமை (05.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 290

புலமைப்பரிசில் பெறுபேறு நேற்றிரவு வெளியானது

(கொழும்பு)

2017ஆம் ஆண்டு, தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளுக்கும் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் இன்றையதினம் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் திணைக்களத்தின் உதவி 23

சமஷ்டி தரப்பட்டுவிட்டது தமிழரசுக் கட்சி புது விளக்கம்

(மட்டக்களப்பு)

சமஷ்டி தரப்பட்டு விட்டது என்பது தான் உண்மை. ஆனால் அதனை நாங்கள் பூதாகாரமாகச் சொல்லி எதிர்ப்பாளர்களைக் கிலி கொள்ள வைக்க வேண்டிய அவசியம் இல்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான கே.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை மாருதி பாலர் பாடசாலையில் நேற்று புதன்கிழமை 24

தேசியமட்டத்தில் நீர்கொழும்பு முதலிடம்

(கொழும்பு)

நேற்று வெளியாகிய புலமைப் பரிசில்பரீட்சையில் நீர்கொழும்பு கரிச்சந்திர மகாவித்தியாலய மாணவன் தினுககிரிசான் 198 புள்ளிகளைப்பெற்று தேசியமட்டத்தில் முதலிடம்பெற்றுள்ளார். (மு)

கிளி.இந்து முன்னிலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி நொச்சி இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் பாஸ்கரன் பார்த்தீபன் 188 புள்ளிகள் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் நிலையைப பெற்றுள்ளார். (மு)

முல்லைத்தீவின் முன்னிலை விபரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவி மகேந்திரன் ஹர்ஷனா 188 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் விசுவமடு விசுவநாதர் ஆரம்ப பாடசாலை மாணவி விஜயரூபன் அன்பருவி 187 புள்ளிகளைப் பெற் 23

புதிய அரசியலமைப்பில்
ஒற்றையாட்சி - பௌத்தத்திற்கு முன்னுரிமையுடன்
உச்சகட்ட அதிகாரப்பகிர்வு

பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

ஒற்றையாட்சிக்குள் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய அரசியல் யாப்பு தயாரிக்கப்படுகிறது. இதில் உச்சகட்ட அதிகார பகிர்வுக்கு இடமளித்து சகலருக்கும் உரிமைகள் கிடைக்கக் கூடிய வகையில் யாப்பு தயாரிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

இனவாத நோக்கிலான அரசியலமைப்பு உருவாக மதத்தலைவர்கள் இடமளிக்கக்கூடாது!

ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஒருபோதும் இனவாதத்திற்கு முற்றுப்புள்ளியிடும் இன ஐக்கியத்தை கொண்டுவர முடியாது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அத்துடன் இனவாத நோக்கில் புதிய அரசியலமைப்பை உருவாக்க மதத்தலைவர்கள் இடம 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிரு இடங்களையும் பெற்றது பொஸ்கோ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவிகள் இருவரும் யாழ்.மாவட்டத்தில் முதலிரு இடங்களையும் பெற்றுள்ளனர். உதயகுமார் அனந்திகா 194 புள்ளிகள் (மாவட்ட நிலை - 1), அனி ருத்திரன் மைத்திரேயி 193 புள்ளி கள் (மாவட்ட நிலை - 2) பெற்றுள்ளனர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 155 புள்ளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவையை ஆரம்பிக்க ஒப்புதல்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கு மிடையில் மீண்டும் பயணிகள் கப்பல்சேவையை ஆரம்பிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சரவையில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் சேவைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்த சேவையை ஆரம்பிக்க அனுமதி கோரும் ஆவணங்களை முன் வைத்திருந்தார்.

இலங்கை - இந்திய சுற்றுலா பயணிகள் நலன் கருதி ஏற்கனவே மும்பையை சேர்ந்த நிறு 23

பிணை முறிகள் மோசடி ரவியின் தொடர்பு அம்பலம்

(கொழும்பு)

2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற முறிகள் ஏலத்தின் போது குறைந்த பெறுமதியில் விலைமனுவை முன்வைக்குமாறு அப்போதைய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அரச வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

முறிகள் மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் இந்த விடயம் நேற்று வெளிக் கொணரப்பட்டுள்ளது. 23

உள்ளே...

சேவை வகுப்பு 3 தரம் II நியமனம் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர் விபரம்

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 200 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(டிக்கோயா)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிவ்வெளி பகுதியிலுள்ள தனியாருக்கு சொந்தமான ஆடைத்தொழிற்சாலையில், கடமையில் இருந்த பெண்கள் மயக்கமுற்ற நிலையில் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த தொழிற்சாலையில் பணிபுரிந்த சுமார் 200 பெண்கள் வரையில் நேற்றுக்காலை சிகிச்சை பிரிவுக்கு அனுமதிக்கப்பட்டனர். 23

தமிழ் மக்களை நெருங்குவதற்காக பசிலால் இராணுவம் காட்டிக்கொடுப்பு

சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

போரின் போதும் போருக்குப் பின்னரும் இராணுவத்துக்குள் உள்ள தனிப்பட்ட சிலரே குற்றங்களை இழைத்தனர் என்று முன்னாள் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பிரித்தானிய அமைச்சர் மார்க் பீல்ட் இன்று இலங்கைக்கு வரவுள்ளார். இந்தப் பயணத்தின் போது அவர் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தருவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கொழும்பு வரவுள்ள, பிரித்தானியாவின் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் மார்க் பீல்ட், நாளை வரை தங்கியிருப்பார்.

ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான வெளிவிவகாரப் பணியக அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் இவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

கொழும்பில் இவர், வடக்கிலும் தெற்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை சந்திப்பார். இதன்போது அவர்களின் குறைகளையும், காணாமல்போனோர் பணியகம் தொடர்பான கருத்துக்களையும் கேட்டறிந்து கொள்வார் எனத் தெரியவருகின்றது. (மு)

மோட்டார் சைக்கிள் சாரதிக்கு ரூ.3 இலட்சத்து 70 ஆயிரம் அபராதம்

நபரொருவரை மோதிவிட்டு நிறுத்தாமல் சென்ற மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவருக்கு 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து ஹொரணை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர் கடந்த முதலாம் திகதி ஒருவர் மீது மோதிவிட்டு நிறுத்தாமல் சென்றிருந்தார். பலத்த தேடுதலின் பின் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர். அவர் மீதான விசாரணையில் அவர் பல குற்றங்களை புரிந்திருந்தமை தெரியவந்துள்ளது.

ஒருவர் மீது மோதிவிட்டு நிறுத்தாமல் சென்றது, ஆயிரம் சிசி திறன்கொண்ட மோட்டார் சைக்கிள் பாகங்களை சட்ட விரோதமாக நாட்டினுள் எடுத்துவந்தது, போலியான இலக்கத் தகடுகளைப் பொருத்தியிருந்தது மற்றும் பதிவு செய்யாத வாகனம் ஒன்றைச் செலுத்தியது உள்ளிட்ட பன்னிரண்டு குற்றச் சாட்டுக்களின் பேரிலேயே அவருக்கு மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அபராதத்துடன், ஒத்திவைக்கப்பட்ட ஓராண்டு சிறைத் தண்டனையும் குற்றவாளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஹொரணை நீதவான் நீதிமன்றினால், மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவருக்கு விதிக்கப்பட்ட அதிகூடிய அபராதமாக இது பதிவாகியுள்ளது. (மு)

மைலோ கிண்ண உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நெஸ்லே லங்கா (பி.எல்.சி) நிறுவனத்தின் மைலோ குழுமமும் யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து யாழ்.மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்டக் கழகங்களினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2013ஆம் ஆண்டு தொடக்கம் நடத்தி வரும் **மைலோ கிண்ணம் யாழ்ப்பாணம்** என்னும் தொடரின் 2017ஆம ஆண்டிற்கான போட்டிகள் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவ் மைலோ கிண்ணத்திற்கான போட்டிகள் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றது. 2013ஆம் ஆண்டு 40 கழகங்களின் பங்குபற்றுதல்களுடன் ஆரம்பமான இத் தொடர் 2014ஆம் ஆண்டு 60 கழகங்களாகவும், 2015 ஆம் ஆண்டு 100 கழகங்களாகவும் 2016 ஆம் ஆண்டு 150 கழகங்கள் பங்குபற்றிய போட்டியாகவும் அமைந்தன. மேலும இவ் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் 150 விளையாட்டுக் கழகங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 50 கழகங்களினையும் உள்ளடக்கியதாகவும் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன. குறிப்பாக பாடசாலை மட்டத்திலும் 14 மற்றும் 16 வயது பிரிவுகளில் 80 பாடசாலை அணிகள் பங்கு பற்றும் போட்டிகளும் இம்முறை ஒழுங்கு செய் யப்பட்டுள்ளன.

இவ் உதைபந்தாட்டத் தொடரானது இலங்கையின் மாபெரும் உதைபந்தாட்டத் தொடராக பரிணமித்துள்ளது மேலும் சிறப்பான விடயமாகும். இத்தொடரில் தீவக உதைபந்தாட்ட லீக், யாழ்ப்பாணம் உதைப்பந்தாட்ட லீக், வடமராட்சி உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக், முருதங்கேணி உதைபந்தாட்ட லீக் மற்றும் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் போன்றவற்றிலுள்ள 200 விளையாட்டுக்கழக அணிகளும், பாடசாலை மட்ட 80 அணிகளும் இணைந்துள்ளன.

இறுதிப் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மு)

பாராட்டி வாழ்த்துகிறோம்

திரு.சின்னக்குட்டி சின்னையா

(ஓய்வு நிலை அதிபர்)

சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் கைதடி முதியோர் இல்லத்தில் நடத்திய முதியோர் கௌரவிப்பில் எழுதுமட்டுவாழ் தெற்கு (ஜே/333) பிரிவு முதியோர் சங்கத் தலைவர்

திரு.சின்னக்குட்டி சின்னையா

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களது சேவையை பாராட்டி கௌரவித்திருந்தனர். அதனையொட்டி அவரது நண்பர்களாகிய நாமும் அவரது சேவையை பாராட்டி வாழ்த்தி மேலும் அவரது சேவை எம் மக்களுக்குக் கிடைக்க எல்லாம் வல்ல இறைவன் உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் நல்க வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர்:- அன்பு நண்பர் குழாம்
எழுதுமட்டுவாழ்

(சி-9868)

மரண அறிவித்தல்

திருமதி **இரத்தினம்மா இரத்தினம்**

தோற்றம்	மறைவு
13 - 11 - 1930	02 - 10 - 2017

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா இரத்தினம் கடந்த (02.10.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், முன்னாள் காலி வர்த்தகர் (V.S.R) V.S. இரத்தினத்தின் அன்பு மனைவியும், ஜெயராஜா (கனடா), அனுசியா (லதா), சுகந்தி, சுகராஜா (கனடா), சாந்தராஜா (கனடா), சாந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணபாலசிங்கம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத்திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்), குமுதினி (கனடா), தர்மகுலேந்திரன், சசிகலா (கனடா), அனுசியா (கனடா), ஆறுமுகலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், வசந்தாதேவி, பிரேமா ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும், மயூரன், மதன், மதிலன், நிரோஷ், ஜெனிஸ், கீர்த்திகா, தனுஜா, வினுஜா, சுபீஜா, ஜெனுஷா, ஜெசின், சங்கவி, ஆரணி, அபிதா, அஜேஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கோபிசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2017) வியாழக்கிழமை மு.ப 10 மணிவரவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(மான்குட்டி வீடு) 021 2053308

தகவல்:-
குடும்பத்தினர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பிற்போடப்பட்டுள்ளது

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால் 03.10.2017 நடத்தப்படவிருந்த சீட்டிழுப்பு எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாததினால் 18.10.2017 அன்று சீட்டிழுப்பு குறிப்பிட்ட இடத்தில் நடைபெற்று முடிவுகள் 20.10.2017 வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

-தலைவர்-

(879)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **சஞ்சீவினி இராகவன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

இராசலிங்கம் குணலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(907)

பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

கண்ணீர் அஞ்சலி

அமரர் **புஸ்பநாதன் பவளவதி**

எமது பாடசாலையின் பகுதித் தலைவர் திருமதி **மதிவதனா சிவநாதன்** அவர்களின் அன்புத் தாயார் அமரர் **புஸ்பநாதன் பவளவதி** 02.10.2017 அன்று இறைபதம் அடைந்தார்

அன்னாரின் இழப்பால் துயர் உற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறோம்.

(904)

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை, அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர்த் திருவிழா நேற்றுக் காலை சிறப்புற இடம்பெற்றது. (படங்கள்:- தும்பளை, கரணவாய் செய்தியா ளர்கள்)

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக

விடுதலை செய்!

யாழ்.பல்கலையில் நேற்றுப் பாரிய போராட்டம்

(படங்கள்:-உ.சாளின்)

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், வவுனியா நீதிமன்றில் நடைபெறும் வழக்கு விசாரணைகளை அநுரா தபுரம் நீதிமன்றுக்கு மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமிழ்த் தலைமைகள் இந்த விடயத்தில் மௌனம் காக்காது அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழகம் சாராத வெளி அமைப்புக்களும் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தன. தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது உறவுகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியிருந்தனர். இப்போராட்டத்தில் பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தமையால் யாழ்.பல்கலை. முன்றலில் பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் கடும் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

முற்பகல் பத்து மணியளவில் பல்கலை.வளாகத்திற்குள் ஒன்று கூடிய மாணவர்கள் பேரணியாக பிரதான வாயிலை வந்தடைந்து அங்கிருந்து விஞ்ஞானபீட வாயில் வழியாகச் சென்று மீண்டும் பல்கலை. வளாகத்தில் ஒன்றுகூடினர்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டு விடுதலையை உறுதி செய்ய வேண்டும்.

அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை தற்போது வரை வழங்கி வரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமைகள் அரசியல் கைதிகள் விடயத்தில் விட்டுக்கொடுப்பின்றி செயற்பட்டு அரசுக்கு அழுத்தம் வழங்க வேண்டும் எனவும் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். மேலும் சில தினங்களுக்குள் இதற்குத் தீர்வு வழங்கப் படாவிட்டால் தமது போராட்டம் மக்கள் போராட்டமாக வெடிக்கும் எனவும் மாணவர்கள் எச்சரித்துள்ளனர். (இ-4)

குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை
Special Treatment for Gastric Ulcer
சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.
ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.
Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

இலங்கையில் எங்கு பிறந்திருந்தாலும்

பிறப்பு,இறப்பு சான்றிதழ்களைப்பெற நல்லூர் செயலகத்தை நாடுங்கள்

இலங்கை முழுவதுக்குமான பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களை வழங்கும் சேவையினை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் நேற்று முதன் முறையாக நல்லூர் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் மட்டுமே கடந்த காலங்களில் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இலங்கைத் தீவின் எந்தப் பகுதி யில் பிறப்பு, இறப்பு, விவாகம் இடம்பெற்றிருந்தாலும் அந்தப் பதிவுச் சான்றிதழ்களை இனிவரும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இந்த அலுவலகம் முதன்முறையாக நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவில் அகதி முகாம்களில் பிறந்தவர்களுடைய பிறப்புச் சான்றிதழ்களும் இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அலுவலகம் நல்லூர் பிரதேச செயலகத்தில் கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இயங்கும். இந்த அலுவலக அமைப்புக்கான நிதி உதவியினை யூ. என்.எச்.சி.ஆர். நிறுவனம் வழங்கியுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதோடு சிறப்பு விருந்தினர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வடமராட்சி துன்னாலை
அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
தீர்த்தோற்சவ சிறப்பு மலர் 05.10.2017

பிரதம குருமார்களின் நல்லாசிகள்

சமுத்திர தீர்த்தம்

அன்புடையீர்!

பிரமோற்சவம் எனப்படுகின்ற மகோற்சவமானது இறைவனது ஐந்தொழிலை குறிப்பதாகும். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற வகையில் அருளலின் தொழிலைக் குறிப்பதுடன், புரட்டாதி பூரணை நன்னாளில் இளவல்லியின் மடியில் உதித்த மழலை பின் சக்கரவடிவாகி பல அற்புதங்கள் புரியும் எம்பெருமான் தான் உதித்த கடலில் நீராட விநாயகர், இலக்குமி சமேதராக ஆஞ்சநேயர் நீராடலில் தனது அருளலைத் தெளிவு படுத்தி அருளல் தொழில் புரிகின்றார்.

எல்லாம் வல்ல எம் பெருமான் ஸ்ரீ வல்லிபுர மாயவனின் பேரருள் நிறைந்த நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

நன்றி சுபம்

ஸ்ரீ ஆழ்வார்பீடம்
ஸ்ரீவல்லிபுரக் கோவில்
புலோலி P. O

பிரதம குருமார்கள்
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குரு J. P
பிரம்மஸ்ரீ ச.க புருஷோத்தமக் குரு J. P
பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக் குரு
(மகோற்சவ குருவும்)

சங்கடங்கள் தீர்க்க வல்ல சமுத்திர நாயகனே வருக

வளம் மிக்க வல்லிபுர மண்ணிலே
வந்தோரை வாழ வைக்கும் வல்லிபுர ஆழ்வாரே – வருக வருக
ஆழ்கடல் மீதினிலே ஆனந்தமாக தீர்த்தம் ஆடிட
அற்புத மாயவனே அலைகடல் நோக்கி வருக வருக
அலைகடல் மீதினிலே தீர்த்தம் ஆடி – தீமைகள் தீர்க்க வல்ல
சமுத்திர நாயகனே சனத்திரளில் மிதந்து வருக வருக
சமுத்திர நாயக யுகா வரும் போதே வந்தோருக்கும்
வையகத்தில் வாழ்வோருக்கும் வாரி வாரி •
அருள் புரிந்திட ஆனந்தமாக விரைந்து வருக

ஆர்.எஸ். பகீரதன்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

(C-9865)

கடல் நீராடும் கண்ணனின் மகத்துவம்

சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமியின் கொடியேற்றம் கடந்த செப்டெம்பர் 20ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

இத்திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பான தாகவும் விளங்குவது சமுத்திர தீர்த்த திருவிழாவாகும்.

சரித்திர வரலாற்று ரீதியான இத்திருவிழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள். இத்திருவிழா இன்று நடைபெறு கின்றது.

இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற் கரைக்கு தீர்த்தமாடுவதற்கு செல்வார். பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை கற்கோவளம் பக்தர் கள் தோளிலே காவிக்கொண்டு சங்கு சக்கரம், மாயவா, கேசவா, வைகுந்தா, நாராயணா, கண்ணா, கோவிந்த மலையை கையிலே கொண்டு கற்கோவளத்தில் மச்ச தாரம் என கோஷங்கள் எழுப்பியவாறு காவிச் செல் வார்கள்.

பாவலர்கள், நாவலர்கள் பக்தகோடிகள் அனை வரும் வணங்கும் கண்ணன் கடல் நீராடும் மகோற்சவம் இன்றாகும்.

கண்ணனின் அவதாரங்கள்

நான்கு வேதங்களைக் காக்க மச்சவதாரம், தேவர்கள் அமுதம் பெற உதவிய கூர்மவதாரம், இரணியராட்சதனி டமிருந்து பூமியைக் காக்க வராகவதாரம் எல்லாவற்றி லும் தானிருப்பதை உணர்த்தும் நரசிம்ம அவதாரம், மகாபலி ஆணவமிழக்க வாமன அவதாரம், நீதி தவறிய மன்னர்களை ஒழிக்க பரசுராம அவதாரம், தந்தை சொல்லை நிலைநாட்ட இராம அவதாரம், அண்ணனின் கடமையை செய்த பலராம அவதாரம், பூபாரம் தீர்த்து பசுக்களைக் காக்க கிருஷ்ண அவதாரம், பாவம் பெருகும் போது எடுக்க இருக்கும் கல்கி அவதாரம் முறையே இப்பத்து அவதாரங்களும் மச்சவதாரத்தை நினை வூட்டும் வகையில் மாட்சியைக் காண பல்லாயிரக் கணக்கான மக்கள் அலை கடலருகே திரள்வதை இன்று காணலாம்.

பாற்கடலில் நீராடிப் பரந்தாமன் தன்னை நாடி வரும் மக்களுக்கு சகல செல்வங்களையும் வழங்கி நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கு அருள்பாலித்து அவனது அருட் கடாட்சத்தால் சுபீட்சமும் கீர்த்தியும் பெற அவன் மலரடி பணிவோமாக.

"சாமஸ்ரீ தேசமானிய"
Lion த.ஜெயரூபன் சமாதான நீதவான்,
கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகரும்
மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும்
அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினரும்
சமூக சேவையாளரும். கற்கோவளம்.

பாற்கடல் வண்ண பக்தர்க் கருள்வாய்

வெள்ளை மணற் பரப்பில் விளையாடும்
வல்லிபுரப் பதியமர்ந்த வல்லிபுரேசா வாகுபெறு
கொள்ளை யழகொடு குலவும் கோபியர்தம்
குறும்பொடு கொண்டாடும் கோபாலா
எள்ளி நகையாடும் இரணியனைச் சங்கரித்து
எதிர்கொண்ட பிரகலாதனைக் காத்தவர்
பள்ளி கொள்ளும் பாற்கடலில் நீராடி
பக்தர்க் கருள்வாய் பல்லாண்டு வாழ்க

கலாபூசணம் மு. தணிகாசலம்,
கற்கோவளம்.

இன்று வங்கக்கடலில் நீராடி வரும் மாயவனின் அருள் பார் எங்கும் கிடைக்க வேண்டி நிற்போர்

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
சரவணா மகாலட்சுமி தங்கமாடம்
இல. 93, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 321 4577

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
தரன் நகை மாளிகை
ம. ம. வி. வீதி, நெல்லியடி.
தொ. பே.- 021 321 9254
கிளை I: தரன் நகைமாளிகை
பிரதான வீதி, பருத்தித்துறை.

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
வைஷ்ணவி நகைமாளிகை
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.- 021 226 4519

யாழ் பீச் ஹோட்டல்
யாழ்.பிரதான வீதி, வல்வை.
தொலை 021 226 1567
Room, Hall A/C Facility
Conference Hall with
200 Seating Capacity

நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சுசீலா ஆபரண மாளிகை
இல. 258, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே.-021 226 3064
கிளை I
நியூ சுசீலா ஆபரண மாளிகை
இல. 228, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே.- 021 226 4154

சிறீரங்கம்
ரெக்ஸ் ரைல்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை I
வதிரி வீதி, உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்து சீரடி சாயி நாதரின் முதலாவது சித்திரத்தேர் ஆரோகணம் நேற்றுக் காலை இடம்பெற்றது. (படங்கள்:-ஜ.சிவசாந்தன்)

நடமாடும் மருத்துவ சேவைக்குரிய வாகனக் கொள்வனவுக்காக நிதி சேகரிக்கும் இசை நிகழ்ச்சி

உயிரணிழும்

Bringing the Health care to your community

யாழ் மருத்துவ பீட பழைய மாணவர்கள் (Alumni)

வழங்கும்

பாடகி பிரியங்கா

பாடகர் கௌசிக்

பாடகர் சத்தியபிரகாஷ்

Super Singers

LIVE IN JAFFNA

அக்டோபர் 14ம் 15ம் திகதிகளில், மாலை 6.30 மணிக்கு

கூவர் அரங்கு, யாழ் மருத்துவபீடம்

ரிக்கட்டுக்களை முட்பதிவு செய்ய: 0776026994

/Uyiraniham/

ஊடக அனுசரணை: வலம்புரி



LLB (Hons) Degree

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

LLM
LLB (Hons)
LLB Year - I & II
After A/L

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Tenny Sanchu 0766 693 681 0777 102 131 INTAKE NOW ON

20 YEARS

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna

Best Employer Brand Award 2017 | No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Academic & Industry Interface 2016 | Academic Impact Winner 2016 | No.1 Higher Education Provider 2014 | BTEC Gold Partner 2013 | Performance Excellence Award 2011 | Fastest Growing BTEC Centre 2010

021 221 9910 | 011 259 7217 info@bcas.lk | www.bcas.lk

இராசி பலன்

05.10.2017

புரட்டாதி 19, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பூரணை பின்னிரவு 12.39 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 9.56 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
உலக சிறுமியர் தினம்
பூரணை விரதம்

வளவன்

சந்			
	கிரகநிலை சந்திராஷ்டமம் பூரம், உத்தரம்		ராகு
கேது			செவ், சுக்
	சனி	குரு	சூரி, புத

மீனம் குடும்ப இரகசியங்களை மற்ற வர்களிடம் கூறாதிருப்பது நல்லது, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், வழி பாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மேடம் வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், வழக் கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உரு வாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

ரிஷபம் அடிப்படை வசதி வாய்ப்புக களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்பு ண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

மிதுனம் கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

கும்பம் கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொதுவாழ்வில் மதிப் பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்களால் பலனு ண்டு, வாக்கு மேன்மையுண்டு.

கடகம் சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வம்பு வழக்குகளைச் சமா ளித்து வளம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

மகரம் பிற இனத்தவரால் பெருமை கள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக் கும் வாய்ப்புண்டு, பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடி யும்.

சிம்மம் பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வாகன பழுதுச் செலவுகள் இடம்பெறலாம், வழிபாட் டால் வளர்ச்சி கூடும் நாள்.

தனுசு பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

விருச்சிகம் மகிழ்ச்சி கூடும் நாள், பிள் ளைகள் வழியில் பெருமைக் குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை கூட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

துலாம் நல்ல செய்திகள் நாடி வரும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம்.

கன்னி குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கல்வி அமைச்சின் ஓய்வுநிலை நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளையின் பவள விழா நிகழ்வும் நூல் வெளியீடும் கடந்த 30 ஆம் திகதி யாழ்.இந்துக்கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆசியுரைகளை நல்லை ஆதீன குருமுதல்வர் மற்றும் தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் ஆற்றியிருந்தனர்.

அதனைத்தொடர்ந்து வாழ்த்துரைகள், சிறப்புரைகள் இடம்பெற்றதுடன் பவளவிழா நூலான "தணி" நூல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து விழா நாயகன் கௌரவிப்பும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

குடியால் குலையும் குடும்பங்கள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பகுதியில் நண்பர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த அண்ணனின் இழப்பைத் தாங்க முடியாது அவருடைய சகோதரர் ஒருவர் தனது உயிரை மாய்த்துள்ள சம்பவம் ஒன்று யாழ்.மீசாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி கந்தபுரம் விநாயகர் குடியிருப்பைச் சேர்ந்த பாலசூரியா யசோதரன் (வயது-34), அவருடைய இளைய சகோதரரான மீசாலையைச் சேர்ந்த பாலசூரியா சுதாகரன் (வயது-32) ஆகியோரே மேற்படி உயிரிழந்தவர்களாவர்.

கிளிநொச்சி விநாயகர் குடியிருப்பில் வசித்து வந்த யசோதரனுக்கு மூன்று பிள்ளைகள்உள்ளனர். மனைவி ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வந்துள்ளார். கடந்த செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி வழக்கம் போல் மனைவி வேலைக்குச் சென்றுள்ளார். குறித்த யசோதரன் நண்பர்களுடன் மது அருந்தச் சென்றுள்ளார்.

மாலை மனைவி வீடு திரும்பியதும் குறித்த நபர் மனைவியின் தங்கச் சங்கிலியை வாங்கித் தரும்படி தகராறில் ஈடுபட்டுள்ளார். தகராறு அடிதடி வரை சென்று விறகுக் கட்டையால் மனைவியின் தலையிலும் நெற்றியிலும் தாக்கியுள்ளார். இதனால் படுகாயமடைந்த மனைவி தனது மூத்த பெண் பிள்ளையுடன் அக்கராயன் வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். ஏனைய இரு பிள்ளைகளையும் தனது தாயின் வீட்டில் விட்டுவிட்டுச் சென்றுள்ளார்.

அன்றையதினம் வீட்டில் இருந்த குறித்த நபரை அவருடன் பகல் பொழுதில் மது அருந்திய நண்பர்கள் இருவர் வீட்டில் வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர். தாக்கி விட்டு வைத்திய சாலைக்கு ஏற்றிச் சென்றுள்ளனர். இதை அயல் வீட்டினர் பார்த்தும் உள்ளனர். அக்கராயன் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று அவரது மனைவியின் பெயரை கூறிவிட்டு குறித்த இரு நபர்களும் தப்பிச் சென்றுவிட்டனர்.

அடுத்த நாள் 26 ஆம் திகதி குறித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவரைத் தாக்கியது அவருடைய நண்பர்கள் தான் என அவரது மனைவியும் சகோதரனும் பொலிஸாரிடம் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்களின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு வரும்படி கூறிவிட்டுச் சென்றுள்ளனர். ஆனால் 8 நாட்கள் கடந்தும் பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்ய வில்லை.

இந்த நிலையில் காயப்பட்ட குறித்த நபர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 2 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இவருடைய பிரேத பரிசோதனையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை குறித்த நபருடைய சகோதரரான பாலசூரியா சுதாகரன் தனது அண்ணனின் இழப்பை தாங்க முடியாது நேற்று முன்தினம் தன் உயிரை மாய்த்துள்ளார். இவர் மீசாலையில் உள்ள தனது வீட்டில் தூக்கில் தொங்கியபடி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

மாவை பாரதி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவை பாரதி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலையத்தின் தலைவர் சி.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச சபை முன்னாள் தலைவர் சோ.சுகிர்தன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்குப் பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.சிவயோகம், மாவட்டபுரம் யா/ 231 கிராம அலுவலர் கே.அஜந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் தலைவர்- சி.செல்லத்துரை, உப தலைவர்- சி.நாகேஸ்வரன், செயலாளர்- ஆ.உதயசங்கர், உப செயலாளர்- திருமதி. த.பிறின்தா, பொருளாளர்- இ.சாந்தகுமார் ஆகியோர் புதிய நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு



(கரணவாய்)

வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு முன்பாக கழிவுகள் கொட்டப்படுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மாணவர்கள், முதியவர்கள், சிறுவர்கள் பயன்படுத்தி வரும் இப்பகுதியில் கழிவுகள் கொட்டுவதை சம்பந்தப்பட்டவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

இளைஞன் மீது தாக்குதல்

(கரணவாய்)

தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை உடுப்பிட்டி நாவலடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 19 வயதுடைய இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

குறித்த இளைஞனுக்கு கல்லால் தலைப்பகுதியில் பலமாக தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதில் படுகாயமடைந்த இளைஞன் ஊறணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-60)

சாராயம் விற்றவர் கைது

மது ஒழிப்பு தினமான நேற்று முன்தினம் சாவகச்சேரி நகர்ப்புறத்தில் சாராயம் விற்பனை செய்து கொண்டிருந்த நபர் ஒருவரை யாழ்ப்பாணம்போதைத்தடுப்புப்பொலிஸார் கைது செய்ததுடன் அரச சாராயமும் மீட்கப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து மது பானசாலை ஒன்றிற்கு அருகாமையில் மறைத்து வைத்து விற்பனை செய்யப்பட்ட 180 மில்லி லீற்றர் அளவுடைய 45 போத்தல்களையும் 750 மில்லி லீற்றர் அளவுடைய 20 போத்தல்களையும் மீட்டு சாவகச்சேரிப் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் சாவகச்சேரியினைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

நன்றி செலுத்தும் வழிபாடு

(கரணவாய்)

மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள திருச்சபையின் பிரார்த்தனை மண்டபத்தின் 22 ஆம்வருடநிறைவும்நன்றி செலுத்தும் வழிபாடும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சேகர குரு டி.அழகராசா தலைமையில்நடைபெறவுள்ளது. (இ-60)

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச செயலக சமூர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவினால் எழுத்தறிவு மன விழிப்புணர்வுக்கருத்தரங்கு நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அ.த.க. வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் திருமதி. பாக்கியநாதன் செல்வராணி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் வளவாளராக அபிவிருத்தி உத்தியோகத்தர் க.முருகன் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் சமூர்த்தி தலைமை முகாமையாளர் ம.கியூமன், வலய உதவியாளர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்களாக, மாணவர்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சங்கிலி அறுப்பு

அதிகாலையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி ஒன்று அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் நெல்லியடி முருகன் கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் குடும்பப் பெண் ஒருவர் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த போது வீட்டிற்குள் நுழைந்த திருடன் இரண்டு பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அறுத்துச்சென்றுள்ளான்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் II நியமனம் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர் விபரம்

மத்திய கல்வியமைச்சினால் யாழ். பொது நூலகத்தில் 2017 ஜூன் 28 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 01 வரை நடத்தப்பட்ட தொண்டராசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வின் அடிப்படையில் 182 தொண்டராசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம் II இற்கு நியமனம் வழங்குவதற்கு தகுதி பெற்றுள்ளனர். இப்பட்டியலில் உள்ளவர்கள் தொடர்பில் ஏதேனும் ம்றைப்பாடுகள் மற்றும் ஆட்சேபனைகள் இருப்பின் செயலாளர், கல்வி அமைச்சு. வடக்கு மாகாணத்திற்கு 19.10.2017 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ் விபரங்களை வடக்கு மாகாண உத்தியோக பூர்வ இணையத்தளமான www.np.gov.lk இலும் மாகாணக் கல்வி அமைச்சின் www.edumin.np.gov.lk எனும் இணையத் தளத்திலும் பார்வையிட முடியும்.

Mr.Rasathurai Kankanesan- 8309 84844V, Akkarayan M.V Mrs.Suganthini Vijayarajah Krishnan- 788583451V, Hindu Primary Viddiyalam, Miss. Tharmakulasingam Kalaimathy-827 754102V, Kannagaiamman Vid,Mrs. Rajinikumar Thenmoli- 845373540V, Kannagaiamman Vid, Mr.Kanagaratnam Senthuran- 861201112V, Kannagai amman Vid,Miss.Pethurupillai Jeyapra ba- 837353521V,Kariyalai Nagabaduvan No-2 GTMS, Mrs.Jeyanthini Parantha man- 855393085V, Kiranchi G.T.M.S, Mrs.Mahendran Antony Omaksiliya - 826663898V, Kumulamunai M.V, Mrs. Vigutha Vasanthakumaran- 8378405 46V, Mukkompan GTMS, Mrs.Kavitha Tharenthiran- 875963457V, Mukkom pan GTMS, Mr.Ramanathappillai Jeya rasa- 863483859V, Mukkompan GTMS, Miss.Mayura Judsijin- 885893406Vm Poonagary Central College, Mrs.Kuna siri Priyatharsini, 827074411V, San thapuram Kalaimagal Vid,Miss. Logana than Jasotha- 796624345V, Thampira sapuram G.T.M.S, Mrs.Sutharsini Kanesan-818423756V, Thampirasa puram G.T.M.S, Ms. Poorviga Srithana pathi-838152716V/198381502716, J/ Avarangal Mahajana Vid, Ms. Sivalaila Kanthasamy- 827251216V/19827250 1216, J/ Avarangal Mahajana Vid, Mrs.Piratheeban Sivapriya- 7953348 90V, J/ Neervely HTM School, Miss. Kovintharajan Renat- 835953742V, J/ Sanmarkka M.V,Mrs.Rajamohan Kaja vathana-808034980V/198080304980, J/ Colombuthurai Hindu M.Vid, Sareetha Balasuntharam- 817562973V, J/ Achc helu MMTM School, Miss Thayalini Visuvanathar- 848580538V, Araly East AMTMS, Mr Palanijandavar Suppra theepan- 812422049V, Arali Hindu College, Miss Thusajanthini Kanakali gam- 835882772V,Alaveddy South AMTMS, Miss Thivviya Balasu bram aniyam- 898043630V, Alaveddy South RCTMS,Sutharshini Pulenthiran-86 7631690V, Annaikoddai R.C.T.M.S, Miss Senthamilselvi Annamalai-83747 2385V/198374702385,Kaddivan Maha Vid, Miss Sakththivel Kowthami- 878382609V, Mahajana College, Miss Piraveena Sivasubramaniyam- 865923 104V, Mahajana College, Mrs Subajini Jejaindran- 765501857V, Mahajana College,Mr.Sanmugaradnam Senthuran- 903144181V, Mahajana College, Mrs Mayoora Thayaparan- 827521337V, Mayiliddy RCTMS, Sivatharmala Siva kadadsam- 855472597V, Mayiliddy RCTMS, Miss Mariyanayagam Anus hiya- 856513726V, Manipai Hindu Colle ge, Miss Jeyam Samini-825361456V, Mulai Saivapirakasa Vid, Miss Sutharsini Ethirveerasinkam- 865613423V, Pan nakam Meikandan Maha Vid, Miss Tharsini Tharmaraya- 885933130V, Puthumadam RCTMS, Kabiriealrajah Niroshan-870253265V, Sandilipay Hindu College,Miss Nalajini Arirajasingam- 807825380V, Siruvilan Kanakasapai Vid, Mrs Jeyachanther Nagaluxmy- 765752701V, St.Henriyarasar College,

Mrs.Dayana PolinShasini Jeyakumar- 728300906V, St.Hentrys College,Mrs Meenalogini Jeyachandran- 8565847 71V, Uduvil Mans Vidyalayam, Mrs Nirojini Thayaparan-867653651V, Uduvil AMTM School, Mrs Piriyathar sini Manivannan-786954088V/19786 9504088, Vayavilan Sri velupillai Vid, Miss Mariyatela Rokana Soosaipillai- 877651703V,Nadeshvara Secondary School, Pushparasa Pathmasiri- 8254- 25055V, Aliyavalai CCTMS,Mrs.James Rajkaran Jeyaruby- 845653437V, Thaddatheru MMTMS,Rasareka Anan dakumar-826003111V/198260003111, Kottavaththai AMTMS,Tharsini Thar san-816421969V,Thondaimanaru Veer akaththi M.V,Sathya Radnasingam - 845442690V,Karaveddy Sarasvathy Girls Vid, Sivatharsini Barathythasan- 867792171V,Alvai Sri Lanka Vid, Vijitha Jegatheeswaran-825392610V, Maru thankerny HTMS, Ramach chandran Saritha-825045295V, Vettilaikkeny RCTMS, Josoph Thurairasah Mary Nil ojini- 877791319V, Vettilaikerny Para meswara Vid,Sivaranjini Sinnathampy- 845643938V, Uduppiddy Saivaprahasa Vid, Mrs Sumiththira Inparathan- 875563289V,Kottavaththai AMTMS, Briyatharshini Sivapathaligam- 9072 92835V, Alvai Sinnathampy Vid, Mrs Kugasakthy Jesuthasan qamel-8963 03724V,Alvai Sinnathampy Vid, Thanuja Tharmalingam- 886542321V/19886 5402321, Alvai Sri Lanka Vid, Kan thasamy Mayoori-917444250V, Sitha mpara College, Kunasegaram Banusha- 906542803V,Sithampara College, Mrs Kiriparan Yogasiri-847073730V, Maru thankerny HTMS. Miss.Sridevi Jeya geelan-807453173V,Thampaddy GTMS, Mrs.Punithakumaran Pathmakala- 765994179V, Thampaddy GTMS, Mrs Mariyastela Sasitharan- 198969003306, Delft Subramania Vid, Mrs Nirojini VIJITHARAN- 198881303291,Delft Seekiriyampallam GTMS, Mr.Thiyakara sa Ajantharuban-861572404V/19861 5702404, Saravanai Nakesvary M.V., Melinchimunai RCTMS, Miss Seba stiyampillai selvarany-815544110V, Kayts St Marys Girls School,Sebastian Vimalathas Maria Antanita- 83589 2565V, Delft Mavalithurai RCTMS, Mr.Kalistan Bernard Rajiv Prahash - 861553914V, .Delft Seekiriyampallam GTMS,Mrs. Upasingam Sujitha-74757 1074V, Mullaithivu, Iruddumadu T.V, Mrs. Sathiyakala Thayalan-785955 242V, Mullaithivu, Chemmalai M.V,Mrs. KAMALANATHAN SARMILA-868 034726V, Mullaitivu RCTMS. Mrs. NIRANJAN ANUSUJA- 865704453V, IRUDDUMADU T.V, Mrs. Vijaya theeban Yogambigai-825233750V, Visuvanathar Primary School, Muth thulingam Sinthusa -905610074V, Mu/ Kalvilankulam G.T.M.S, Vinithan Jukan thini- 865643500V, Mu/Muththaiyanka ddu L.B , Thilakeswaran Supasiny- 835106063V, Mu/Muththaiyankaddu L.B,Thesarasasingam Sarmila- 8668 83254V, Mu/Mamadopalampasi, Raveen thirarasa Piriyatharsiny- 818245017V, Mu/Ampalaperumal kulam, Suseelath evy Somasuntharam-816211875V, Mu/ Karuvelankandal G.T.M., Veluppillai Tharsana- 877993531V, Mu/Kathali yarsamalankulam, Thanabalasinkam Kalaivany- 787905110V, Mu/Katsilaim adu G.T.M.S, Jeyabalan Sutharsiny- 805540010V, Mu/Moonrumurippu G.T. M.S, Poopalasingam Thusiyanthy- 877533506V, Mu/Periyaiththimadu G.T.M, Ratheeswaran Subashini- 8675 43112V, Mu/Periyakulam G.T.M.S, Mrs. A.B. Anantharuby (Name chan ged)- 816653274V, Mn/ Erukampiddy Muslim MMV, Mr.M.M.M Riskan- 881130033V, Mn/ Erukampiddy Muslim MMV, Mrs Mariya Ashintha Arabin Ramon- 796394625V, Mn/ Erukala middu Muslim MV, Miss Sebamalai Rushanthini-886622309V, Mn/Thali

amannar Pier RCTMS, Miss. Thanka velu Kuganeswary- 785863704V, Mn/ Talaimannarpier R.C.T.M.S, Miss. Benildusmary Freeda Dabarera-916 933371V,Mn/ Kondachi GMMS, Miss. A.M.Siraj Farveen-847850710V, Mn/ Kondachi GMMS,Miss.Kuthubusan Hakeema -856670880V, Mn/ Kondachi GMMS, Mrs.Fahamitha Heethas Muha mathu (Name Changed)- 845702250V, Mn/ Puthukudiyirupu GMMS, Miss Abdulkathar Bugurutheen Farhana (Name Changed)- 847022760V, Mn/ Puthukudiyirupu GMMS, Miss. Kethee swary Sivakananathan- 806574 902V, Mn/Punithavalanar R.C.T.V, Miss.Eyu sta Banu Sebamalai Perera, 8358906 60V/198358900660, Mn/Punithavalanar R.C.T.V, Mr.Donitta mmaRajan Rich ard- 735933523V, Mn/Ilahadipiddy R.C.T.M.S, Miss Sahayarasa Shakam ila (Name changed Mohamed Sahabd een Sahamila)- 88800 1360V, Mn/ Put/ Iyoob GMMS, Miss Meera Muhaideen Sahira Banu- 90717 3801V, Mn/ Put/ Iyoob GMMS, Miss Victor Karunairaja Christable-89648 2122V, Mn/ Kokupa ddiyan RCTMS, Miss.K.Thushiyanthy Ganesh-89612 0085V, Mn/Malihaipiddy G.T.M.S, Mn/Thalaimannarpier GMMS, Miss. San thiyoguMotham Yoreda- 898072207V, Mn/Nanattan MMV, Mrs.K.Mariyakora tty- 828302248V, Mn/Puthuvelly GM MS,Miss.Mithar Sahibu Rahuma-778063506X, Mn/ SiruthoppuR.C.T.M.S,Miss.SanthanMekdalin- 816813867X, Mn/Sirukkandal RCTMS, Mrs.Nolasko Joysi Thuram- 81526076 7V, Mn/St.fatima M.M.V, Mrs.Prathee ban Kamari Niromi Barathy Reval- 82601 2749V, Mn/St.Mary's Girls' Vid, Mrs. Ligoryan Vilda Mary Siraiva (Name Changed)-817060544V, Mn/ St.Mary's Girls' Vid/ Mn/St' Fathima MMV, Mrs.C.Delsiya-847622148V, Mn/ St Lowarance RCTMS,Mrs Dixon Catha rin Dalima-838303285V, Mn/ St Low arance RCTMS, Miss.Ramalingam Sutharsini- 807722190V,Mn/Uyirthar asankulam R.C.T.M.S, Miss.Pira siththappar Mariyapelinta-86 5251637V, Mn/Eluthoor R.C.T.M.S, Mrs.Sathees kumar Anne Subasini Kulas-81023 4395V, Mn/kaddukarankudiyiruppu R.C.T.M.S, Mrs.Yogeswaran Dones wary- 858660874V, Mn/Mavilankeny RCTMS, Miss.Alexandar Merina Christy Mihesh-808640937V,Mn/Mulli kulam GTMS, Mrs.Sivananthini Tharu malingam-777994514V,Mn/Murunkan MV / 1998 - Malihaipiddi, Mr.F.Paasith- 900123540V, Mn/Veppankulam GMMS, Miss. Hibaththulla Paseeha- 9054 73590V, Mn/Poonochchikulam GMMS, Mrs.Santhiyogu Mary Difna Parnanthu- 845194114V, Mn/ Kayakuli RCTMS (01.01.2013) Mn/ Parappankandal RCTMS (2014),Miss.Kanthasamy Sarojini- 816952751V, Sinnapandivirichc han GTMS, Mr.Anthonippillai Pakyara sa- 851413421V, Thevanpiddy RCTMS, Miss. Punniyamorthy Karsini-82813 4582V/ 198281304582, Vilaththikulam GTMS, Miss.Yogavan Antony Limarat hani- 835533719V, Adampan MMV, Mr.Agastin Tharmaseelan-752023549V, Mullikulam GTMS,Miss.Dorin Nishant hini Atputharasa- 838273815V, Sinna pandivirichchan GTMS, Vikneswaran Jeyakowri-828254308V, Pappamoddai RCTMS,Sritharan Vanitha-877402010V, Vilathikulam GTMS, Rasarathinam Rajmohan-852261994V, Pappamoddai RCTMS, Sukirtha Muthurasa-91669 4024V, Thatchanamaruthamadhu GT MS, Rafeek Salima-875762672V, An diyapuliyankulam M.V., Anisha Anvar theen-887163839V, Andiyapuliyankulam M.V., S.Selvarajani-797583448V, Aru viththoddam Sivanantha Vid, Mathiya lagan Sasikala-756493329V, Aru viththo ddam Sivanantha Vid, Thiyagara sa Gowsalthevi- 825563784V, Vav uniya South, Aruviththoddam Sivanan tha Vid, Sooriyakala Navaratnarajah- 815675

444V, Kaneshapuram shanmugantha Vid, Sivajini Sivasupramaniam- 8158 65294V, Krishthokulam GTMS, Bala kirushnan Rathimekala- 8980314 62V, Krishthokulam GTMS, Indran Nirosha- 756693344V, Nochchikulam GTMS - Veerapuram Manivasahar Vid - Noch chikulam GTMS -Veerapuram Maniva sahar Vid, Antanis Vinoth- 890362249V, Nochchikulam RCTMS, Thilageswary Balachchanran-76580196 6V, Sitham parapuram Sri nagarajah Vid, Mrs.Mur aly Syamala-837064082V, V/Moon rumurippu GTMS (2008 - 2016) V/ Vavuniya TMMV, Rameshkumar Vimal adevi- 807854720V, Anpupuram Nama hal Vid, Muthusamy Muhuntha rathan- 782914375V, Cheddikulam M.V, Chan drakumar Pamini-767510500V, Tamil M.M.V, Mrs. Thanabalasingam Nirmal athevy 715782820 V,V/Karunkalikulam G.T.M.S, Mrs.Kamalah asan Satharuby- 787974627 V, V/Vingnanakulam Navar athnam Vidyalay am, Mr.Paramalingam Perinbanathan- 782502840 V, V/Karun kalikulam G.T.M.S Sinnathampanai Srikrishna Vid (2000. 04.24-2004.06.24), Mrs.Kethees Kavitha-797974862 V, V/ Maraviluppai G.T.M.S, Miss. Navara thnam Kokila- 825493336 V, V/Math arpanikkar Mahilankulam J.S.V, Miss. Sripriya Saththiyamoorthy-866772088 V, V/Kovilkunchukkulam G.T.M.S, Poolo garasa Rasika- 8567531 74 V, V/Naina madu G.T.M.S,Mrs. Tharmaseeli Vijaya kumar- 885383068 V,V/Puthiyasinna kulam G.T.M.S (Closed after 2016) V/ Karunkalikulam GTMS, Mrs.Niranjala Pathmanathan-8359328 34V, V/Tha ninayakamadikalaar.vith 25.11.2007 V/ Semamadu Shanmuganan tha M.V,Miss. Balasundaram Vasuki- 805753218 V, V/ Paalamoddai G.T.M.S, Mrs. Kanthal athan Ketheeswary-798423665 V,V/ Matharpanikkar Mahilankulam J.S.V, Miss.Markkandu Sukanthiny- 85698 3366V, VSemamadu Shan mugananatha M.V, Miss. M.Jenitta- 898383547 V,V/ Kalmadu Maha Vidyalayam, Mr. Sothir athnam Thusipirashanth- 871371 423 V, V/Sundarapuram Saraswa thy Vidya layam, Mrs. Kantharuban Yogananthi ny- 818305150V,,V/kalmadu M.V, Mrs. Unesan Tharmiga- 875842480 V, V/ Periyamadu Ambal Vidyala yam, Mrs. Kajananthini Aravinthan- 787432 794 V,V/Sundarapuram Saraswa thy Vidyal ayam, Sivaruban Lingeswary- 896262 750 V,V/Kalmadu Unit:02 G.T. M.S, Miss.thayaparan kalaruby -907 8421 50V, V/kalmadu M.V, Thavarasa Shan thiravathani- 777794205V, V/ Periyama du G.T.M.S, Mrs.Thamil chselvan Sulosana-877003973V, V/Olumadu G.T.M.S, Mrs.Pirabhakaran Eniyamalar- 878140893 V, V/Kovilkun chukulam G.T.M.S V/Kothandar No chchikulam GTMS, Mrs.Pakiyanathan Kumuthini- 755532550 V, V/Katkulam G.T.M.S, Mrs. Nirojan Sharmila- 917342385, V, V/Mannakulam G.T.M.S, Mrs. Sasikum ar Jayanthakumary- 828502786 V, V/ Aarumugaththan Puthukkulam G.T.M.S V/Mataiyadithakulam GTMS, Miss. Ulaganathan Sharmila- 917141738 V, V/ Kothandar Nochchikulam G.T.M.S, Mrs. Kalaima gal Kurusamy- 888210 091 V, V/Sri krishna Vidyalayam, Mrs. Sivatharsan. Siththiradevi-906253445V, V/Unjalkatty G.T.M.S (24.02.2015), Miss. Sanmukanathan Sukanthini- 915523960V, J/Kokuvil C.C.T.M School, Miss.Nalina Mahendran- 806502049V, J/Ilavalai Convent M.V, Miss.Varathy Jeyantha kumar- 905393278V, J/Sandi lipay Hindu College, Miss. Vannimaram Ratha-906232944V, Thondaimanaru V.M.V, Mr.E.Thiruchenthuran- 7319332 43V, Kn/Unionkulam GTMSKn/Akkara yan M.V -from 2010, Rajakulasingam Rameshkumar- 781024813V, V/Velank ulam GTMS,Jayantha Ushanthiny- 876213133V, V/Semamadu Unit 2 GTMS, Loganathan Kayalvil-856972143 V,J/Ampan AMTMS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பால் கொள்வனவு நிறுத்தம்

பால் சபையை திறக்க அனுமதியோம் பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்

(பனிக்கன்குளம்)

வவுனியா கணேசபுரத்திலுள்ள பால் சபையில் பால் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளதால் பால் உற்பத்தியாளர்கள் தமது பாலைக் கொள்வனவு செய்யுமாறு கோரி பால் சபைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இப்போராட்டம் நேற்றுக்காலை 7 மணியளவில் இருந்து நடைபெற்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

மேற்படி பகுதியிலுள்ள பால் கொள்வனவு நிலையத்தில் இரண்டு நாட்களுக்கு மேலாக பாலைக் கொள்வனவு செய்யவில்லை என தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ச்சியாக பாலினைக் கொள்வனவு செய்து வந்தவர்கள் திடீரென பாலில் தரம் இல்லை என்ற காரணத்தைக் கூறி பால் சபைக்கு கொண்டு வந்து கொடுக்கும் சில பண்ணையாளர்களிடம் இருந்து மட்டுமே பாலினை கொள்வனவு செய்யாது விடுகின்றார்கள். எங்களுக்கு ஓர் முடிவு கிடைக்கும் வரை பால்சபையைத் திறக்க அனுமதிக்க மாட்டோம். அதுவரை யாரிடமும் பால் கொள்வனவு செய்ய முடியாது. அதனை கண்டித்தே நாம் இவ் ஆர்பாட்டத்தில் ஈடுபடுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பிராந்திய பால்சபை முகாமையாளர் கருத்துத் தெரிவிக்கையில், பாலின் தரம் குறைந்துள்ளதால் தமது நிறுவனங்களின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப தற்போது பால் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளது. பாலின் தரத்தினை வைத்தே பால் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாலினை சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் பருகி வருகின்றனர். இந்நிலையில் தரத்தின் தன்மை குறைந்து காணப்படும் பாலினையே நாங்கள் கொள்வனவு செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார்.

குறித்த பால் சபை நிலையத்திற்கு நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ. அத்தநாயக்க சென்று உற்பத்தியாளருடனும் பிராந்திய பால் சபை முகாமையாளருடனும் கலந்துரையாடியதில் பால் கொள்வனவை நாங்கள் தடுக்கவில்லை என்று தெரிவித்ததுடன் வழமையான வாடிக்கையாளர்களிடமிருந்து பால் கொள்வனவு இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து பாலினை கொள்வனவு செய்ய மறுக்கப்பட்டவர்கள் மதவாச்சியிலுள்ள மில்கோ நிறுவனத்திற்கு தமது பாலினைக் கொடுப்பதாக தீர்மானித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர். அதன் பின்னர் கணேசபுரம் பகுதியிலுள்ள பால் சபை திறக்கப்பட்டு பால்கொள்வனவு செய்யப்பட்டது. (2)

25 மில். ரூபா செலவில்

திறந்து வைக்கப்பட்ட பேருந்து நிலையம் இன்றுவரை பயன்பாடற்ற நிலையில்

(கண்டாவளை)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 25 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பேருந்து நிலையம் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பகுதியில் போக்குவரத்துக்களை ஒன்றிணைத்து மக்களுக்கான சேவைகளை வழங்கும் வகையில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பேருந்து நிலையம் இன்றுவரை பயன்பாடற்ற நிலையில் கால்நடைகளின் உறைவிடமாக காட்சியளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பேருந்து நிலையத்தில் 20 வரையான கடைகள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கடைகளும் ஆயிரத்து 750 ரூபா மாதாந்த வாடகைக்கு வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிலையில் குறித்த பேருந்து நிலையத்தில் பேருந்துகள் தரித்து நிற்காமையினால் இதில் கடைகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டவர்கள் அவற்றை கைவிட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போது பேருந்து நிலையத்தில் தரித்து நிற்க வேண்டிய பேருந்துகள் இதிலிருந்து 800 மீற்றர் தொலைவில் உள்ள நெடுங்கேணி சந்தியிலேயே தரித்து நின்று சேவைகளை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறு பெருந்தொகை நிதியில் கட்டப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்ட பேருந்து நிலையம் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

கத்தி, பொல்லுகள் சகிதம் வீடுகளினுள் உள்நுழைந்து தொடர்ச்சியாகத் திருட்டு

புதுக்குடியிருப்பு பகுதியில் சம்பவங்கள்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆனந்தபுரம், கோம்பாவில், சிவநகர், ஆகிய இடங்களில் கடந்த மூன்று நாட்களாக 5 வீடுகளில் திருட்டுச் சம்பவம் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளதாக வீட்டு உரிமையாளர்களினால் புதுக்குடியிருப்பு பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது.

முகமூடி அணிந்து சுமார் 7 பேர் அடங்கிய திருட்டுக் கும்பலொன்று கத்திகள், பொல்லுகள், கூரிய ஆயுதங்கள் சகிதம் இரவு வேளைகளில் வீட்டின் முன் கதவை உடைத்து உள்நுழைந்து வீட்டில் இருப்பவர்களை கத்தி முனையில் மிரட்டி' கூக்குரல் இட்டால் கொல்லுவோம் எனக் கூறி நகைகள், பணம் என்பன இருக்கும் இடத்தை காட்டுமாறு கேட்டுள்ளனர்.

இதேவேளை திருட்டுக் கும்பல்வீட்டில்இருப்பவர்களை அறையினுள் பூட்டி விட்டு வீட்டினை சல்லடை போட்டு தேடி நகைகள், பணம் என்பவற்றை தம்முடன் எடுத்து தப்பிச் சென்றுள்ளதாக உரிமையாளர்களினால் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் கோம்பாவில் பகுதியிலுள்ள ஒருவரின் வீட்டை உடைத்து உள்நுழைந்தவர்களுடன் வீட்டு உரிமையாளர் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதன் போது திருட்டுக் கும்பல் பிரஸ்தாப நபரின் தலையில் பொல்லுகளினால் தாக்கியுள்ளனர்.

இதன் பின்னர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பொலிஸார் இணைந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் தலைக்கவசமின்றி சாரதி அனுமதிப்பத்திரம், ஆவணங்கள் எதுவுமின்றி பயணித்த நான்கு பேரை புதுக்குடியிருப்பு கைவேலிப்பகுதியில் வைத்து மடக்கிப்பிடித்துள்ளனர். ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர். சந்தேகத்தின் பேரில் கைதான நான்கு பேரையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன் பின்னர் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நிதிமன்றில் சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். (2)

வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை

பிரதேச செயலக வாயிலை முற்றுகையிட்டு தலைமன்னார் பியர் மக்கள் போராட்டம்

(மன்னார்)

தலைமன்னார் பியர் பகுதியில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் மக்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை எனவும், வீட்டுத்திட்டம் வழங்குவதில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகவும் கூறி குறித்த கிராம மக்கள் மன்னார் பிரதேச செயலகத்திற்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று முற்பகல் 10.30 மணியள வில் தலைமன்னார் பியர் பகுதியைச் சேரந்த சுமார் 50 இற்கும் அதிகமானவர்கள் மன்னார் பிரதேச செயலகத் திற்கு முன்பாக ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அரசினால் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள போதும்,

தலைமன்னார் பியர் பகுதியில் வசித்து வரும் மக்களுக்கு இதுவரை எவ்வித திட்டங்களும் வழங்கப் படுவதில்லை.

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும் பல்வேறு காரணங்களைக் கூறி கிடைக்கின்ற வீட்டுத்திட்டத்தை இல்லாது செய்து விடுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் குற்றம் சாட்டினர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து சென்று மீண்டும் எமது கிராமங்களுக்கு வந்து பல வருடங்களாகின்றன. எனினும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக தலைமன்னார் பியர் பகுதியில் கடந்த 4 தடவைகள் வீட்டுத்திட்டப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், தமக்கு உரிய முடிவுகள் கிடைக்காத காரணத்தினாலேயே தாங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் பிரதேசச் செயலாளர் என். பரமதாசை தொடர்பு கொண்டு வினவிய போது,

தற்போது பல்வேறு வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் தலைமன்னார் பியர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் உள்வாங்கப்பட்டு தகுதி அடிப்படையில் அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

உள்வாங்கப்படவில்லை எனவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பல தடவைகள் மன்னார் பிரதேச செயலகத்திற்கு வந்து தமது பிரச்சினை தொடர்பில் மகஜர் கையளித்துள்ள

சர்வதேச நல்லொழுக்க தினம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு

விழிப்புணர்வு ஊர்வலம், ஓவியக்கண்காட்சி

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி உலக தரிசனம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளைஞர் நட்புறவு நிறுவனத்தினால் சர்வதேச நல்லொழுக்க தினமான நேற்று முன்தினம் விழிப்புணர்வு ஊர்வலம், ஓவியக் கண்காட்சி என்பன நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் புகைத்தல் மதுசாரம், போதைவஸ்து பாவனை என்பவற்றை சமூகத்தில் இருந்து முற்றாக அகற்றும் நோக்குடன் மேற்படி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விழிப்புணர்வு ஊர்வலம் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகி ஏ-9 வீதி வழியாக நகர்ந்து டிப்போ சந்தியில் அமைக்கப்பட்டிருந்த ஓவியக்கண்காட்சி மண்டபத்தை சென்றடைந்தது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவ

சி.சத்தியசீலன் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமன்றி வடக்கு மாகாணம் முழுவதும் புகைத்தல், மது சாரம் போதைவஸ்து பாவனை அதிகளவில் காணப்படுவதாகவும் இதனால் பெருமளவிலான இளைஞர்கள் பாதிப்பிற்குஉள்ளாகின்றனர். இதேவேளை ஒரு குடும்பம் மட்டுமன்றி ஒட்டு மொத்த சமூகம் பாதிப்பிற்குள்ளாகின்றது.

முக்கியமாகவறுமை, மாணவர்களின் கல்வியில் பாதிப்பு, குடும்ப வன்முறைகள் அதிகரிப்பு, சேமிப்பு பழக்கம் குறைவு என்பன போதைவஸ்து பாவ

இவ்விடயம் தொடர்பாக அதிகளவான வழக்குகள் நிதிமன்றங்களில் நடைபெற்று வருகின்றது. இதனால் குடும்ப விவாகரத்துக்கள் கூட ஏற்படுகின்றன.

எனவே சமூகத்திலிருந்து நாட்டில் இருந்து இவ்வாறான தவறான பழக்கவழக்கங்களை இல்லாதொழிக்கும் பொறுப்பு எம் அனைவரையும் சார்ந்ததாகும்.

எனவே இன்றைய சர்வதேச நல்லொழுக்க தினத்தில் போதைப்பொருட்களை இல்லாதொழிக்கும் செயற்றிட்டத்தில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், ஆறுதல் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி

சுந்தரம் டிவகலாலா அவர்களின் பவளவிழா சிறப்பு மலர்-05.10.2017

புன்னகை முகத்தோன் வாழ்க!

ஒளிக்கை நீட்டி வாழ்க்கை காட்டிய
வசந்த நாள் என் அன்புத் தந்தை வந்த நாள்!
நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளவுமே
புதியதோர் உலகம் படைக்க இப் பிரபஞ்சத்தில்
பிறந்த என் மதிப்பிற்குரிய
தந்தை பிறந்த நாள்!
குறிஞ்சி பூப்பது பன்னிரண்டு
வருடத்திற்கு ஒரு முறையாம் யார் சொன்னது?
ஆண்டுக்கு ஒரு முறை பூக்கிறது
அதுவே என் தந்தையின் பிறந்த நாள்!
புன்னகை முகத்துடன் பல்லாண்டு
வாழ்க! வாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றேன்.

இ.தர்சிகா
Blossoms முன்பள்ளி வளவாளர்

பவளவிழா நாயகனுக்கு வாழ்த்துச் செய்தி

அன்புள்ள அப்பா வாழ்க!
பாசமும் மகிழ்வினைப் பகிர்ந்திடும் பண்பினால்
பலரன்புக் குரியரானீர்
ஏசியும் பேசியும் இனித்திட வைத்திடும்
ஏந்தலே உங்கள் வாழ்க்கை
ஆசிக்கும் என் உளம் வளம்பெற என்றென்றும்
அறிவுரைத்துரிமையோடு
நேசிக்கும் இத்தினம் பவளநாள் எழுச்சியாய்
நிமிர்வதால் மகிழ்வு கொள்வோம்.

க.கீர்த்தனா
இணைப்பாளர் Blossoms முன்பள்ளி

அகவை வாழ்த்துப்பா

அகவை எழுபத்தைந்தில்
ஆயிரம் வாழ்த்துப்பாக்கள்
செழுமை குன்றா-தமிழின்
செம்மலே வாழ்க நீவிர்

ததும்பிடும் மகிழ்வின் தளிராய்
தரணியாள் தவத்தின் பேறாய்
வளமதை எமக்குத் தந்த
வல்வையே வாழி வாழி

தாயினும் இனிய தந்தை
தளிர்கட்கு இனிய தாத்தா
Blossoms இன் புரிசேர் மேன்மை
புகழ் எங்கும் வாழ்க! வாழ்க...!

Blossoms முன்பள்ளி பெற்றோர்கள்.

பவள விழா வாழ்த்து

முன்பள்ளிப் பிள்ளைகளின் தகப்பனாக "வடலிகள் வானுயரும்" என்ற மகுட வாசகத்தைக் கொண்டு எம் கல்விக்காகவும் எம் தேவைக்காகவும் நாம் உயர்வு பெறவும். உழைத்திட்ட திரு. சுந்தரம் டிவகலாலா ஐயா அவர்களை சகல ஆரோக்கியமும் பெற்று பூரண சுகத்துடன் வாழ வாழ்த்துகிறேன்.

எஸ். தீபிகா (மகள்)
ஆசிரியர் Blossoms முன்பள்ளி,
அரியாலை

தாத்தா வாழ்க

மனமதில் நிறைந்த பாட்டன்
மகிழ்விக்க Blossoms பள்ளி
தினமெமக் கறிவை யூட்டும்
தனமெனக் கொண்டோமும்மை...

இளமையில் அழகுக்கல்வி
அதனுடன் அன்பும் சேர்த்து
அமிழ்தமாய் வழங்கும்-பள்ளிப்
புலமைசேர் தாத்தா வாழ்க!

கலையோடு பண்பும் சேர
கவலைகள் பறந்தே போக
வளமெனத் தந்தீர் Blossoms
வாழ்கவே தாத்தா நீங்கள்
வளமுடன் பலசீர் பெற்று...

Blossoms முன்பள்ளி பேரக்குழந்தைகள்

பேரறிஞன் வாழியவே...

மேன்மையைப் பறை சாற்றி
மேவான புகழ் பரப்பி
சீரான சிறப்பூட்டும்
வடமறவர் ஆட்சியின் கண்
சோராத சொப்பனமாய்
பேரார்வம் கொண்டு ஈன்ற
பேராளன் டிவகலாலா

கற்கையிலே கசடறவே
வித்தையிலே விதந்துரைக்கும்
கொற்றவரின் வழித்தோன்றல்
இலகு மனம் கொண்ட வேந்தல்

பொன் மனமும் பொருள் வளமும்
சொல்லழகும் சுந்தரமும்
சோர்வறியாச் சாதனையும்
ஒருங்கு சேர்ந்த பேரறிஞன்

வானுயரும் வடலிகளும்
பலிதமாகும் நின் கனவும்
வாழ்வதனில் வளம் கொழிக்க
ஆண்டு பல வாழி! வாழி...!

மு.ஜெயமதன்
ஆசிரிய வளவாளர்

(சி-9863)

வாழ்த்துப் பா

வல்வெட்டி வல்லவரே-எம்
வடலிகளின் நாயகரே
எல்லையில்லா ஆனந்தமாய்த்திரியும்-எம்
எழில் கொஞ்சும் மழலைகளின் தலைவன் ஆனவரே

"வடலிகள் வானுயரும்" என்ற வாசகத்தினால் -எம்
வடலிகளான குழந்தைகளை வையம் போற்றிடச் செய்தீர்கள்
அடம் பிடிக்கும் எம் சிட்டுக்களை- மன
அன்போடு அணைத்திடும் உம் கருணை கண்டோம்

வறுமையில் வாடிய அன்னையின் மகனை
வாஞ்சையுடன் அழைத்து வழியும் காட்டினீர்கள்
குடிசையில் வாழும் மக்களின்
குடிகள் உயர்ந்திட அரும்பாடுபடுபவர் நீங்களே

ஆறுதல் எனும் அமைப்பினை நிறுவி-மக்களை
ஆற்றுப்படுத்தும் உம் சேவை வாழ்க!
ஆறுகள் கடலினைச் சேர்வதைப்போல
ஆறாத் துயரடைந்தோரை கரை சேர்க்க வைத்தீர்கள்

பவள விழாவான இந்நாளிலே- உம்மை
பார்புகழ வாழ்த்துகின்றோம் நாமே
நூற்றாண்டு விழா நீங்கள் காண
பலகோடி வாழ்த்துக்கள் கூறுகின்றோம்
என்றென்றும் நாங்கள்

திருமதி.ஸ்டாலின் மயூரி
Blossoms முன்பள்ளி ஆசிரியர்-
கோண்டாவில்.

பவள விழா வாழ்த்து

ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் ஆழமான புதிய திட்டங்களுடன் தனது பணியைத் தொடரும் தந்தையை உளமார வாழ்த்துவதில் பெருமையடைகிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராய், ஆறுதல் நிறுவன நிறைவேற்று அதிகாரியாய், சிறந்த ஒரு சமூக சேவகனாய் ஆளுமையின் பல்வேறு பரிணாமங்களாய் பிரதிபலிக்கும் தங்களுக்கு என்றென்றும் எமது நல்வாழ்த்துக்கள் பற்பல...

ஆண்டாண்டு காலமாய் தொடரட்டும் உமது பணி. சிறக்கட்டும் எமது தேசம் வாழ்க! வாழ்க!

எஸ். கிருபாயினி ஆசிரியர்
Blossoms முன்பள்ளி அரியாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத் தரிசனம்



கலாபூஷணம் கந்தையா இராசநாயகம்
அவர்களுடனான சந்திப்பு

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக மரங்களில் வாத்தியக் கொட்டுகள் கடைந்து தெடுத்து மிருதங்கம், தவில், தபேலா, டோல்கி,டோல்,கெஞ்சிரா, உடுக்கு போன்ற வாத்தியங்களை உருவாக்கி வருகின்றார். தோல் வாத்தியக்கருவிகளை உருவாக்குதல், திருத்துதல் பணிகளோடு நின்றுவிடாது தபேலா, உடுக்கு, மிருதங்கம், டோல்கி, ஆர்மோனியம் போன்ற இசைக் கருவிகளையும் பல மேடைகளில் வாசித்து வருகின்றார். சிறுவயதில் தனது தந்தையாருடன் சேர்ந்து நாட்டுக்கூத்து நாடகங்களுக்கு மத்தளம், உடுக்குப் போன்ற வாத்தியங்களை வாசித்துள்ளார். நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மிருதங்கம் வாசிக்கக் கற்றுக் கொண்டார். யாழ். மாவட்டத்திலுள்ள சில இசைக் குழுக்களுடன் இணைந்து சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்களுக்கு பக்க வாத்தியம் வாசித்துள்ளார். 1944.06.12 ஆம் திகதி இளவாலை பெரிய விளானில் பிறந்த இவர் 2012 இல் கலாபூஷண விருதையும் 2017 இல் கலைமாமணி விருதையும் பெற்றார். இலங்கையில் தோல் வாத்தியங்களை உருவாக்கும் கலைஞர்களில் அதி சிறந்த ஒரு விற்பன்னரான கலாபூஷணம் க.இராசநாயகம் அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனம் திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.

❖ கலைத்துறையில் தாங்கள் எவ்வாறு கால் பதித்தீர்கள்?

நான் கலைத்துறையில் பிரவேசிப்பதற்கு எனது தந்தையார் காரணமாக இருந்தார். எனது தந்தையார் நாட்டுக் கூத்துக் கலைஞராகவும்,மத்தளம்,உடுக்குபோன்ற வாத்தியங்கள் வாசிப்பவராகவும் இருந்த காரணத்தால் சிறுவயதாக நான் இருந்த போது மத்தளம், உடுக்கு வாசிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. கேள்வி ஞானத்தில் பழகிக் கொண்ட நான் நர்டகங்கள் பலவற்றில் மிருதங்கம், டொலக், ஆர்மோனி யம் போன்ற வாத்தியங்களை வாசிக்கத் தொடங்கி நவாலியூர் அருமை நாயகம், சுதுமலை நற்குணசேகரன் (சினிமா நடிகர்) போன்றோரின் நாடகங்கள் சின்னமேளம் என்று அக்காலம் அமைக்கப்பட்ட நாட்டிய நிகழ்வுகளிலும் மிருதங்கம், தபேலா, டோல்கி போன்ற வாத்தியங்களை வாசித்து வந்தேன்.

❖ இசைக் கருவிகளை வாசிக்க எவ்வாறு கற்றுக் கொண்டீர்கள்?

சிறு வயதில் இருந்து கேள்வி ஞானத்தில் தான் மேற்கண்ட வாத்தியங்களை வாசித்து வந்தேன். பின்னர் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மிருதங்கம் வாசிக்கக் கற்றுக் கொண்டேன். நான் இசைத் தொழிலில் ஈடுபட்டு கேட்டு போய் விடுவேன் என எண்ணிய எனது சிறிய தந்தையர் எனது கலைத்துறைக்கு முற்றுப் புள்ளி வைத்து படிப்பில் கவனம் செலுத்துமாறு என்னை வழி நடத்தினார்கள். இதனால் எனது கலைப் பயணத்தில் தடங்கல் ஏற்பட்டன. இருந்தும் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த சில இசைக் குழுவினருடன் இணைந்து தபேலா, டோல்கி போன்ற வாத்தியங்களை வாசித்து வந்தேன். இந்து வைராக்கிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நான் 1990 இல் கிறிஸ்தவனாக ஞான ஸ்தானம் பெற்றுக் கொண்டேன். இதன் காரணமாக கிறிஸ்தவ சபைகளில் கிறிஸ்தவப் பக்திப் பாடல்களுக்கு மட்டும் வாத்தியங்கள் வாசிப்பது என்று தீர்மானம் எடுத்துக் கொண்டேன். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷக் கூட்டங்கள், இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்து வருகை தந்த சுவிசேஷப் பாடகர்களுடைய கிறிஸ்தவ கீதங்களுக்கு தபேலா வாசிக்க இறைவன் எனக்கு கிருபை கொடுத்தார். தற்போதும் இதையே பின்பற்றி வருகிறேன்.

❖ இந்தியாவில் இருந்து இசைக் கருவிகள் வருமிடத்து யாழ்ப்பாணத்தில் எவ்வாறு இசைக் கருவிகள் செய்தீர்கள்?

எனது இளம் வயதிலே வாத்தியங்[illegible] உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. இந்தியாவில் இருந்து தான் தோல் வாத்தியக் கருவிகள் வந்தன. இருந்தும் யாழ்ப்பாணத்தில் எனது பேரனார் (எனது தாயின் மாமன்) இன்னும் 4 பேர்கள் தான் மிருதங்க மூட்டுகள் அமைப்பார்கள். மிருதங்ககொட்டு ஒரு ஆசாரியார் மட்டுமே உருவாக்குவார். அக்காலத்தில் மிருதங்கம் வாசிப்போர் மிகக் குறைந்த எண்ணிகையினரே. நான் இந்துஸ்தானி வாத்தியங்களான தபேலா, டோல்கி வாத்தியங்களிலே தான் அதிக நாட்டமுள்ளவனாக இருந்தேன். அதன் பயனாக கொழும்பில்வசித்த பெரோ என்பவரிடம் வாத்தியத்திருத்துக்காகச் சென்று அவர் எப்படி மூட்டுகளை உருவாக்குகிறார் என்பதை உன்னிப்பாககண்ணோக்கினேன். அதன் பயனாக எனது பழுதடைந்தவாத்தியங்களுக்கு நானே மூட்டுகள் செய்து சாதமும் இட்டு பெரிய வெற்றியைக் கண்டு கொண்டேன் இதேபோல் எனது பாட்டனார் மத்தளம் மூட்டுவதைப் பார்த்து மிருதங்க மூட்டும் செய்து வெற்றி கண்டேன். சிறு வயது

முதல் தச்சுத் தொழிலிலும் ஆர்வ முள்ளவனாக இருந்த காரணத்தால் டோல்கி, மிருதங்கம், தபேலாஜில் போன்ற வாத்தியங்களின் கொட்டுகளை சிறு இட்டையில் இட்டு சுத்தமான அள வுப்பிரமாணங்களுடன் கடைந்து உட்பக்கம் கோதி எடுத்து வாத்தியங்களைச் செய்துள்ளேன். பின்னர் கெஞ்சிரா, உடுக்கு, உறுமி போன்ற வாத்தியங்களையும் செய்துள்ளேன். அதுமட்டுமல்ல எலெக்ரிக் கிற்றார் கூட உருவாக்கினேன்.

• மிருதங்கத்தில் எச்ச சுருதி, தக்கு சுருதி என இரண்டு வகை உண்டு. அளவுகள், சுருதிகள் வித்தியாசமுண்டு. பலா, தென்னை, கொண்டல் மரங்களில் கொட்டுக்கள் கடைந்து ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் போன்றவற்றால் மூட்டமைத்து கீச்சுக் கிட்டானை அரைத்து சோற்றுடன் பிசைந்து வலந்தரையில் நடுவில் சாதம் அமைக்க வேண்டும்.

❖ நீங்கள் கலைத்துறையில் ஆற்றும் பணிகள் பற்றி?

எனது 35 வருட கால கலைத்துறை தொடர்புகள் பற்றி சொல்ல வேண்டுமானால் எண்ணில்லா மிருதங்கம், தபேலா, டோல்கி கொட்டுகள் என்பன செய்து கலைஞர்களுக்கு கொடுத்துள்ளேன்.

அந்த வகையில் மிருதங்க ஆசான்களாகிய செல்லத்துரை, பாக்கிய நாதன், சோமேஸ்வரசர்மா, மகேந்திரன், சிதம்பரநாதன் போன் றோர்களுக்கும் அவர்தம் மாணவர்களுக்கும் மற்றும் அநேக மி தங்கம் வாசிப்போர்க்கும் வெளிநாட்டில் வசிக்கும் மிருதங்கம் வாசிப் போருக்கும் மிருதங்கம் செய்து கொடுத்துள்ளேன். மற்றும் உடுக்கு, கெஞ்சிரா போன்ற வாத்தியங்கள் பல என்னால் செய்து கொடுக்கப்பட்டன.

இது தவிர யாழ்.நகரில் தவில் கலைஞர்களுக்கு தவில் கொட்டுகள் பல கடைந்து கொடுத்துள்ளேன். என்னால் கடையப்பட்ட தவில் கொட்டுகள் பல தவில் வித்து வான்களால் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு மாணவர்களுக்கு தோல் வாத்தியங்கள், அவற்றின் அளவுகள், அதன் செய்முறை பற்றிய விடயங்கள் பற்றிய தரவுகள் பற்றி விபரமாகச் சொல்லிக் கொடுத்துள்ளேன்.

அந்த வகையில் இராமநாதன் நுண்கலைக்கழகம், கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழக மாணவன் இரத்தினசிங்கம் அமரகுமார் என்பவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாணத்து இசைக்கருவிகள் தயாரிப்பும் தொழில் நுட்பமும் என்னும் நூலுக்கு வாத்தியங்கள் செய்யும் முறை, அவற்றின் அளவுகள் போன்ற விளக்கப்படங்களுடன் அந்த நூலுக்குப் பல தரவுகளை கொடுத்துள்ளேன். இது போன்ற நூல் இதுவரை யாழ்ப்பாணத்தில் வெளிவரவில்லை. இரத்தின சிங்கம் அமரகுமார் அந்த வகையில் பெருமைக்குரியவர் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

❖ பெற்ற விருதுகள்?

எனது இசைக்கருவிகள் 2004 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாண கண்காட்சியில் முதல் மூன்று விருதுகளையும் பணப்பரிசையும் பெற்றுத் தந்தன. அவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து என்னுடைய ஏனைய கருவிகளே [illegible] பெற்றுத்தந்தன.

✸2012 ஆம் ஆண்டுயாழ். மாவட்டக் கண்காட்சியில் 06 விருதுகள்.

✸2012ஆம் ஆண்டு கலாபூஷணம், கலை கலாசார அரச விருது.

✸2012ஆம் ஆண்டு தேசிய அரும் கலைகள் பேரவையால் 02 விருதுகள்.

✸2013ஆம் ஆண்டுயாழ்மாவட்டக் கைப்பணிக் கண்காட்சியில் 01 விருது.

✸2014ஆம் ஆண்டு தேசிய அருங்கலைகள் பேரவையால் 01 விருது.

✸2014ஆம் ஆண்டு யாழ் மாவட்டக் கண்காட்சியில் 04 விருதுகள்.

✸2014ஆம் ஆண்டு அரியாலை காந்தி சனசமூக நிலையத்தால் **கலாபாணு** விருது.

✸2017 ஆம் ஆண்டு சர்வோதயம், தேசோதயம் வழங்கிய **கலாமணி** விருது

2017 ஆம் ஆண்டு நெல்லியடி மகா வித்தியாசாலை கண் காட்சியில் 02 விருதுகள்.

என்னைப்பற்றி வெளிவந்த நூல்கள்

1. **கலைஞர் விபரத்திரட்டு**- யாழ்ப்பாண மாவட்டம்.
2. **கலைஞானம்**- நல்லூர் பிரதேச கலைஞர் விபரத்திரட்டு
3. **கலாபூஷணம்**- அரச விருது விழா மலர்
4. **கைவினைக்கதிர்**- யாழ் மாவட்ட கைப்பணி அபிவிருத்தி சங்க மலர்

❖ உடுக்குக் கலை பற்றி?

உடுக்குக்கலையைப்பற்றிசொல்ல வேண்டுமானால் மிருதங்கத்தில் எச்ச சுருதி தக்கு சுருதி இருப்பது போல உடுக்கிலும் சிற்றுடுக்கு, பேருடுக்கு எனஇரு வகை உள்ளன. இதன் அளவுகளால் நாதங்கள் வேறுபடுகின்றன. சவ்வுகளினால் மூட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. இது தமிழனுடைய பாரம்பரியமான வாத்தியம். கரகம், காவடி, வடமோடி, தென் மோடி நாட்டுக்கூத்துகள், கும்மி, கோலாட்டம் போன்ற இசை நிகழ்ச்சிகளில் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது. இதை வாசிக்கும் போது சில அட்சரப்புரட்டல்களைச் சேர்த்து வாசித்தல் மிகவும் இனிமையாக இருக்கும்.

❖ தோல் வாத்தியக் கருவிகள் உருவாக்கும் போது ஏற்படும் சவால்கள்?

இறுதியாக தோல் வாத்தியக் கருவிகள் உருவாக்க முக்கியமாகத் தேவைப்படுவது மரக் கொட்டுகள். இதில் பலாமரம் முக்கிய பங்கு பெறுகின்றது. தற்போது பலாமரத்துக்குப் பெரிய தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏற்பட்டுள்ளது. மரம் விற்கும் மரக்காலைகளில் இருந்து மரத்தை வாங்கி வீட்டுக்குக் கொண்டு வருவதில் அரசாங்க அனுமதி பெற வேண்டும். இதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

என்னைப்பொறுத்தவரை இத் தொழிலைக் கற்றுக் கொடுக்க நான் தயாராய் உள்ளேன். இத்தொழிலை ஒரு நாளிலோ ஒரு வாரத்திலோ பழகிவிட முடியாது. நான் எப்படி செய்கிறேன் என்பதை உற்றுக் கவனிக்க வேண்டும். ஆயுதங்கள் எப்படிப் பாவிக்கின்றேன் என்பதைக் கவனிக்க வேண்டும். பலருக்கு பொறுமையுடன் இருந்து இத் தொழிலைப் பழக மனம் இல்லை. இதோடு நேரத்தை வீணடிப்பதை விட மேசன் வேலை, கூலி வேலை செய்தால் 1500 ரூபாவுக்கு மேல் சம்பாதிக்கலாம் என எண்ணுகிறார்கள். எங்களிடம் வேலை பழகும் போது பழக வரு பவர்கள் எதிர் பார்க்கும் ஊதியம் பெற முடியாது.

இத் தொழிலானது ஊதியத்துக்கு மட்டுமல்ல கலைப் பணிக்கும் செய்யும் சேவையுமாகும். தற்போது நான் செய்யும் இப்பணியானது என்னுடனே முடிந்து விடும். இதை செய்ய வருபவர்களாய் இருந்தால் சந்தோஷப்படுவேன். பழக வராமல் இருப்பார்களானால் நான் என்ன செய்ய முடியும். அருமந்த இசைக்கருவிகள் செய்ய எதிர் காலத்தில் யார் உருவாக்குவார்கள் என்பதே எனது மனதின் ஆதங்கம்.

கலையோடு ஒருங்கிணைந்து தோல் வாத்தியக் கலைஞர்கள் ஒரு சிலரையும் கொட்டுகள் மரத்தில் கடைந்தெடுப்பதில் ஒரு சிலரையும் உருவாக்கி உள்ளேன். தற்போது நான் வாத்தியக் கொட்டுகளை (மிருதங்கம்,தவில், டோல், டொல்கி, உடுக்கு, கெஞ்சிரா) தனித்து நின்றே செய்து வருகிறேன். மிருதங்க மூட்டு அமைத்தவர்கள் சிலர் இத் தொழிலைக் கைவிட்டுவிட்டார்கள் மிகவும் வேதனைக்குரிய விடயம்.

''வாழ்க இசைக்கலை வளர்க இசைக்கருவிகள்''

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org/aavanaham.org

பகீகம் - 11

ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்து சேவையை மீளவும் ஆரம்பியுங்கள்

வேணாவில் கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள வேணாவில் கிராமத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் இதுவரை மீளவும் இயங்காத நிலையில் காணப்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேணாவில் கிராமத்தில் கடந்த 1984 ஆம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்டு மக்கள் குடியேறிய நிலையில் இப்பகுதியில் உள்ள சுமார் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் அடிப்படை சுகாதார தேவைகளைக் கருதி நவீன வசதிகளைக் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டதுடன், மாதத்தில் இரண்டு தடவைகள் நடமாடும் வைத்திய சேவைகளும் நடைபெற்று வந்தன.

கடந்த 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக இங்குள்ள மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்த நிலையில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடமும் முற்றாக சேதமடைந்தன.

இதன் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் முழுமையாக மக்கள் குடியேறிய நிலையில் சேதமடைந்த நிலையில் காணப்படும் ஆரம்ப சுகாதார நிலையம் இதுவரை புனரமைக்கப்படாமலும் மீள ஆரம்பிக்கப்படாமலும் காணப்படுகின்றது.

இதனால் இங்குள்ள கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கைவேலி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அதிகளவான மக்கள் தொகை வாழும் இப் பிரதேசத்தின் தேவை கருதி அமைக்கப்பட்ட குறித்த ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்து அதனை மீள ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

புதுக்குடியிருப்பு காணி விடுவிக்காவிடின் தொடர் போராட்டத்தில் குதிப்போம்

காணி உரிமையாளர்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

தமது சொந்தக் காணிகள் 3 மாதங்களில் விடுவிக்கப்படும் என இராணுவத் தினரால் எழுத்துமூலம் உறுதி வழங்கப்பட்ட போதிலும் 7 மாதங்கள் கடந்தும் விடுவிக்கப்படவில்லை என புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதியில் இராணுவ வசமுள்ள விடுவிக்கப்படாத காணியின் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த தமது காணிகளை விடுவிக்குமாறுகோரி கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் ஒரு மாதங்களுக்கு மேலாக காணிகளில் அமைந்துள்ள இராணுவமுகாம் முன்பாக உரிமையாளர்களால் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாக மார்ச் மாதம் 4ஆம் திகதி 7.25 ஏக்கர் காணிகள் முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டதோடு மிகுதிக் காணிகள் மூன்று மாதத்திலும் இன்னும் ஒரு தொகுதிக் காணிகள் 6மாதங்களிலும் விடுவிக்கப்படும் என இராணுவத்தால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கமைய மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க போராட்டம் தற்காலிகமாக மக்களால் கைவிடப்பட்டிருந்தது. இருந்தும் 7 மாதங்கள் நிறைவுற்றுள்ள போதிலும் இராணுவம் தமக்கு வழங்கிய உறுதி மொழியையும் மீறி இதுவரையில் தமது காணிகளை விடுவிப்பதற்கான எந்தவித முயற்சிகளையும் எடுக்கவில்லை என கவலை தெரிவிக்கும் காணி உரிமையாளர்கள் மாறாக இராணுவம் தமது காணிகளில் அமைந்துள்ள இராணுவ முகாமை அழகுபடுத்தும் வேலைகளில் ஈடுபடுவதாகவும் இராணுவ முகாமில் பல அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதாகவும் கவலை வெளியிட்டனர்.

நல்லாட்சி அரசில் தாம் ஏமாற்றப்படுவதாகவும் தமது போராட்டத்தை கைவிடுமாறுகோரி மிகுதிக் காணிகளை விரைவில் பெற்றுத் தருவதாகக் கூறிய உறுதிமொழி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தமக்கு உறுதிமொழிகளை வழங்கியவர்கள் விரைவில் காணிகளை விடுவிக்காவிட்டால் மீண்டும் தொடர் போராட்டத்தில் குதிக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

கிணற்றில் நீர் இல்லை

மயான கிரியைகள் செய்வதற்கு ஆலய கிணற்றில் நீர் பெறுகின்றோம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தேராவில் கிராம அலுவலர் பிரிவில் கடந்த வருடம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2016 இல் அமைக்கப்பட்ட கிணற்றில் நீர் இல்லை எனவும் அதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், கடந்த வருடம் தேராவில் இந்து மயானம் 917497ரூபா செலவில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றது. இதன்போது குறித்த பகுதியில் கிணறு ஒன்று வெட்டிக் கட்டப்பட்டது. இருப்பினும் உரிய முறையில் கிணற்றின் அமைவிடத்தை தெரிவு செய்யாத காரணத்தால் கிணறு கட்டப்பட்டு ஒரு மாத காலத்திலேயே குறித்த கிணற்றில் நீர் இல்லாது போய் விட்டது.

இதனால் மயானத்தில் கிரியைகள் செய்வதற்கு வேறு இடத்திலிருந்து நீரை கொண்டுவரவேண்டியுள்ளது. அதனைவிட மயானக் கிரியைகளுக்கு ஆலய கிணற்றிலேயே நீர் பெறுகின்றனர். இது எமது கிராமத்துக்கு பொருத்தமற்ற செயல். எனவே குறித்த கிணற்றை ஆழமாக்கித்தருமாறு மக்கள் கோருகின்றனர்.

இதனைவிட தமது பகுதியில் தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் நீர்த்தாங்கிகள் கொண்டுவந்து வைக்கப்பட்டும் நீர் வழங்கப்படுவதில்லையெனவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

விவசாயிகளுக்கு நிதி மானியம் வழங்குவதற்கான பதிவுத் திகதிகள்

பூநகரி கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

பூநகரி கமநல சேவை நிலைய அதிகார எல்லைக்கு உட்பட்ட கமக்கார அமைப்புக்களின் 2017/2018 காலபோகப் பயிர்ச்செய்கை கூட்டத் தீர்மானங்களுக்கு இணங்க தற்போது பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பூநகரி கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.இரகுநாதன் தெரிவித்துள்ளார்.

இதன் பிரசுரம் 2017/2018 கால போகப் பயிர்ச்செய்கைக்குரிய உரங்களை கொள்வனவு செய்வதற்கான நிதி மானியம் வழங்குவதற்கான பதிவுகள் பின்வரும் கால அட்டவணைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட இருப்பதனால் ஏற்கனவே 2016/2017 காலபோகம் அல்லது 2017 சிறுபோகத்தில் நிதி மானியம் பெற்றவர்கள் தங்கள் தகவல்களை சரிபார்த்து கையொப்பமிடும் பொருட்டு தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்கு புத்தகம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான ஏக்கர்வரி மூலப் பிரதி என்பவற்றுடனும் இவ்வருடம் புதிதாக நிதி மானியம் பெற விண்ணப்பிப்போர் தே.அ. அட்டை, வங்கிப்புத்தகம், ஏக்கர்வரி என்பவற்றின் தெளிவான பிரதி, ஏக்கர் வரியின் மூலப்பிரதி மற்றும் கடவுச் சீட்டு அளவு புகைப் படம் என்பவற்றுடன் குறித்த தினங்களில் தங்கள் கமக்கார அமைப்பு பகுதிகளில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். இதுவரை 2017 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி செலுத்தாதோர் குறித்த தினங்களில் அந்தந்த பகுதிகளில் செலுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் ஞானி மடம், ஆலங்கேணி, மட்டுவில் நாடு மேற்கு, வாடியடி ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பதிவுகள் பொது மண்டபத்தில் நடைபெறும்.

இதேவேளை ஞானி மடம், ஆலங்கேணி, மட்டுவில் நாடு மேற்கு, வாடியடி ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பதிவுகள் பொது மண்டபத்தில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (2-84)

மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைப்பு

0

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட பத்து மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அந்த வகையில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை துணுக்காய் வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் மற்றும் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிமனை உயர் அதிகாரிகள், ஏனைய அதிகாரிகள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

சுவிட்சர்லாந்து ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோவில் நிர்வாகத்தினரால் தாயக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஒட்டுசுட்டான் ஒலுமடு கிராமத்தைச் சேர்ந்த தந்தையை இழந்த 25 மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்குமுகமாக புத்தகப்பை, கற்றல் உபகரணங்கள் என்பன சுவிட்சர்லாந்து கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் நிர்வாகத் தலைவர் கணேச குமாரினால் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

உடைமையில் கஞ்சா வைத்திருந்த சந்தேகத்தில் நான்கு பேர் கைது

வவுனியா சாம்பல் தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த நான்கு நபர்களை வவுனியா நெளுக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மன்னார் பகுதியிலிருந்து கூடுவந்தபுலவு நோக்கி பயணித்த நபர்களிடம் கேரளக் கஞ்சா இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நெளுக்குள பொலிஸ் பொறுப்பதிகாரி எ.எம்.எஸ். அத்தநாயக்க தலைமையிலான பொலிஸ் சாஜன்ட் திலக ரத்ன, பொலிஸ் கொஸ்தாபில்களான நிறோசன், சுரவீர ஆகிய குழுவினர் குறித்த நபரை சாம்பல் தோட்டம் பகுதியில் வைத்து சோதனையிட்ட போது உடைமையுடன் மறைத்து வைத்திருந்த கேரளக் கஞ்சாப் பொதிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர்கள் 24,26, 27,39 வயதுடையவர்கள் எனவும் எங்கிருந்து இவர்கள் கஞ்சாவைப் பெற்றுக் கொண்டார்கள் என்ற அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா பொலிஸ் நிலையத்தினூடாக வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாகவும் நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

அடுத்தவாரம் தமிழ்நாட்டில் 2 புயல்கள் உருவாக வாய்ப்பு

இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

(சென்னை)

அடுத்த வாரம் 7 ஆம் திகதியும் 12 ஆம் திகதியும் வங்கக் கடலில் 2 புயல்கள் உருவாக வாய்ப்பு உள்ள தாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தென் மேற்கு பருவமழையால் நாடு முழுவதும் நல்ல மழை பெய்துள்ளது. தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் மட்டுமே தென் மேற்கு பருவ மழை பெய்யும். ஆனால் தற் போது தமிழகம் முழுவதும் வழக்கத்தை விட அதிக அளவு மழை பெய்துவருகிறது.

இந்நிலையில் டில்லியில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையம் வடகிழக்கு பருவ மழை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை யில் தமிழகத்தை குறிப்பாக சென்னையை 2 புயல்கள் தாக்கும் என்று தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை மையம் வெளியிட் டுள்ள அறிக்கையில்,

இந்த வார இறுதியில் வட கிழக்கு பரு்வ மழை தொடங்குகிறது. வருகிற 7 ஆம் திகதியும் 12 ஆம் திகதி யும் வங்கக் கடலில் 2 புயல் கள் உருவாக வாய்ப்புள் ளது.

இரு புயல்களும்கடலூருக் கும். ஆந்திராவின் நெல்லூருக் கும் இடையே சென்னையை ஒட்டியுள்ள கடற்கரை பகுதி யில் கரையை கடக்கும். அப் போது பலத்த காற்றுட்ன் மழை கொட்டும் என்பதால் அதிகளவு சேதம் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளது. (8)

மருந்து தெளிக்கும்போது 18 விவசாயிகள் பலி

விசாரணைக்கு உத்தரவிட்டது மகாராஷ்டிர அரசு

(மும்பை)

பயிர்களுக்கு பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும் போது 18 விவசாயிகள் உயி ரிழந்தது தொடர்பாக விசா ரணை நடத்த மகாராஷ்டிர அரசு உத்தரவிட்டுள்ளது.

விவசாயிகள் பயிர்களு க்கு வீரியம்மிக்க பூச்சிக் கொல்லி மருந்தினை தெளிக் கும்போது, அதில் இருந்து வெளியாகும் அதிக நச்சுத் தன்மை கொண்ட வாயு கடு மையான பாதிப்பை ஏற்ப டுத்துகிறது.

மகாராஷ்டிர மாநிலம் யவத்மால் மாவட்டத் தில் கடந்த சில வாரங்களில் மட்டும் பருத்தி பயிர்களுக்கு மருந்து தெளித்த விவசாயிக ளில் 18 பேர் பலியாகி இருக் கின்றனர். 467 பேர் பாதிக் கப்பட்டு வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளனர். இது விவ சாயிகளிடையே கடும் அதிர் ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக கூடுதல் தலைமை செயலாளர் (உள் துறை) சுதீர் ஸ்ரீவஸ்தவா தலைமையில் விசாரணை நடத்த முதலமைச்சர் தேவே ந்திர பட்னாவிஸ் உத்தர விட்டுள்ளார். மேலும் உயிரி ழந்த விவசாயிகளின் குடும் பத்திற்கு தலா ரூ.2 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

இவ்விவகாரத்தில் அனை த்து காரணிகளும் முழுமை யாக ஆய்வு செய்யப்படும். குற்றத்திற்கு காரணமான வர்கள் மீது கடும் நடவடி. க்கை எடுக்கப்படும். பூச்சிக் கொல்லி மருந்துகளை பாதுகாப்பாக பயன்படுத்து வது தொடர்பாக விழிப் புணர்வு பிரசார்ரங்கள் நடத்தப் படும்.

இலவசமாக மாஸ்க்கு கள் வழங்கப்படும்' என்றும் பட்னாவிஸ் கூறியுள்ளார்.

கலாம்ப் தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகள் மாவ ட்ட ஆட்சியரைச் சந்தித்து மனு அளித்துள்ளனர். அதில், உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு 10 இலட் சம் ரூபாய் வழங்க வேண்டும் என கூறியிருந்தனர். (8)

அமெரிக்க கொலை குவியல் ஆயுதம்

(லாஸ்வேகாஸ்)

அமெரிக்க ஹோட்டலில் தாக்குதல் நடத்திய கொலையாளியின் வீடு மற்றும் ஹோட்டல் அறையில் துப்பா க்கிகள், வெடிகுண்டுகள் மற்றும் குண்டுகளை வெடிக்க செய்யும் எலெக்ட்ரோனிக் கருவிகள் குவியல் குவியலாக சிக்கின.

அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் உள்ள பிரபல ஹோட்டலில் நடந்த இசை நிகழ்ச்சியின் போது ஒருவர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 59 பேர் பலியானார்கள். 500-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்த னர். ஹோட்டல் மாடியில் இருந்து துப்பாக்கியால் சுட்ட அந்த நபரை பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

1000 ஆண்டு பழைமையான சீன கோப்பை

ரூபாய் 245 கோடிக்கு ஏலம்

(ஹொங்கொங்)

கடந்த 1000 ஆண்டுகளு க்கு முன்பு சீனாவில் தயா ரிக்கப்பட்ட ஒரு சிறிய கோப்பை ரூ.245 கோடிக்கு (37.7 மில்லியன் டொலர்) ஏலம் போனது.

இது சாங் மன்னர் ஆட் சிக் காலத்தில் அதாவது கி.பி. 960-1127 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.

இந்த கோப்பை ஹொங் கொங் கில் சோத்பீ மையத் தில் ஏலம் விடப்பட்டது. இதை வாங்கியவர் யார் என்ற விபரத்தை வெளியிட அந் நிறுவனம் மறுத்து விட்டது.

இந்தக் கோப்பை தொடக்க விலையாக ரூ.66 கோடி நிர்ணயிக்கப்பட்டது. ஏலம் தொலைபேசி மூலம் கேட் கப்பட்டது.

போட்டி கடுமையாக இருந்ததால் ஏலம் 20 நிமிட நேரம் நடந்தது.

இதற்கு முன்பு கடந்த 2014ஆம் ஆண்டு மிங் மன்னர் ஆட்சிக்காலத்தில் தயாரிக்கப்பட்ட சீன கோப்பை அதிகபட்சமாக ரூ.233 கோடிக்கு ஏலம் போனது. தற்போது அந்த சாத னையை இக்கோப்பை முறியடித்துள் ளது. (8)

பாகிஸ்தானின் அத்துமீறல் தொடர்கிறது

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் படை யினர் நேற்றுக் காலை அத்து மீறி தாக்குதல் நடத்தினர் என பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநில த்தின் பூஞ்ச் பகுதியில் பாது காப்பு படையினர் நேற்றுக் காலை ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த னர். அப்போது டிக்வார் செக் டாரில் பாகிஸ்தான் படையி னர் திடீரென துப்பாக்கி சூடு நடத்தினர்.

இது தொடர்பாக பாது காப்பு படையினர் கூறுகை யில், பூஞ்ச் மாவட்டம் டிக் வார் செக்டாரில் உள்ள நாகர் கோட் பகுதியில் படைவீரர் கள் ரோந்து பணியில் ஈடு பட்டு கொண்டிருந்தனர். அப்போது பாகிஸ்தான் படை யினர் அத்துமீறி துப்பாக்கி யால் சுடத் தொடங்கினர். இந்திய வீரர்களும் அவர்களு க்கு தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர். ஆனால், சேத விபரங்கள் பற்றிய தக வல்கள் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களு க்கு முன் ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தான் படையினர் அத்துமீறி தாக்குதல் நடத்தி யதில் மூன்று சிறுவர்கள் பலியாகினர். இதேபோல் தொடர்ந்து பாகிஸ்தான் படையினர் அத்துமீறி தாக்கு தலில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (8)

ரோஹிஞ்யாக்கள் விவகாரத்தில் அதிருப்தி

சூகியின் கௌரவம் பறிப்பு

(லண்டன்)

ரோஹிஞ்யா முஸ்லிம் மக்கள் விவகாரத்தில் சூகி யின் மீது அதிருப்தி அடை ந்த ஒக்ஸ்போர்ட் நகர கவு ன்சில் அவருக்கு வழங்கிய 'பிரீடம் ஒப் ஒக்ஸ்போர்ட் கௌரவத்தை பறித்து ஒரு மனதாக தீர்மானம் நிறை வேற்றியுள்ளது.

மியன்மார் நாட்டில் ரோஹி ஞ்யா முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு, அந நாட்டின் நடைமுறைத் தலைவர் சூகி சரியான நட வடிக்கை எடுக்கவில்லை என்ற அதிருப்தி சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உலக பிரசித்தி பெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அமை ந்துள்ள ஒக்ஸ்போர்ட் நகரம் அவருக்கு 'பிரீடம் ஒப் ஒக்ஸ் போர்ட்' என்ற உன்னத கௌர வத்தை வழங்கி இருந்தது. மியன்மாரில் ஜனநாயக உரிமைகளுக்காக அவர் நடத்திய போராட்டத்தை அங்கீகரித்து இந்த கௌர வத்தை ஒக்ஸ்போர்ட் நகர கவுன்சில் அளித்தது.

ஆனால் இப்போது ரோஹி ஞ்யா முஸ்லிம் மக்கள் விவ காரத்தில் அவர் மீது அதி ருப்தியடைந்து, ஒக்ஸ்போ ர்ட் நகர கவுன்சில் அவருக்கு ஏற்கனவே வழங்கிய கௌர வத்தை பறித்து ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது.

இப்படி ஒரு நடவடிக் கையை ஒக்ஸ்போர்ட் நகர கவுன்சில், இதுவரை மேற் கொண்டது இல்லை. இதுவே முதல் முறை என தகவல் கள் கூறுகின்றன. (8)

டில்லி உயர்நீ நுழைந்த தமி

(டில்லி)

டில்லியில் உச்ச நீதிமன்ற வளா கத்துக்குள் நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக விவசாயிகளை பொலிஸார் கைது செய்தனர்.

தமிழக விவசாயிகள் டில்லியில் நேற்று முன்தினம் 80 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போராட்டக்குழு தலைவர் அய்யாக் கண்ணு தலைமையில் 10இற்கும் மேற்பட்ட விவசாயிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

ஹோட்டல் தாக்குதல்;

லயாளி வீட்டில் ல் குவியலாக ங்கள் சிக்கின



அவரது பெயர் ஸ்டீபன் பட்டாக் (வயது64) என்பதும், அந்த ஹோட டல் அறையில் அறை எடுத்து தங் கியிருந்ததும் விசாரணையில் தெரியவந்தது.

தாக்குதல் நடத்திய நபர் தங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்தான் என ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு கூறியி ருந்தது. ஆனால், இந்த தாக்குதலை நடத்தியவருக்கு எந்த சர்வதேச தீவிர வாத அமைப்புடனும் தொடர்பு இருப் பதாக தெரியவில்லை என்று லாஸ் வேகாஸ் நகர பொலிஸார் தெரிவித் திருந்தனர்.

இந்நிலையில், கொலையாளி ஸ்டீபன் பட்டாக் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் பொலிஸார் சோதனை நடத்தினார்கள்.

அங்கு 23 துப்பாக்கிகள், ஏராளமான தோட்டாக்கள் சிக்கின. மெஸ்குயிட்டில் உள்ள அவனது வீட்டில் 19 துப்பாக் கிகள், வெடிகுண்டு கள் மற்றும் குண்டுகளை வெடிக்க செய்யும் எலெக்ட் ரோனிக் கருவிகள் குவியல் குவியலாக சிக்கின. அவற்றை பொலிஸார் பறிமுதல் செய் தனர்.

மேலும் அவனது காரில் 'டேன்னரிட்' எனப்படும் வெடி பொருட்கள், அமோ னியா நைட்ரே எனப்படும் ஒரு வகை உரம் போன் றவை கைப்பற்றப்பட்டது. இதை வைத்து வெடிகுண்டு தயாரிக்க முடியும் என நிபு ணர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகவலை லாஸ் வேகாஸ் செரீப் ஜோசப் லம்பார்டோ தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும் போது, இச்சம்பவம் குறித்து விவாதிக்க 4 குற்றப் பிரிவு தனிப்படைகள் அமைக் கப்பட் டுள்ளன. அவர்கள் பட்டாக் தங்கியிருந்த ஹோட் டல்அறைமற்றும்அவரது உற வினர் வீடுகளில் விசாரணை யும், சோதனையும் நடத்தி வருகின்றனர்" என்றார். (8)

தீவிரவாத இயக்கங்களுடன் பாக். நெருக்கமாக உள்ளது

அமெரிக்க கடற்படை உயரதிகாரி தெரிவிப்பு

(வோஷிங்டன்)

பாகிஸ்தானின் முக்கிய உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. தீவிரவாத இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ள தாக அமெரிக்க கடற்படை இணை தலைவர் ஜெனரல் ஜோசப் டன்போர்ட் தெரிவித் துள்ளார்.

அமெரிக்காவின் வோஷிங் டன் நகரில் செனட் ஆயுத சபை கமிட்டி நேற்று முன்தி னம் கூடியது. இதில், பாது காப்புத் துறையின் பல்வேறு அதிகாரிகள் கலந்து கொண் டனர். இக்கூட்டத்தில், தீவிரவாத இயக்காங் களின் செயற்பாடுகளை கட்டுப்படுத் துவது மற்றும் ஆப்கானிஸ் தான் உள்ளிட்ட நாடுகளில் அமெரிக்க இராணுவம் பாது காப்பு பணியில் ஈடுபடுத்தப்ப ட்டுள்ளது குறித்து விவாதிக் கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய கட ற்படை இணைத்தலைவர் ஜெனரல் ஜோசப் டன் போர்ட், "எனது பார்வையில் பாகிஸ் தானின் முக்கிய உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐக்கு தீவிரவாத இயக்காங்களு டன் தொடர்பு இருப்பது தெளி வாக இருக்கிறது" என்று பேசி னார்.

இதற்கு முன்னதாகவும், அமெரிக்க உயரதிகாரிகள் பலர், தலிபான், ஹக்கானி உள்ளிட்ட பல தீவிரவாத இயக் காங்களுக்கு ஐ.எஸ்.ஐ அதிகா ரிகளுடன் தொடர்பு இருப்ப தாக கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (8)

குர்மீத் ராம் ரகீம் சிங்கின் வளர்ப்பு மகள் கைது

(அமிர்தசரஸ்)

பாலியல் பலாத்கார வழக் கில் தண்டனை அனுபவித்து வரும் அரியானா சாமியார் குர்மீத் ராம் ரகீம் சிங்கின் வளர்ப்பு மகள் ஹனி பிரீ த்தை பஞ்சாப் மாநிலத்தில் அரியானா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இதற்கிடையில் ரகசிய இடத்தில் பதுங்கி இருக்கும் ஹனி பிரீத் பிரபல ஆங்கில ஊடகத்துக்கு சமீபத்தில் பேட்டி அளித்திருந்த நிலை யில் அரியானா அல்லது டில்லி உயர் நீதிமன்றில் அவர் சரணடையப் போவ தாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

இந்நிலையில், பஞ்சாப் மாநிலம், ஜிராக்பூர்-பாட்டி யாலா சாலையில் ஹனி ப்ரீத்தை கைது செய்ததாக அரியானா மாநில பொலிஸ் டிஜிபி சாந்து தெரிவித்துள்ளார்.

ஹனி பிரீத்துடன் இன் னொரு பெண்ணும் கைதா னதாக அவர் குறிப்பிட்டுள் ளார். (8)

அமெரிக்க – கியூப உறவில் விரிசல்

15 கியூபா தூதர்களை வெளியேற்றியது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள கியூபா தூதரக அலுவல கங்களில் பணிபுரியும் 15 அதிகாரிகள் வெளியேற்றப் பட்டனர். இத்தகவலை அமெ ரிக்க வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும், கியு பாவுக்கும் இடையே 45 ஆண்டுகளுக்கு பின் மீண் டும் தூதரக உறவு ஏற்பட்டது.

இந்த நிலையில் கியூபா தலைநகர் ஹவான்னாவில் அமெரிக்க தூதரகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பலவித மர்ம நோய்களால் அவதிப்பட்டனர். இது கியூபா வின் சதிச்செயல் என அமெ ரிக்கா குற்றம் சாட்டியது. மேலும் அதன் மீது நடவ டிக்கை எடுக்கவில்லை என தெரிவித்தது.

அதைத்தொடர்ந்து கியூ பாவில் உள்ள அமெரிக்க தூதர்கள் மற்றும் ஊழி யர்கள் வாபஸ் பெறப்பட்ட னர்.

இந்த நிலையில் அமெ ரிக்காவில் உள்ள கியூபா தூதரக அலுவலகங்களில் பணிபுரியும் 15 அதிகாரிகள் வெளியேற்றப் பட்டனர். இத்தகவலை அமெரிக்க வெளி யுறவு அமைச்சர் ரெக்ஸ் டில் லர்சன் தெரிவித்தார். (8)

திமன்ற வளாகத்துக்குள் ிழக விவசாயிகள் கைது

பொலிஸாரை ஏமாற்றிவிட்டு ஜந்தர் மந்தரை விட்டு சாதாரண உடையில் வெளியேறினர்.

பின்னர் அவர்கள் உச்ச நீதிமன்ற வளாகத்துக்குள் தனித்தனியாக நுழை ந்தனர். நீதிமன்ற வளாகத்தில் செய் தியாளர்கள் நிற்கும் பகுதிக்கு சென்ற போதுதான் அவர்கள் தமிழக விவசா யிகள் என்பது பொலிஸாருக்கு தெரிய வந்தது.

இதையடுத்து விவசாயி கள் தங்களது சட்டைகளை கழற்றி அரை நிர்வாணம் ஆனார் கள்.

இதைத் தொடர்ந்து பொலி ஸார் அவர்களை கைது செய்து, பாராளுமன்றத் தெரு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். விவ சாயிகள் 7ஆவது முறையாக கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (8)

இந்தியப் பிரதமர் மிகப்பெரிய தீவிரவாதி

பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் நேரடித்தாக்கு



(இஸ்லாமாபாத்)

இந்தியாவின் அரசு மிகப்பெரிய தீவிரவாதியான ஒரு பிரதமரின் கையில் சிக்கி உள்ளது என பாகிஸ் தான் வெளியுறவுத்துறை அமைச்சர் நேரடியாகக் குறிப பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் சமீபத்தில் பேசிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பாகிஸ்தான் தீவிரவாதிக ளின் கூடாரமாக மாறியுள்ள தையும், இந்தியா மீது பாகி ஸ்தான் தீவிரவாதிகள் நடத் தியுள்ள தாக்குதல்களை யும், தீவிரவாதிகளை உரு வாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதை யும் ஆதாரங்களுடன் சுட் டிக் காட்டிப் பேசி சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த் தார்.

இதற்கு பதிலளித்த பாகிஸ்தான் பிரதிநிதி சார் காஜா ஆசிப்பிரதமர் நரேந் திர மோடியை தீவிரவாதி என்று நேரடியாக குறிப்பிட்டு ள்ளார்.

பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய காஜா ஆசிப், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ் தான் இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களால் இந் திய எல்லைக்குப்பட்ட அப்பாவி மக்கள் பலியாவது தொடர் பான கேள்விக்கு பதில் அளிக் கையில், குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த போது முஸ்லிம்களின் இரத்தக் கறை படிந்த கைகளுக்கு சொந்தக்காரரான ஒருவர் தற்போது இந்தியாவின் பிரதமராக இருக்கிறார் என அவர் கூறியுள்ளார்.

குஜராத்தின் முதலமைச் சராக அவர் இருந்தபோது, அவரது மேற்பார்வையில் முஸ்லிம்கள் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப் பட்ட னர்.

அவருக்கு அமெரிக்கா தடை விதித்திருந்ததையும் மறந்து விடக்கூடாது என் றும் அவர் பேசியுள்ளார்.

காஜா ஆசிப்பின் கருத் துக்கு பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் நரசிம்ம ராவ் உள்ளிட்ட பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றையாட்சியில் மாற்றம் இல்லை

சம்பிக்க ரணவக்க திட்டவட்டம்

(கொழும்பு)

இலங்கையின் ஒற்றை யாட்சி தன்மையில் எந்த மாற்றமும் செய்யப்படக் கூடாது என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய வின் பொதுச் செயலாளரான அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இதுதொடர்பாக கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையில்,

"அரசியலமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் இலங்கை அரசின் தன்மை தொடர்பாக விளக்கம் அளிக் கப்பட்டுள்ளதற்கு ஹெல உறு மய எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

மாகாணசபை முறைமை நாட்டின் ஒற்றையாட்சி தன் மையில் சில பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

புதிய அரசியலமைப்பில் ஒற்றையாட்சித் தன்மை மற் றும் தற்போதைய அரசிய லமைப்பின் 4 (1) மற்றும் 76 (1) ஆவது பிரிவுகள் அப் படியே தொடர வேண்டும்.

இடைக்கால அறிக்கை யில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள சிறப் புரிமை நீக்கப்பட்டுள்ளதாக சில குற்றச்சாட்டுகள் சுமத் தப்படுகின்றன.

ஆனால், தற்போதைய அரசியலமைப்பில், எந்த வொரு குறிப்பிட்ட மதத்துக் கும் சிறப்பு நிலை அளிக் கப்பட்டிருக்கவில்லை.

புதிய அரசியலமைப்பு நாட்டின் உறுதிப்பாட்டை யும், ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித் துள்ளார். (இ-7)

நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் வெறுமையாகக் கிடந்த ஆசனங்கள்

இலங்கை முதலாவது நாடாளுமன்றம் கூட்டப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடை வதை முன்னிட்டு நேற்று முன்தினம் நடத்தப்பட்ட நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் மிகக் குறைந்தள விலான உறுப்பினர்களே கலந்து கொண்டனர்.

இந்த சிறப்பு அமர்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சபா நாயகர் கருஜெயசூரிய தலை மையில் இடம்பெற்றது.

இதில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன கலந்து கொண்டு உரையாற்றினார்.

புதிய அரசியலமைப்பின் மூலம், நாடாளுமன்ற ஜன நாயகத்தைப் பலப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் தனது உரை யில் குறிப்பிட்டார்.

இந்த சிறப்பு அமர்வில் இந்திய நாடாளுமன்ற சபா நாயகர் சுமித்ரா மகாஜன் உள்ளிட்ட ஐந்து சார்க் நாடு களின் நாடாளுமன்ற சபாநா யகர்கள் சிறப்பு விருந்தினர் களாக பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜ தந்திரிகளும் அழைக்கப் பட்டிருந்தனர். விருந்தினர்க ளால் நாடாளுமன்றம் நிறை ந்திருந்த போதிலும் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் பல ரும் இந்த அமர்வில் பங்கேற்க வில்லை.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்க ளின் ஆசனங்கள் வெறு மையாக காட்சியளித்தன. குறிப்பாக பின்வரிசை ஆச னங்கள் வெறுமையாக காணப்பட்டன. (இ-7)

அவன்கார்ட், ரக்னா லங்கா தலைவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல்

அவன்கார்ட் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி மற்றும் ரக்னா லங்கா நிறு வனத்தின் முன்னாள் தலை வர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோரு க்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி ஆர்.குரு சிங்கவிடம் இவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தெற்கு கடல் பரப்பில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் ஒன்றை அமைப்பதற்கு 355 இலட்சம் ரூபா இலஞ்சக் கொடுக்கல்-வாங்கல் செய் தமை தொடர்பான குற்றச் சாட்டு தொடர்பிலேயே குறித்த இருவர் மீதும் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இந்த குற்றப் பத்திரிகை யில் இலஞ்சம் வழங்கியமை மற்றும் கொடுத்தமை உள் ளடங்கலாக 47 குற்றச்சாட் டுக்களை சட்டமா அதிபர் திணைக்களம் இருவருக்கு எதிராகவும்முன்வைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களான நிஸ்ஸங்க சேனாதிபதி மற் றும் பாலித்த பெர்னாண்டோ ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபா ரொக்கம் மற்றும் தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடு தலை செய்வதற்கு நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன் சந்தேக நபர் கள் இருவருக்கும் வெளிநாடு செல்வதற்கு தடைவிதித்த நீதிபதி, இவர்களுக்கு எதி ரான வழக்கை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

முன்னதாக சந்தேக நபர் களின் விரல் அடையாளங் களை பதிவு செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் இந்த வழக் கிற்கான ஆதாரங்களை பதி வுசெய்வதற்கு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 19, 20 மற்றும் 22 ஆம் திகதிகளை நீதிபதி நிர்ணயித்துள்ளார். (இ-7)

மத்தள விமான நிலையத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு மகிந்த அணி கடும் எதிர்ப்பு

நாளை போராட்டத்திற்கு ஏற்பாடு

அம்பாந்தோட்டை, மத் தள விமான நிலையத்தை இந்திய நிறுவனத்துக்கு குத் தகைக்கு வழங்கும் அரசாங் கத்தின் திட்டத்துக்கு எதிர்ப் புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தப் போவதாக மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதி ரணி எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப் பெரும,

"மத்தள விமான நிலைய த்தை இந்திய நிறுவனத்து க்கு 40 ஆண்டுக்கு குத்தகை க்கு வழங்கும் அரசாங்கத் தின் முடிவுக்கு எதிராக, நாளை வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

இந்த அரசாங்கத்தினால் அரச வளங்கள் விற்கப்படு வதை நாங்கள் எதிர்க்கி றோம். அரச வளங்களை விற்பனை செய்வதை அரசா ங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

அரசாங்கம் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில், அவர்களுக்கு எதிராக போரா ட்டம் நடத்துவோம்.

சத்திவாய்ந்த நடிகன் தமது போர்க்களமாக இலங் கையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது.

அம்பாந்தோட்டை துறை முகத்தை சீன நிறுவனத் துக்கு 99 ஆண்டு குத்தகை க்கு வழங்கியதை அடுத்து இந்தியாவை சமாதானப் படுத்துவதற்காகவே மத்தள விமான நிலையத்தை இந்தி யாவுக்கு வழங்க அரசாங் கம் முற்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

தேவை தெரியாதவர்கள்

எனக்குத் தெரிந்த ஒருவர் வேலைக்கு ஏறாம்பவும் முயற்சி செய்து பெருந் தொகை யைச் சிரமப்பட்டுத் தயார் செய்து கொண்டு டுபாய்க்குப் போனார். போய் இரண்டு மதங் கள் தாம் தாக்குப்பிடித்தார். மூன்றாவது மாதம் சென்னைக்குத் திரும்பி விட்டார்.

என்னய்யா இது? உல்லாசப் பயணம் போகிற மாதிரிப் போய்விட்டு வந்துவிட்டாய் என்று கேட்டதற்கு விளக்கம் சொன்னார். சாப்பாடு சரியில்லை; வெயில் அதிகம் வேலையில் கஷ்டம்; மேலதிகாரி மோசம்; குடும்பத்தை விட்டுட்டு இருக்க முடியவில்லை அது இது என்று அடுக்கினார்.

ஒரு முக்கியமான முடிவை எடுக்குமுன் நல்லது கெட்டதைச் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும்.

மனத்திற்குள் ஒரு தராசுத் தட்டை நிறுத்தி ஒரு பக்கம் பிரச்சினைகளையும் மறுபக்கம் ஆதாயங்களையும் அடுக்கி வைக்க வேண் டும். நண்பர் சொன்ன காரணங்கள் இவ் வொன்றும் 50 கிராம் கற்கள். இவை எல்லா வற்றையும் சேர்த்தால் கூட அரைக் கிலோ வரவில்லை. ஆனால் குடும்பக் கஷ்டம் தீரு தல்; கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்துதல்; வருங்கால முன்னேற்றம் போன்றவை ஒரு கிலோ கற்கள். இவற்றின் முன் மற்றயவை எடுபடா.

இந்த நண்பரிடம் உள்ள முக்கிய கோளாறு சூழ் நிலைகளை வெற்றிக் கொள் ளத் தெரியாததும் அவற்றிற்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளாததும் தான்.

ஆங்கிலத்தில் Raising to the occasions என்று ஒரு தொடர் உண்டு. சந்தர்ப்பங்க ளுக்கு ஏற்றபடி நம்மை நாம் மாற்றிக் கொள் ளுதல் என்று இதற்கு விளக்கம் தரலாம்.

இது பலரிடம் இல்லாததால் தான் அவதி கள் வருகின்றன.

ஒருவர் தன் மகளுக்குத் திருமணம் செய் கிறார். இவர் தேங்காய்ப் பை போதவில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் வந்தவர்களை எப்படி நன்கு கவனிக்க முடி யும். ஒரு சாதாரண நாளில் ஒரு சீப்பைக் காணவில்லை என்று கவலைப்படலாம்; பரவாயில்லை. ஆனால் ஒரு திருமணத் தின் போதும் இப்படியா?

திருமண ஏற்பாடென்றால் நான்கும் இருக்கும். இதற்கெல்லாம் நாம் சோர்ந்து விடக் கூடாது. மாற்று ஏற்பாடுகளைச் செய் துவிட்டு மற்றையவற்றைக் கவனிக்க வேண்டியது தான் என்கிற மனநிலையை அன்றைய தினம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு மரணம் நிகழ்ந்துவிட்டது. உடனே ஊருக்குப் புறப்பட வேண்டும். களைப்பா இருக்குங்க என்று அமர்ந்துவிடலாமா? கூடாது. நம்மைச் சுற்றிய சூழ்நிலைகள் நமக்குப் பலவிதமான தேவைகளை உண் டாக்குகின்றன.

அந்தத் தேவைகளைத் தெரிந்து கொண்டு அவற்றிற்கு ஈடுகொடுக்க உடலையும் மனத் தையும் நாம் தயார் செய்து கொள்ள வேண் டும். இப்படிச் செய்தால் அந்தச் சூழ்நிலை களை; நம் திறமைகளை வெளிப்படுத்தி கிடைத்த சந்தர்ப்பங்கள் என்று நாம் கருத முடியும். இதைச் செய்யத் தவறினாலோ அந்தச் சூழ்நிலைகளே நம்மை கவிழ்த்து எறிந்துவிடும்.

லேனா தமிழ்வாணன்

"உயிர்த்தாயே உமையிழந்து ஓராண்டு உருண்டதுவோ?"

1ஆம் ஆண்டு நினைவுத் தூவல்

திருமதி.

மஞ்சுளா செல்வரத்தினம்

திதி: 05.10.2017

மண்ணில்

1954 – 06 – 08

மனதில்

2016 – 10 – 16

குலவிருட்சம் என நின்று குறைவின்றிக் காத்தவரே
குணக்குன்றாய் நின்றெங்கள் குடும்பம் யாத்தவரே
பாலமாகிப் பண்பாகிப் பாசத்தாய் என்றாகி
புரவுநற் பேர்சொல்லப் படைத்த தாயமுதே
நிலமீது உமையிழந்து நிம்மதியைத் தொலைத்தோமே
நீராறாக் கண்களுடன் நின் நினைவில் நெகிழ்ந்தோமே
உலகுள்ள வரையுங்கள் உயர்பணிகள் வாழுமம்மா
உம்பாதக் கமலங்கள் உயர்மலரால் அர்ச்சித்தோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(895)

சோபிதாஸ் ஸ்ரோஸ், ஆவரங்கால்.

நெக்குருகும் நினைவுகளுடன் குடும்பத்தவர்.

சத்ய சாயி சேவா நிலைய பௌர்ணமி நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் பௌர்ணமி நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு சாயி நிலையத்தில் இடம் பெறும். ஓய்வு பெற்ற நீதிபதியும் சத்யசாயி பாடசாலையின் பணிப்பாளருமான ஆர்.வசந்தசேனனின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறும். (இ-7)

ஆசிரியர் தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் தினம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் த.சுகந்தன் தலைமையில் இடம்பெறும். (இ

ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் மாதாந்தம் வெளியிடப்படும் இந்து சாதன சஞ்சிகைக்கு பாடசாலை மாணவர்களிடமிருந்து சைவசமயம் தொடர்பான ஆக்கங்கள், கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆசிரியர், இந்துசாதன சஞ்சிகை, சைவ பரிபாலன சபை, 66, கல்லூரிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (இ

யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

"62 இலட்சம் பேர் தயார்" கண்டியில் கவனயீர்ப்பு

(கொழும்பு)

"62 இலட்சம் பேர் தயார் " எனக்கோரி கண்டியில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசை உருவாக்கப் பாடுபட்ட அனைத்து அமைப்புக்களும் ஒன்றிணைந்து " 62 இலட்சம் பேர் தயார்" என்ற கோஷத்தின் கீழ் கண்டியில் குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளன.

குறித்த ஆர்ப்பாட்டமானது கண்டி ஜோர்ஜ் சில்வா பூங்காவில் நேற்று இடம் பெற்றது. (இ-7)

முக்கிய அறிவித்தல்

எள்ளின் விலை உயர்வு காரணமாக 05.10.2017 தொடக்கம் ஒரு போத்தல் நல்லெண்ணெயின் விலை 600/= ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்,
மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.
021 225 5718
(896)

மரண அறிவித்தல்

திருமதி. சந்திரகுமார் லோகேஸ்வரி

முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பணியாளரும், தற்போதைய முல்லைத்தீவு வலயக் கல்விப்பணி மனையின் பணியாளருமாகிய திருமதி. சந்திரகுமார் லோகேஸ்வரி அவர்கள் 04.10.2017 அன்று புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

பிறப்பு: 1968.03.04 இறப்பு: 2017.10.04

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 06.10.2017 நாளை வெள்ளிக்கிழமை நடைபெற்று இளங்கோபுரம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மாணிக்கபுரம், விசுவமடு. 077 879 8856, 077 634 3685

தகவல்: குடும்பத்தினர்.

(902)

மரண அறிவித்தல்

வடிவேலு சரவணசிவா

பிறப்பு 03 - 01 - 1947

இறப்பு 02 - 10 - 2017

துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு சரவணசிவா அவர்கள் 02.10.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு-சிவபாக்கியம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-செல்லம்மா (சிவமணி) தம்பதியினரின் மருமகனும், ரேணுகாதேவி (பபா) அவர்களின் அன்புக் கணவரும், இளவரசி (யூனியன் வங்கி கொழும்பு), கலையரசி (கொழும்பு), தமிழரசி (கனடா), ரதியரசி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அமரர் ஆனந்தசிவா (உரிமையாளர் வெஸ்டன் ஜூவலரி, கொழும்பு), அமரர் அருளானந்தசிவா (வெஸ்டன்-கொழும்பு), இராஜராஜேஸ்வரி, அருளேஸ்வரி, மகேஸ்வரி, சச்சிதானந்தசிவா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வைத்திய கலாநிதி சபேசன் (லேடி றிட்ஜ்வே வைத்தியசாலை-பொரளை), யமுனாதீரன் (கொழும்பு), பாபு துரையப்பா (கனடா), சிவகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்னேஸ்வரி, மனோகரி, யோகேஸ்வரன், சிவசுந்தரம், வைத்தியகலாநிதி மங்களேஸ்வரன், மஹாராணி, மல்லிகாதேவி, யசோதராதேவி, சக்திவடிவேல், சுபேந்திரன், அமரர் செந்திவேல், அருளானந்தம், மலர்வதனி, புனிதமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துவாரகன், சங்கவி, அட்சயன், சண்முகப்பிரியா, ஐஸ்வர்யா, சேந்தினி, மதுஷினி, ஹரிஷ்ராஜ், வைஷ்ணவி, பிரணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.10.2017 நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:- ரேணுகாதேவி சரவணசிவா (மனைவி)

"சரவணாலயம்"
துன்னாலை வடக்கு,
துன்னாலை, கரவெட்டி.

தொடர்பு:-0212056353,
மனைவி-0774031268,
மகள்-0778889796

(பி-9856)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப் பணி ஓர் அறப்பணி

''ஆசிரியர்'' என்ற சொல்லுக்கு "குற்றம் நீங்கியவர்", "குற்றம் நீக்குபவர்" எனப் பொருள் கொள் ளப்படும். ஆசிரியப் பணி யானது ஓர் அறப் பணியும் அரும் பணியுமாகும். ஏழைகளுக்கு எழுத்தறிவிக்கும் பெரும்பணி. திருப்பணியும் அதுவே. அன்ன சத்திரம் ஆயிரம் வைப்பதிலும் ஆலயம் பதினாயிரம் அமைத்தலினும் புண்ணியமும் கண்ணியமும் நிறைந்த உய ரிய பணியென்று பாரதியார் கூறியிருப்பது நினைவு கூர த்தக்கது.

12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பவனந்திப் புலவர் தமது இலக்கண நூலாகிய நன்னூலில்

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறை கோல் மலர் நிகர் மாட்சி
உலகியல் அறிவோடு யர் குணம் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே"

என்று குறிப்பிடுகின்றார். எல்லோரும் ஆசிரியர் ஆகிவிட முடியாது. நற்குடி ப்பிறப்பு, அருளுணர்வு, தெய் வப்பற்று, கொள்கை உள் ளம், கலைகளைப் பயிலும் திறன், கட்டுரை வரைவதில் தேர்ச்சி, உலகியல் அறிவு, ஆன்றோர் போற்றும் அருங் குணம் ஆகியன அமைந் தவரே ஆசிரியப் பணிக்கு உரியவர் எனக் குறிப்பிடுகின்றார்.

"அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" என் பது போல "ஆசிரியர் எவ்வழி மாணவரும் அவ் வழியே" என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒரு ஆசிரியரின் நடை, உடை, பாவனைகள் பிறருக்கு முன்மாதிரியாகவும் எடுத்துக் காட்டாகவும் அமைந்திட வேண்டும்.

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்'', "மாதா, பிதா, குரு, தெய்வம்", "ஆச்சார்ய தேவோபவ'', ஆசிரியரைத் தெய்வமாகப் போற்றுவாயாக ஆகிய தொடர்கள் ஆசிரியப் பணியின் சிறப்பினை பறைசாற்றி வருகின்றன.

ஆசிரியர்களை ஏணிகளாகவும் தோணிகளாகவும் கலங்கரை விளக்குகளாகவும் சிற்பிகளாகவும் பெருமையாக மதிக்கும் சமூகத்தின் நம்பிக்கைக்கும் எதிர் பார்ப்பிற்கும் ஏற்ப ஆசிரியர்களின் அறப்பணியும் அயராத் தொண்டும் விளங்கிட வேண்டும்.

முன்பள்ளிப் பருவம் முதலே கணனியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்புடைய இன்றைய மாணவச் செல் வங்கள் கூர்ந்த மதியும் நுண்மான் நுழைபுலமும் மிக்கவர்களாகத் திகழ்கின் றனர். கணனி,தொலைக் காட்சி, கைத்தொலை பேசி போன்றவற்றை இயக்குவதில் தேர்ந்தவர்களாக உள்ளனர். எனவே அவர் களுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் பலவித ஆற்றல்கள் மிக்கவர்களாகவும் இரு த்தல் வேண்டும்.

''பிஞ்சு மனங்களில் நஞ்சு புகாமல் செம்மைப் படுத்தும் சீரியபணி'' ஆசிரியப் பணியாகும். ஒரு சமூகத்தில் நிகழும் அனைத்து வகையான குற்றங்கள், நெறி பிறழ்வுகளுக்கும் பொறுப்பானவர்கள் ஆசிரியர்களே. இத்தகைய சமுதாயம் ஒன்று உருவாகுமாயின் தண்டனைக்கு உரியவர்கள் ஆசிரியர்களே என்ற கருத்து இன்றும் சீன நாட்டில் நின்று நிலவுகின்றது.

அரசர்கள் குருவின் திருவடிகளை மண்டியிட்டு வணங்கினர். ஆசிரியர்களது பேச்சே மறை. அவர்களது மூச்சே அரசியல். அவர்கள் இன்றி ஒரு நாட்டில் அணுவும் அசையாது. அவர்கள் காட்டும் வழியில்தான் அர சாட்சியும் நடைபெற்றது. முடியுடை மூவேந்தர்களும் புலவர்களைப் போற்றினர். சந்திரகுப்தன் சாணக்கியன் வழியில் சென்றதற்கும் அர்த்த சாஸ்திரம் ஆக்கப்பட்டமைக்கும் இதுவே காரணம்.

மேலும் மாவீரன் அலெக்சாண்டர் "நன்றாக வாழ்வதற்காக என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறியதில் இருந்தும் இவரது தந்தை பிலிப்ஸ் "என் மதிப்பு மிகு ஆசான் அரிஸ்ரோட்டில் வாழும் காலத்தில் என் மகனும் வாழ்வதால் அவன் எதிர் காலம் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. அவனை அவர் கவனித்துக் கொள்வார்" என்று கூறியதில் இருந் தும் தனது கட்டை விரலை குரு துரோணாச் சாரியார் கேட்ட போது தயக்கமின்றிக் கொடுத்த மாணவன் ஏகலைவனின் கதையில் இருந்தும் ஆசிரியர்கள் மீது உள்ள மதிப்பு நன்கு புலப்படுகிறது.

இன்றைய காலத்தில் உள்ள அன்றாட் அவல நிகழ்வுகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இளைய தலைமுறையினரைப் பாது காப்பான திசை நோக்கி அழைத் துச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமை யும் ஆசிரியர்களுக்கே உரியது.

''அடியாத பிள்ளை படி யாது'' என்பது அந்தக் காலம். பெற்றோர்களே தண் டனைகளுக்கு இசை வளித் திருந்த காலம் மாறி மாணவர்களைக் கடும் சொற்களால் பேசிக் கண்டிப்பதோ, அடிப்பதோ அவர்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையில் நடந்து கொள்வதோ கூடாது என்பதே இன்றைய நிலை.

மேலும் வகுப்பறையில் ஆசிரியரின் பங்களிப்பே இல்லாத நிலையில் கணனி, குறுந்தகடு, படக்காட்சி, பட வீழ்த்தி, காணொலி போன்றவற்றால் கற்பித்தல் முறை இப்போது மாற்றம் பெற்று வருகின்றது.

பாடசாலைகளில் போதிய வசதிகள் இன்மை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, ஆசிரியர்களிடமும் முழுமையான அர்ப்பணிப் புணர்வு இல் லாமை, தனியார் நிறுவனங்களின் கட்டணம், பாது காப்பாக பிள்ளைகள் பாட சாலைக்குப் போய் வருவதில் இடர்பாடுகள்,பாடசாலைச் சேவைப் பேருந்துகளின் மூலம் அடிக்கடி ஏற்படும் நேர்ச்சிகள், அதனால் இறப்புக்கள், இழப்புக்கள் யாவும் தரமான கல்விக்குத் தடைக்கற்களாக இருப்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

கல்வியின் வேர் கசப்பானது. ஆனால் அது தரும் கனியோ கலைமிக்கது என்பார்கள். இன்று அறிவியல் வளர்ச்சியும் பொருளியல் பெருக்கமும் அரசியல் ஆளுமையும் சமூகத் தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இம் மாற்றங்களால் ஏற்றம் காணும் வழிமுறைகளை எடுத்தியம்பும் கடப்பாடு ஆசிரியர்களுக்கு உரியது. மாணவர்களின் பன்முக ஆற்றல்களை மேம்படுத்தி அவர்களை நற்பிரஜைகளாகவும் வல்லவர்களாகவும் ஆக்குவதில் ஆசிரியர்களின் பங் களிப்பு முதன்மை யா னது. கல்விச்சூழலில் தொலை நோக்குடன் எதிர்கால அறை கூவல் களைச் சந்திக்கும் மனத் திட்த்தை அவர்களிடம் வளர்த்தல் வேண்டும்.

ஏழை, பணக்காரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், இன்னார் இனியார் என்று எண்ணாது கற்பித்தலில் நாட்டம், புதுமைப் போக்கு, ஆர்வம், சிந்தனை, எளிமை இவற்றோடு கல்வியைக் கடமையுணர்வுடன் வாரி வழங்குபவரே உண்மையான ஆசிரியர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்பர் சான்றோர்கள். அக்கண்ணொத்த எண்ணையும் எழுத்தையும் கற்பிப்பவரே ஆசிரியர்.

ஒருநாட்டின் எதிர்காலமே வகுப்பறையில் தான் நிர்ணயிக்கப்படுகின்றது என்பர்.

கல்வியாளர்கள் அவ் வகுப்பறையில் காலம் தோறும் அறிவொளியை நல்குபவரும், இதனை அகற்றுபவரும் ஆசிரியரே. எதிர்காலம் புதிர் காலமாய் ஆகிவிடாமல் புன்னகை மிளிரும் பொற் காலமாய் ஒளிர்ந்திட செய்பவரும் ஆசிரியர்களே.

எதிர்காலத் தடம் காட்டி, வாழும்நெறி காட்டி, நல்லன, தீயவற்றை அடையாளம்காட்டி நல்லறிவை ஊட்டி நன்னெறிப்படுத்துபவரும் ஆசிரியரே. எந்த ஒரு கலையையும் குருவின் மூலமே கற்க முடியும். குருவித்தை மனதில் ஆழப்பதிந்து பெருமையும் வெற்றியையும் தேடித்தரும்.

பாடசாலை என்பது பூங்கா! ஆசிரியர் தோட்டக்காரர். எனவே இயற்கையை ஒட்டிய கற்பித்தலில் மாணவர்கள் முக்கியம் என்று "பிரோ பெல்" என்னும் கல்வியாளர் விளக்கினார்.

கண்ணியம் மிகுந்த அருந் தொண்டை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் அவர்களது சொந்த வாழ்க்கையில் நன்னடத்தைகளைப் பின்பற்றுவதோடு, சமுதாயத்துடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டு நட்புப் பால மாகத் திகழ வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி போன்ற தீய நெறிகளை விடுத்து அன்பு, பண்பு, அடக்கம், பொறுமை, கனிவு, அருள் முதலாய நெறிக ளைப் பின்பற்றி வழங்குபவர்களாகவும் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் ஒருவர் ஓர் ஆசிரியராக விளங்குவதுடன் உடன் பிறந்தவரைப் போல் உறவாடியும், தலைவனைப் போல வழிகாட்டியும், நண்பனைப் போல் கலந்து வாழ்ந்தும் பணி யாற்ற வேண்டும். ஆசிரியர் என்பவர் செய்திகளை அள்ளித்தரும் முகவர் அல்லர். தாயின் கருவறையில் ஒருவன் உயிரைப் பெறுகின்றான். ஆசிரியரின் வகுப்ப றையில் அவன் அறிவைப் பெறுகின்றான். மாண வர்கள் நாட்டைப் புதுக்கிச் செதுக்கும் சிற்பிகள். அவர்களுக்கு சரியான பயிற்சி அளிக்க வேண்டும். இல்லாவிடில் அவர்களுடைய செயல் நாட்டிற்கு தலைகுனிவையும் தடுமாற்றத்தையும் ஏற்படுத்தும் என டாக்டர் இராதாகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார். ஆசிரியர் செய்வதை மாணவர் பின் பற்றுவர். ஆகவே முந்தியவர் சரியான வழிகாட்டுவது அவசியம்.

ஆசிரியப் பணி என்பது வெறும் ஊதியத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு செய்யப்படும் தொழில் அன்று. ஒப்பற்ற உயரிய தொண்டு. இந்த நாட்டின் இளைய தலைமுறை ஆசிரியர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது . அவர்களின் உடல் வளர்ச்சியும்உள வளர்ச்சியும் ஒருங்கிணைய வேண்டும். கல்வியும், அறிவும் அவர்களைப் பயன் படுத்த நடத்தை மாற்றத்தை உண்டு பண்ண எண்ணங்களைச் செழுமைப்படுத்த வேண்டும்.

ஆசிரியர்களை புதிய ஊற்று நீர் ஊறி வரும் சிற்றோடை எனலாம். ஆசிரியர்கள் தொடர்ந்து வாசிப்பை நேசிப்பவராக இருத்தல் வேண்டும். தங்கள் ஆசிரியர்களுக்கு உலகில் தெரியாதது ஒன்றுமில்லை என மாணவர்கள் நினைக்குமளவிற்கு ஆசிரியர்கள்முழுத்தகுதி னடையவர்களாக அனைத்தையும் அறிந்து கொள்ளும் ஆர்வமும், விருப்பமும் மிக்கவர்களாகத் தங்களை அணியப் படுத்தி அதில் வெற்றி பெற வேண்டும். ஆசிரியர் தம் கற்பித்தல் பணியில் சோர்வு அறியாதவராய் இருத்தல் வேண்டும். கல்வியின் இறுதி சிறந்த குடிமக்களை உருவாக்குவதே என்றார் விவேகானந்தர். ஆசிரியர்கள் அனைவரும் உலகியல் , உளவியல் , வாழ்வியல், பாடப் பொருள் என்கின்ற அறிவுகளில் மேலோங்கியவர்களாகத் திகழ்ந்திடல் வேண்டும்.

ஒரு சிறந்த ஆசிரி யர் முயன்று வரலாறு களைப் படித்தல் வேண்டும். இயலுமாயின் வரலாறு களைப் படைத்தல் வேண்டும். அத்தோடு வரலா றாக வே வாழ்ந்து காட்ட வேண் டும் என்னும் குறிக் கோளைக் கொண்ட வராக மிளிர்ந்து ஊரும் உலகமும் போற்றிட பேரும் நற்பெரு மையும் பெற்றிட வேண்டும்.

திருமதி வலன்ரீனா இளங்கோவன்
ஆசிரியர்,
யா/பொன் பரமானந்தர் மகா
வித்தியாலயம்,
குரும்பசிட்டி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போர் நடக்காத நாட்டுக்கு போர்க்கப்பல் எதற்கு?

மகிந்த அணி அரசிடம் கேள்வி

யுத்தம் நடைபெறாத நாட்டுக்குக் பெரும் தொகை செலவில் யுத்தக் கப்பல் எதற்கு என்று பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும கேள்வி எழுப்பியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்ற கடனைச் செலுத்துவே அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பதாகக் கூறிய அரசு, மத்தள விமான நிலையத்தை எதற்காக விற்பனை செய்கிறது? தற்போது 24 பில்லியன் ரூபா செலவிட்டு யுத்தக் கப்பல் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. யுத்தம் நடைபெறாத நாட்டுக்குக்கு பெரும் தொகை செலவில் யுத்தக்கப்பல் எதற்கு? நல்லாட்சி அரசாங்கம் கடந்துள்ள ஆயிரம் நாட்களில் மாத்திரம் இரண்டாயிரத்து 700 பில்லியன் ரூபா விற்கு அதிகமான கடன்பெற்றுள்ளது. நாட்டின் கடன் சுமையில் 28 சதவீத கடனை நல்லாட்சி அரசாங்கம் குறித்த ஆயிரம் நாட்களுக்குள்ளே பெற்றுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

சிவப்பு வண்ணத்தில் தேங்காய்

(கொழும்பு)

சிவப்பு வண்ணம் பூசப்பட்ட தேங்காய்கள் சந்தையில் விற்கப்படுகின்றன. தேங்காயின் விலை 65 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மோசடிகளைத் தவிர்ப்பதற்காக தேங்காய்க்கு வர்ணம் பூசப்பட்டே விநியோகிக்கப்படும்" என்று தெங்குச் சபைத் தலைவர் கபில யகன்தாவல தெரிவித்துள்ளார்.

குறைந்த விலையில் விற்கப்படும் தேங்காயைக் கொள்வனவு செய்து அதிக விலையில் விற்பனை செய்ய முயற்சிக்கும் வர்த்தகர்களைத் தடுக்கவும் சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் ஊடாக கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குறைந்த விலையில் தேங்காய் விநியோகம் இடம்பெற்றதுடன், ஒருவர் 10 தேங்காய்கள் வரை கொள்வனவுசெய்ய முடியும்.

மோசடியைத் தடுப்பதற்காக வர்ணம் பூசப்பட்டே இந்தத் தேங்காய்கள் விநியோகிக்கப்படுகின்றன. இத னால், அந்தத் தேங்காய்களை மீண்டும் விற்பனைசெய்ய முடியாது என்றார்.

குறைந்த விலையில் சதொச விற்பனை நிலையங்களில் தேங்காய்கள் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெங்கு உற்பத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. நடமாடும் லொறிகள் ஊடாகத் தேங்காய் விற்பனைசெய்யும் நடவடிக்கையை இன்னும் இலகுபடுத்தும் நடவடிக்கைகளை எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கவுள்ளதாக அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

அமைதியை உறுதிப்படுத்துவதே பொலிஸாரின் கடமை- சாகல

(கொழும்பு)

சட்டத்தை முறையாக நிலைநாட்டி அமைதியை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமை என்று சட்ட ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் பொலிஸ்பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்கிஸையில் ரோஹிஞ்யா அகதிகள் தங்கவைக்கப்பட்டிருந்த இடம் சமீபத்தில் முற்றுகையிட ப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் பொலிஸார் செயற்பட்ட விதம் பற்றி மகிழ்ச்சியடைய முடியாதென்று அமைச்சர் சுட டிக்காட்டினார்.

இதேவேளை, ரோஹிஞ்யா அகதிகள் சம்பவம் தொடர்பில் சங்கைக்குரிய அக்மீ மன தயாரட்ன தேரர், நுகேகொடையை சேர்ந்த ரவீந்திர பெரேரா ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரையும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறிய லில் தடுத்து வைக்குமாறு கல்கிஸை நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னைச் செய்கையில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம்

தென்னை ஓர் பல்லாண்டுத் தாவரமாகும். மற்றைய பல்லாண்டுத்தாவரங்கள் போலல்லாமல் தென்னையானது வருடம் முழுவதும் பூத்துப்பலன் தரும் ஓர் கற்பக விருட்சமாகும். தென்னை வருடம் முழுதும் பூத்தாலும் இதன் விளைச்சலானது சூழற்காரணிகளினால் பெரிதும் தீர்மானிக்கப்படும். மகரந்தச் சேர்க்கை மற்றும் கருக்கட்டலிலேயே தங்கியுள்ளது. மகரந்தச் சேர்க்கையில் தன் மகரந்தச் சேர்க்கை, அயன் மகரந்தச் சேர்க்கை என இரு வகைகள் உண்டு. இதில் தன் மகரந்தச் சேர்க்கையானது பெரும்பாலும் கட்டை இன தென்னை வர்க்கங்களிலும் (3 1/2 வருடத்தில் காய்க்கும் இனம்) செவ்விளநீரினங்களிலுமே நிகழும். ஆனால் உயர் இனத் தென்னை வர்க்கங்களில் (Tall variety) அயன் மகரந்தச் சேர்க்கையே நடைபெறும். தென்னையில் அயன் மகரந்தச் சேர்க்கையானது காற்றினாலும், பூச்சிகளினாலுமே நடைபெறும். பூச்சிகளிலும் பெரும்பாலும் தேனீக்களினாலேயே இச் சேர்க்கை நிகழும்.

தென்னை மரங்கள் தேனீக்களின் சொர்க்காபுரி (Coconut trees are heaven of honey bees) என்று சொல்லப்படுகின்றன. தென்னம் பூக்களிலுள்ள அமுதத்தின் (nectar) சுவையும் வாசனையும் தேனீக்களை பெரிதும் கவர்கின்றன. தென்னையின் ஒரு பூந்துணரில் பல ஆயிரக்கணக்கில் ஆண் பூக்கள் இருக்கும். இவ் ஆண் பூக்களினுள் தேன் சுரக்கும் பகுதி உள்ளது. ஒவ்வொரு ஆண்பூவும் ஏறத்தாழ 110,000 - 221,000 மகரந்த மணிகளைக் கொண்டிருக்கும். ஒரு பூந்துணரானது ஏறத்தாழ 272 மில்லியன் மகரந்த மணிகளைக் (Pollen)கொண்டிருக்கும். தேனீக்கள் பூக்களிலுள்ள அமுதத்தினை (படம்-1) உள்ளெடுப்பது மட்டுமல்லாமல் மகரந்தத்தையும் உள்ளெடுக்கின்றன. ஒரு தேனீயானது தனது உணவுத் தேவைக்காக ஒரு நாளைக்கு ஏறத்தாழ 300m தூரத்திற்கு பறக்கும் ஆற்றலினைக் கொண்டுள்ளது.



படம் - 1:- பூக்களிலுள்ள அமுதத்தினை உள்ளெடுக்கும் தேனீக்கள்

படம் - 2 :- தேனீ வளர்ப்புப் பெட்டி

இவை தமது உணவினைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடுகையில் அதாவது ஒரு மரத்திலிருந்து மற்றைய மரத்திற்கு பறந்து திரியும் போது அவற்றின் மயிர்க்கால்களில் ஒட்டியுள்ள மகரந்த மணிகள் இன்னொரு தென்னையினது பெண்பூவிற்கு கடத்தப்படுவது இலகுவாக்கப்படுகின்றது. இதனால் மகரந்தச் சேர்க்கை வினைத்திறனான முறையில் நடத்தப்படுகின்றது.

பிலிப்பைன்ஸில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் தென்னந்தோட்டங்களில் தேனீ வளர்க்கும் பெட்டிகளை வைத்து நடத்தப்பெற்ற ஆய்வுகளின் பிரகாரம் தென்னங்தோட்டங்களின் விளைச்சலானது ஏறத்தாழ இரு மடங்காக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இத்துடன் இத்தகைய தேனீ வளர்ப்புப் பெட்டிகளிலிருந்து (படம் - 2)கிடைக்கப்பெறும் தூய தேனிலிருந்தும் கணிசமானளவு வருமானம் கிடைக்கப் பெறுகின்றது.

இலங்கையில் தேனீக்கள் உள்ளடங்கலாக ஒரு தேனீ வளர்ப்புப் பெட்டியினது விலை ரூ.5,000 ஆகும். தேனீக்களிற்குத் தேவையான உணவு சிறப்பாகக் கிடைக்கும் இடம் என்றால் ஒரு ஏக்கரிற்கு 5m இடைவெளியில் குறைந்தது 20 பெட்டிகளினைப் பொருத்தலாம். பெட்டி பொருத்திய காலப்பகுதியிலிருந்து ஏழு மாதங்களின் பின்னர் பெறப்படும் முதலாவது அறுவடையின் போது ஒரு பெட்டியிலிருந்து 1 ½ போத்தல் தேனினைப் பெறலாம். வதைகளிலிருந்து தேனினைப்பிரித்தெடுக்கும்போது பாரம்பரிய முறைகளைத் தவிர்த்து நவீன முறையிலான தேனைப் பிரித்தெடுக்கும் சாதனத்தைப் (Honey exacter) பயன்படுத்தினால் அவ்வதைகளின் கட்டமைப்பை மாற்றாமல் அவ்வதைகளையே மீளப்பயன்படுத்தி ஒவ்வொரு மாதமும் ஒரு போத்தல் தேனினை அறுவடையாகப் பெறலாம். அல்லாவிடின் புதிய வதைகள் மீள் உருவாகி அதிலிருந்து தேனினைப் பெறுவதற்கு மேலும் 3 மாதங்கள் தேவைப்படும்.

சிறந்த முறையில் பராமரிக்கப்படும் தேனீக்களை உடைய ஒரு ஏக்கர் தேனீ வளர்ப்பு இடம் ஒன்றிலிருந்து முதலாம் வருட முடிவிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 240 போத்தல் தேனினைப் பெறக் கூடியதாக இருக்கும். ஒரு போத்தல் தூய தேனின் விலை ரூ 900 எனக் கருதினாலும் ஒரு ஏக்கர் காணியிலிருந்து ரூ 150,000 இற்கு மேற்பட்ட தேறிய வருமானத்தினை ஈட்டக்கூடிய மாதிரி இருக்கும். இராணித் தேனீக்களை அடையாளம் காணல், வகைப்படுத்தல், வளர்த்தெடுத்தல் போன்ற காரியங்கள் சிரமமானதாகவே உள்ளன. தேனீப் பெட்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது தேனீக்களிற்குரிய உணவு கிடைப்பதுவும் குறைவுபடுவது மட்டுமல்லாமல் பீடை நோய்த்தாக்கமும் அதிகரிக்கும். இதற்குரிய தீர்வுகள் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் குறைவாகவே காணப்படுகிறது

தென்னைகளிற்கிடையில் தென்னையினது பசளை வட்டத்தினைப் பாதிக்காத வகையில் குறுங்காலப் பயிர், இடைக்காலப்பயிர், பல்லாண்டுப்பயிர் போன்றவற்றினை ஒரு குறிப்பிட்ட கால ஒழுங்கில் பயிரிடுவதனாலும் தென்னங் காணிகளினைச் சுற்றி சீமைக்கிழுவை (கிளிறி சீடியா), காட்டுச் சூரிய காந்தி, செவ்வந்தி போன்ற பயிர்களினை எல்லைப்பயிர்களாகப் பயிரிடுவதனாலும் அவை ஒரு கால ஒழுங்கில் பூக்கும் ஒழுங்கினை ஏற்படுத்தி கொடுப்பதனாலும் அசேதனப் பசளைகளின் அதிகளவு பாவனையைக் குறைத்து அசேதனப் பீடை கொல்லிகள், களை கொல்லிகள் போன்றவற்றினைத் தவிர்த்து சேதன முறை விவசாயத்தினை மேற்கொள்வதனால் தேனீக்களின் உணவு கிடைத்தலை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல் அவற்றிற்கான பாதுகாப்பினையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் தென்னைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட நாடுகளில் தேனீ வளர்ப்புடன் கூடிய தென்னைச் செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் போது இலங்கையின் உலர் வலயத்தில் பல்வேறுபட்ட சவால்களிற்கு மத்தியிலும் தென்னைச் செய்கையைச் சிறப்பாக மேற்கொண்டு வரும் தென்னைச் செய்கையாளர்கள் ஏன் இதனைச் செய்யக்கூடாது?

ஈஸ்வரன் சற்குணன், பண்ணைத் திட்டமிடல் அதிகாரி, தென்னைப் பயிர்ச்செய்கை சபை, யாழ்ப்பாணம்.

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: உத்தராடம் கி.பா: 65 செவ் 2 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்:கணனி பொறியியலாளர் சிங்கப்பூர் தொ.இ: B/7821	பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: ஆயிலியம் உயரம்: 5' தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர் தொ.இ: G/7825
பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்:அவிட்டம் கி.பா: 13 உயரம்: 5'5" தகைமை/தொழில்:பொறியியலாளர் தொ.இ: B/7822	பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: பூரம் உயரம்: 155cm தகைமை/தொழில்: பட்டதாரி/தனியார் தொழில் தொ.இ: G/7833
பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: சதயம் கி.பா: 32 செவ் 2 இல் உயரம்: 5'9" தகைமை/தொழில்:HNDA/லண்டன் PR தொ.இ: B/7823	பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: அவிட்டம் கி.பா: செவ் 7 இல் உயரம்: 5' தகைமை/தொழில்:A/L எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் தொ.இ: G/7834
பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: அச்சுவினி உயரம்: 5'4" தகைமை/தொழில்:NCAT /தனியார் தொழில் தொ.இ: B/7824	பிறப்பு: 1987RC நட்சத்திரம்: சுவாதி தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில் தொ.இ: G/7835

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2025ஆம் ஆண்டு எயிட்ஸை ஒழித்த நாடாக இலங்கை மாற வாய்ப்பு

2025ஆம் ஆண்டள வில் எச்.ஐ.வி. தொற்றை நாட்டில் இருந்து ஒழிக்க வாய்ப்புள் தாக தேசிய பாலியல் நோய் பிரிவு தெரி வித்துள்ளது.

எயிட்ஸ் தொற்றுள்ளவர் களை இனங்கண்டு அவர் களுக்கு சிகிச்சை செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவ தாக, அப் பிரிவின் பணிப்பா ளர் சிசிர லியனகே தெரி வித்துள்ளார்.

மேலும், எச்.ஐ.வி. தொற்று அதிகமுள்ள மாவட்டமாக கொழும்பு காணப்படுவதா கவும் அவர் தெரிவித்துள் ளார். (இ-7)

சிறுவர் தினமும் ஆசிரியர் தினமும்

யாழ்.நீர்வேலி சி.சி.த.க பாடசாலையின் சிறுவர் தின மும் ஆசிரியர் தின விழாவும் நாளை 6ஆம் திகதி வெள் ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் தில்லைநாதன் ரவீந் திரநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பொலிஸ் நிலைய மகளிர் பிரிவு அத்தியட்சகர் செல்வி டிலானி, தேசிய பாண்ட் பயிற்றுவிப்பாளர் கணபதிப் பிள்ளை வரதராசா, கௌரவ விருந்தினர்களாக அமிர்த லிங்கம் கேதீஸ்வரன் (கனடா), குகதர்சினி குனேஸ்கரன் (பழைய மாணவி கனடா) ஆகி யோர் கலந்து கொள்வர். (இ-7)



பியர் அருந்தும் பெண்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

ஜனாதிபதி மைத்திரி வேதனை

எமது நாட்டில் சிகரெட் பாவனை குறைவடைந்து எ போதும் பியர் அருந்தும் பெண்களின் எண்ணிக்கை சடுதியா அதிகரித்துள்ளமை வேதனை அளிக்கிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கொழும்பு ஆனந் தாக் கல்லூரியும் பொலந றுவை றோயல் கல்லூரியும் இணைந்து ஏற்பாடு செய்தி ருந்த போதைப்பொருள் ஒழி ப்பு தொடர்பான செயலமர் வில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்க ண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையா ற்றுகையில்,

போதைப் பொருளைப் பயன் படுத்துகின் றவர் கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுவருவதை ஊடகங்க ளின் வாயிலாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். போதைப் பொருளுக்கு அடிமையாகி யுள்ள இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கு புனர் வாழ்வளிக்கும் பல முகாம்க ளுக்கு நான் கடந்த வருடம் சென்றேன்.

பாடசாலைப் பிள் ளை களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் போதைப் பொருளுக்கு அடிமையாக்கு வதற்கான முயற் சிகளை போதைப்பொருள் வியாபா ரிகள் மேற்கொண்டு வரு கின்றனர். போதைப் பொருள் வியாபாரிகள் அவர்களுக்குக் கிடைக்கின்ற எல்லையற்ற இலாபத்தின் காரணமாக தங்களது வியாபாரத்துக்காக சிறுவர்களையும் வளர்ந்த வர்களையும் இணைத்துக் கொள்வதற்காகப் போதைப் பொருளை இலவசமாக விநி யோகிக்க ஆரம்பித்தனர்.

2020 ஆம் ஆண்டாகும் போது நாட்டில் புகையிலை உற்பத்தி முழுமையாக நிறுத் தப்படும். தற்போது புகை யிலை உற்பத்தியை முழு மையாக நிறுத்தும்படி புகை யிலை உற்பத்தியாளர்களு க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் அதிக இலாபம் கிடைப் பதால் நெல், தானியங்கள், மரக்கறி, பழவகைகளைப் பயிரிட முடியுமாக இருந்தும் விவசாயிகள் புகையிலை உற்பத்திக்குப் பழக்கப்பட்டுள் ளனர்.

பிள்ளைகளே போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்தி ட்டத்திற்கு தேவையான தலை மைத்துவத்தை நீங்கள் வழ ங்க வேண்டும். நீங்கள் முன் மாதிரியாக இருக்க வேண் டும். வீட்டில் அத்தகைய பிரச்சினை இருக்குமானால் பிள்ளைகள் என்றவகையில் உங்களால்தான் அதனைத் தீர்க்க முடியும். அதேபோ ன்று நீங்கள் சமூகத்திற்கான சிறந்த தூதுவர்கள். நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்பு வதற்கு பாடசாலைப் பிள்ளை களான உங்களைப் போன்ற ஒரு தூதுவர், பலமான ஊட கம் வேறு இல்லை. சமூக த்தில் அனைத்துத் துறையி னரும் உங்களுக்கு செவிம டுப்பார்கள். சிறுவர்களுக்கும் கல்விமான்களுக்கும் நாடு செவிமடுக்கும். அரசியல் வாதிகளுக்கு நாடு செவிம டுப்பதில்லை. அரசியல்வாதி கள் பொய்கூறுவதால் சொல் வதைச் செய்யாத காரணத் தினால் அவர்களுக்கு எவ ரும் செவிமடுப்பதில்லை.

தேசத்தின் பிள்ளைகள் என்ற வகையில் நாம் அனை த்து பிள்ளைகளையும் பாது காக்க வேண்டும். வருடாந் தம் சிகரெட்டின் மூலம் அர சாங்கத்திற்கு நூறு மில்லி யனை விட அதிக வருமா னம் கிடைக்கின்றது. சிக ரெட் மூலம் 120 மில்லிய னைப் பார்க்கிலும் அதிக வரி கிடைக்கின்றது. இந்த இர ண்டிலும் இருந்து அரசாங் கத்திற்கு 220 மில்லியன் கிடைக்கிறது. எனவே நாம் அதிக வரியை அறவிடுவ தன் மூலம் அவர்களது வரு மானத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என நான் திறை சேரிக்கு அறிவித்துள்ளேன்.

சிகரெட் பாவனை குறை வடைந்துள்ளதைப்போன்று மற்றுமொரு விடயம் அதிக ரித்துள்ளது. எமது நாட்டில் பியர் பயன்படுத்தும் பெண்க ளின் எண்ணிக்கை அதிக ரித்துள்ளது. கடந்த சிலவ ருடங்களை எடுத்துக் கொண் டால் இந்த எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள் ளது.

நாட்டிற்குள் போதைப் பொருள் கொண்டுவரப்படு வதைத் தடுப்பதற்கு நான் பொலிஸாரை மட்டுமன்றி முப்படையினரையும் ஈடுபடு த்தியுள்ளேன். விமான நிலை யம், துறைமுகத்தில் தற் போது இது தொடர்பில் சட்ட திட்டங்கள் கடுமையாக்கப் பட்டுள்ளன.

சிகரெட் பாவனை கார ணமாக எமது நாட்டில் ஆண் டொன்றுக்கு சுமார் 25,000 பேர் மரணமாகின்றனர். ஏனைய போதை மாத்தி ரைகள், மதுபானம் காரண மாக இறப்பவர்களின் எண் ணிக்கை இவ்வளவுதான் என்று குறிப்பிட முடியாது. பல்வேறு நோய்களுக்கு இது காரணமாக அமைகின்றது. அரசாங்கம் என்ற வகையில் போதைப்பொருளை ஒழித் துக் கட்டுவதற்கான அனை த்து நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம் என மேலும் தெரிவித்தார். (இ-9)

நூல் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி ஆளுநர் லயன் வை. தியாகராசாவின் வாழ்க்கை நயப்புப்பனுவல் " கருமத்திருதி" நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கலையரங்கில் நடைபெறும்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி எஸ்.கமலநாதன் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர், ஆர்.விக்னேஸ் வரன், மாவட்ட ஆளுநரின் பிரதம இணைப்பாளர் லயன் வி.ஸ்ரீபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

ஆசிரியர் தினவிழா நாளை

யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவ முதல்வர் சபை நடத்தும் ஆசிரியர் தின விழா நாளை 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு மாணவ முதல்வர் செல்வன் யோ.நிரூப ரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியை செல்வி தங்கப் பொன் சபாபதி கலந்து கொள்வார். (இ-7)

அற்புதப்பணி

கைவிரல் பற்றி எழுத்தறிவித்தவன்
கடவுள் என்று வேதங்கள் முழங்குமாம்
செய்யும் யாவிலும் செம்மையைப் பேணுதல்
செல்லவேண்டிய திசையினைச் சுட்டுதல்
பொய்மை அற்றதோர் வாழ்க்கை நடத்துதல்
புதுமை காண்கையில் புளகிதம் எய்துதல்
உய்வதற்குளவழியிவை என்றெமக்கு
உணத்துநல் லாசிரியரைப் போற்றுவம்

நேற்றைய பேரழிவைநினைந் தேங்கி
நெஞ்சயர்ந்து புலம்புதல் வேண்டா
ஏற்றமாபணி முற்றுவிப் போமென்று
இன்று சூளுரை செய்க எழுக!
ஆற்றல் மிக்கவர் நீரென் றறிந்தே
ஆர்வமிக்குநம் அரும்புகள் தந்தோம்
போற்றி அன்னவர் திறமைசாலிகளாய்ப்
பொலியச் செய்க, புகழடைவீர்கள்!

ஊதியத்துக் காகஉயிர்க்காய்
ஓடு கின்றவர் தொகையினைக்கண்டு
நீர் திகைத்துத் தளர்வுறல் ஒழிக!
நேர்மை, தொண்டுளம் செய்கிற தொழிலில்
ஆர்வம், அர்ப்பணிப்பு ஆகிய குணங்கள்
அமைய வேண்டும் ஆசிரியருக்கு இன்றேல்
பாதைமாறிய பயணங்கள் செய்த
பழிவந் தெய்தும், பகிடியீதல்ல!

ஒற்றைத் தீபத்தினாற் பலஏற்றி
உலகெலாமொளிவீசச் செய் கின்ற
வித்தை ஆசிரியத்தொழில் ஆகும்!
வேறுசெய்யப்பல் லாயிரர்வருவர்!
பெற்றதாய்த்திருநாட்டை மொழியைப்
பேண எத்தனைபேர் வருவார்கள்
அற்புதப் பணி ஆசிரியப்பணி
அது செயத்துணிந் தீர்நீவிர் வாழ்க!

கவிஞர் சோ.பத்மநாதன்

கும்பாறையில் மூன்று வீடுகள் மீது தாக்குதல்



அம்பாறை பொலிஸ் பிரி விலுள்ள மூன்று வீடுகள் மீது, நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்படி, எட்டுப் பேர் அடங்கிய குழுவினரே இந் தத் தாக்குதலை மேற்கொண் டுள்ளதாக தெரியவந் துள் ளது.

மேலும், இந்தத் தாக்குத லில் 83 வயதான பெண் ஒருவர் காயமடைந்த நிலை யில் அம்பாறை வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார்.

இந்தத் தாக்குதல் காரண மாக மூன்று வீடுகள் சேத மடைந்துள்ளதோடு, பொலி ஸார் அப் பகுதிகளுக்கு பாது காப்பு அளித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியைத் தீர்மானிப்பது எது?

ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட் கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்த படியால் உற்சாகமாய் சேவல் கூவியது. பலதடவை கூவி யது.

இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரிக்கு சரியான பசி இருந்தது. அந்த சேவலை பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது. ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற் காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவ லைப்பார்த்து,

"சகோதரனே!, வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விபட்டாயா? பறவை களுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. அன்பாய் நடந்துக் கொள்ள வேண்டும், சகோதர மனப் பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தி யைப் பற்றி பேசுவோம்" என்றது

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்ட வில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலை யைத் தூக்கிப் பார்த்தது.

இதைக் கண்ட நரி, என்ன சகோதரா!, ரொம்ப அக் கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது? என்று கேட்டது.

அதற்கு சேவல்,

அங்கே சில வேட்டை நாய் கள் வருவது முதிரி தெரி கிறது. வேட்டை நாய்கள் தானா என்பதைக் கவனிக் கிறேன்

அவ்வளவு தான் நரிக்கு உடல் நடுங்கி விட்டது, வேக வேகமாக "சரி, சரி நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன்". என்று கூறி கிளம்பியது.

சேவல், "அருமை சகோ தரா, போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்க ளைக் கண்டு ஏன் பயப்படு கிறாய்? இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது"

நரி "அந்த ஒப்பந் தைத் தைப்பற்றி அநேக பேர் கேள் விப்பட்டிருக்க மாட்டார்கள், அந்த நாய்களுக்கு தெரியா மல் இருந்தால், நான் என்ன கதி ஆவது? நான் போகி றேன்".

இதை சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக் குள் மறைந்தது.

சேவல் "யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய், உன்னுடைய கெட்டிக்கார பொய்கள் என் னிடம் பலிக்காது" என்று கூறி சிரித்தது.

கெட்டிக்காரன் பொய் சொன் னாலும் அது புத்திச்சாலி யிடம் வெளிபட்டு விடும்.

◆ 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இவ்வாண்டின் இந் நாள் இடம்பெறவில்லை.

◆ 1780 - வேலு நாச்சியார் தலைமையில் திண்டுக் கல்லிலிருந்து சிவகங்கை நோக்கிப் படை யெடுப்பு இடம்பெற்றது.

◆ 1789 - பிரெஞ்சுப் புரட்சி: பாரிஸ் பெண்கள் பதி னாறாம் லூயி மன்னனுக்கு எதிராக வேர் சாய் அரண்மனை நோக்கி அணிதிரண்டு சென்றனர்.

◆ 1793 - பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சில் கிறிஸ்தவம் தடைசெய்யப்பட்டது.

◆ 1795 - இலங்கையின் மன்னார்ப் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

◆ 1799 - ஆங்கிலேயரினால் பிடிக்கப்பட்ட கட்டபொம் மன் கயத்தாறு கொண்டுவரப்பட்டு சிறை யிலடைக்கப்பட்டான்.

◆ 1864 - இந்தியாவின் கல்கத்தா நகரத்தில் இடம்பெற்ற சூறாவளி நகரை முற்றாக சேதப்படுத்தியது. 60,000 பேர் கொல் லப்பட்டனர்.

◆ 1886 - தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து தென்னாபிரிக்காவின் ஜோகானஸ்பேர்க் நகரம் உருவாக்கப்பட்டது.

◆ 1903 - சாமுவேல் கிரிஃபித் ஆஸ்திரேலியாவின் முதலாவது தலைமை நீதிபதியாக நிமனம் பெற்றார்.

◆ 1905 - வில்பர் ரைட் 24 மைல்களை 39 நிமிடங்களில் விமானத்தில் பறந்து சாதனை படைத்தார்.

◆ 1910 - போர்த்துக்கலில் அரசாட்சி முடிவுக்கு வந்து குடியரசு நாடாகியது.

◆ 1915 - முதலாம் உலகப் போர்: பல்கேரியா போரில் இறங்கியது.

◆ 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஜெட் விமானம் ஒன்றை முதற் தடவையாக கனேடிய விமானப் படையினர் பிரான்சில் சுட்டு வீழ்த்தினர்.

◆ 1944 - பிரான்சில் பெண்கள் வாக்களிக்க அனு மதியளிக்கப்பட்டனர்.

◆ 1948 - துருக்மெனிஸ்தான் தலைநகர் அஷ்கபாத் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 110,000 பேர் கொல்லப்பட்டனர்.

◆ 1962 - முதலாவது ஜேம்ஸ் பொண்ட் திரைப்படமான டொக்டர் நோ ஐக்கிய இராச்சியத்தில் வெளி வந்தது.

◆ 1974 - இங்கிலாந்தில் ஐரியக் குடியரசு இராணு வத்தினர் மதுபானசாலை ஒன்றில் குண்டு ஒன்றை வெடிக்க வைத்ததில் 5 பேர் கொல் லப்பட்டனர். 65 பேர் காயமடைந்தனர்.

◆ 1978 - ஈழத்தமிழர்களின் பிரச்சனையை ஐக்கிய நாடுகள் அவையின் கவனத்தில் கொண்டு வந்து தமிழீழ தேசத்தினைத் தனிநாடாக அங்கீகரிக்குமாறு கிருஷ்ணா வைகுந் தவாசன் ஐநா பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றினார்.

◆ 1987 - விடுதலைப் புலிகளின் முக்கிய தலை வர்கள் 12 பேர் இந்தியப் படையின் காவலில் இருக்கும்போது நஞ்சருந்தி மரணமா னார்கள்.

◆ 1991 - இந்தோனீசியாவின் இராணுவ விமானம் ஒன்று ஜகார்த்தாவில் விபத்துக்குள்ளாகி யதில் 137 பேர் கொல்லப்பட்டனர்.

◆ 1999 - மேற்கு லண்டனில் இடம்பெற்ற தொடருந்து விபத்தில் 31 பேர் கொல்லப்பட்டனர்.

◆ 2000 - சேர்பியாவில் சிலோபதான் மிலோ சேவிச்சுக்கு எதிரான மிகப் பெரும் ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது.

பிறப்புகள்

◆ 1524 - ராணி துர்காவதி, கோண்டுவானா அரசி (இ. 1564)

◆ 1823 - இராம்லிங்க அடிகளார், இந்திய சன் மார்க்க சிந்தனையாளர் (இ. 1873)

◆ 1864 - லூயி சான், பிரான்சியத் தயாரிப்பாளர், இயக்குநர் (இ. 1948)

◆ 1882 -இராபர்ட் காடர்ட், அமெரிக்க இயற்பியலாளர் (இ. 1945)

◆ 1927 - ரா. கி. ரங்கராஜன், தமிழக எழுத்தாளர், இதழாளர் (இ. 2012)

◆ 1934 - சோ, பத்திரிகை ஆசிரியர், நாடக ஆசிரியர், நடிகர் (இ. 2016)

◆ 1936 - வாக்லாவ் அவொல், செக் குடியரசின் 1வது அரசுத்தலைவர் (இ. 2011)

◆ 1957 - பெர்னி மாக், அமெரிக்க நடிகர் (இ. 2008)

◆ 1965 - கல்பனா, தென்னிந்திய-மலையாளத் திரைப்பட நடிகை (இ. 2016)

◆ 1975 - கேட் வின்ஸ்லெட், ஆங்கிலேய நடிகை

இறப்புகள்

◆ 1565 - லியூஜி ஃபெறாரி, இத்தாலியக் கணித வியலாளர் (பி. 1522)

◆ 1996 - யாழ்வாணன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1933)

◆ 2009 - இசுரேல் கெல்ஃபாண்ட், சோவியத் கணிதவியலாளர் (பி. 1913)

◆ 2011 - ஸ்டீவ் ஜொப்ஸ், ஆப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்தவர் (பி. 1955)

◆ 2015 - திருமாவளவன், ஈழத்துக் கவிஞர் (பி. 1955)

சிறப்பு நாள்

◆ உலக வெண்வெளி வாரம் (அக்டோபர் 4-10)

◆ குடியரசு நாள் (போர்த்துகல்)

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	நெல்லியடி	கொடிகாமம்	கன்னாகம்	சாவகச்சேரி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	160	150	140	160	180	160
உருளைக்கிழங்கு	100	120	90	120	100	120
பச்சைமிளகாய்	400	450	300	400	400	300
தக்காளி	140	200	120	120	140	160
மரவள்ளிக்கிழங்கு	50	60	40	60	80	80
கோவா	120	160	100	120	160	120
கரட்	100	200	100	160	200	80
பூசணி	60	50	30	40	40	40
புடோல்	120	160	60	100	80	80
வாழைக்காய்	100	100	70	80	80	100
சின்ன வெங்காயம்	280	350	250	250	260	250
பெரிய வெங்காயம்	100	120	80	100	100	140
பாகற்காய்	300	500	250	300	300	200
வெண்டிக்காய்	120	100	70	80	90	100
கருணைக்கிழங்கு	80	150	70	80	100	80
பயற்றங்காய்	120	120	70	120	120	120
லீக்ஸ்	150	250	150	200	160	120
பீற்றூட்	80	100	70	80	60	80
சுறிமினாய்	160	300	150	200	240	200
முருங்கைக்காய்	200	200	120	200	170	160
போஞ்சி	200	250	150	200	120	160
கத்தரிதடிபுளா	140	100	100	120	180	140
கீரை-1பிடி	30	50	20	30	40	40
தேசிக்காய்	280	200	220	300	350	250
தேங்காய் ஒன்று	80	50-80	80	90	75	80
இராசவள்ளி	250	500	250	-	-	300
வெங்காயப்பூ	200	200	200	-	-	250
முள்ளங்கி	60	100	40	80	80	60
பொன்னாங்காணி	40	50	30	30	40	35
வல்லாரை	15	20	15	20	20	25
ஈரப்பலா	60	50	30	60	60	60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடவியிற்றிலே
யானும் இட்ட தீ மூள்கமூள்கவே
– பட்டினத்தார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

இடைக்கால அறிக்கையின் கற்பை தீயிட்டு சோதிக்கின்றனர்

அசோகவனத்தில் சிறையிருந்த சீதையை இராமர் மீட்டெடுக்கிறார். இதற்காக இலங்கா புரியில் இராம சேனை யுத்தம் நடத்துகிறது.

யுத்தத்தில் இராவண சேனை மாண்டு போயிற்று. சிறையில் இருந்து சீதை மீட்கப்படு கிறார். யுத்தமும் முடிய 14 ஆண்டுகளும் நிறை வடைகிறது.

இராமர், சீதை, இலட்சுமணன் உள்ளிட்டவர் கள் அயோத்தி செல்கின்றனர்.

அயோத்தியில் நடந்த துன்பம் சொல்லுந்தர மன்று. சீதாப்பிராட்டியின் கற்பை உறுதி செய் வதற்காக அக்கினிப் பிரவேசம் நடக்கிறது. அக்கினியில் இறங்கி சீதை தனது கற்பை நிரூபிக்கின்றாள்.

சீதையின் கற்பு நிரூபிக்கப்படும் வேளையில் இராவணனின் கற்பும் நிரூபிக்கப்படுகிறது என்றுரைப்பவர்களும் இருக்கவே செய்வர்.

அன்று சீதையின் கற்பை சோதிப்பதற்காக சீதையை அக்கினியில் இறக்கினார்கள்.

இலங்கையில் இராவணனின் சிறையில் சீதை இருந்ததால் அப்படியொரு பரிசோதனை.

இப்போது அரசியலமைப்புச் சீர்திருத்தத் தின் இடைக்கால வரைபை அக்கினியிட்டு எரிக்கின்றனர். இடைக்கால வரைபு கற்பிழந்து போயுள்ளதா? என்பதைப் பரிசோதிப்பதற்காக.

எரிக்கப்பட்ட இடைக்கால வரைபு எரிந்தே போயிற்றாம். அப்படியானால் அதில் கற்பின் தன்மை களங்கப்பட்டுள்ளது என்பது உறுதி யாகிறது.

இடைக்கால வரைபின் கற்புத் தன்மை களங்கமுற்றுள்ளது என்பதன் பொருள் என்ன? என்று நீங்கள் யாராவது வினவலாம்.

இடைக்கால வரைபு கற்புடையதாக இருப்ப தாக இருந்தால், அதில் தமிழர்களுக்கு சமஷ்டி இருந்திருக்க வேண்டும்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வெளிப் படையாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப் பட்டிருக்க வேண்டும்.

இதற்கு மேலாக இலங்கையில் பௌத்தத் துக்கு முன்னுரிமை என்பது நிராகரிக்கப்பட்டி ருப்பதுடன் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் போதாது எனக் கருதுமிடத்து மேலும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதாக இடைக்கால வரைபு அமைந்தி ருந்தால், அது கற்புத் திறனுடையதாக இருந்தி ருக்கும்.

இதைவிடுத்து சமஷ்டி என்பது இல்லாமல் பொலிஸ் அதிகாரம் பற்றிப் பேசாமல், பௌத் தத்துக்கே முன்னுரிமை என்று கூறும் போது இடைக்கால வரைபின் கற்பு தீண்டப்பட்டி ருக்கிறது என்ற உண்மை வெளிப்படுகிறது.

இதன் காரணமாகத்தான்; பேரினவாதிகள் இடைக்கால வரைபுக்கு தீயூட்ட அது எரிந்து சாம்பலாகியுள்ளது.

எனவே இடைக்கால வரைபு சீதை போல் தீயிடை நின்று மீண்டு வரவேண்டுமாக இருந் தால், இடைக்கால வரைபில் தமிழர்களுக்குச் சாதகமான விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

இதைச் செய்யாமல் நாட்டின் எந்தப் பாகத் தில் வைத்து இடைக்கால வரைபை எரித்தா லும் அது எரிந்து சாம்பலாகும் என்பதுடன் தொடர்ந்தும் இலங்கையில் தீயிடல் நடக்கும் என்று சொல்வதே பொருத்துடையதாகும்.

ரயன் ஜயலத் தொடர்ந்தும் மறியலில்

மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக்குக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத்தை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக் குமாறு மாளிகாகந்தை நீத வான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று மாளிகாகந்தை பிரதான நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ் வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதி ராக சுகாதார அமைச்சுக்கு முன் இடம்பெற்ற ஆர்ப்பாட் டத்தின் போது சுகாதார அமைச்சினுள் அத்துமீறி நுழைந்து அங்குள்ள சொத் துக்களுக்கு சேதம் விளை வித்ததாக குற்றம்சாட்டப்பட்ட இவர் சட்டத்தரணியின் ஊடாக ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி நீதிமன்றில் சரணடைந்த போது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (இ-7)

யாழில் பொலிஸ் ஜீப்புக்குள் குழந்தை பெற்ற தாய்

பிரசவ வலியினால் துடித் துக் கொண்டிருந்த கர்ப்பிணி பெண்ணை வட்டுக்கோட்டை பொலிஸாரின் ஜீப் வண்டி யில் யாழ் போதனா வைத் தியசாலைக்கு எடுத்து சென்ற போது, தாய் இடைநடுவில் பெண் குழந்தை பிரசவித்த சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

சுழிபுரம் பகுதியினை சேர்ந்த ஜெகதீஸ்வரன் ஜெய ரூபி என்ற பெண்ணே பொலிஸ் வாகனத்தில் பெண குழந்தையினை பிரசவித்த வர் ஆவார்.

மேற்படி பெண் காலை பிரசவ வலி காரணமாக முச்சக்கரவண்டியில் யாழ் போதனா வைத்தியசாலை க்கு சென்றுகொண்டிருந்துள் ளார். இதன்போது முச்சக் கரவண்டி இடைநடுவில் பழுதடைந்தது.

பிரசவ வலிகாரணமாக துடித் துக் கொண் டிருந் த பெண்ணை அவ் வழியால் வந்த வட்டுக்கோட்டை பொலி ஸார் தமது ஜீப் வண்டியில் ஏற்றி யாழ் போதனா வைத் தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது ஜீப் வண்டி ஐந்து சந்தி பகுதியினை அண்மித்துக்கொண்டிருந்த போது குறித்த கர்ப்பிணி பெண் ஓடிக்கொண்டிருந்த ஜீப் வண்டியில் அழகான பெண் குழந்தையினை பிரச வித்துள்ளார்.

உடனடியாக செயற்பட்ட பொலிஸ் வாகன சாரதி யாழ் போதனா வைத்தியசாலை யில் சேர்ப்பித்திருந்தார்.

பொலிஸாரின் இம் முன்னுதாரணமான செயற் பாட்டினை கண்ட அனை வரும் பாராட்டுக்களை தெரி வித்ததுடன், குறித்த பெண் ணின் குடும்பம் வட்டுக் கோட்டை பொலிஸாருக்கு தமது நன்றியினை தெரிவித் துள்ளனர். (மு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு 100 வருடங்கள் நிறைவு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 100 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

1917 ஆம் ஆண்டு ஒக் டோபர் மாதம் 4 ஆம் திகதி திறக்கப்பட்ட கொழும்புகோட்டை ரயில் நிலையம் பாரிய அள வில் இரும்புகள் பயன்படுத் தப்பட்டு அக் காலப்பகுதியில் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று நடைமேடைக ளுடன் ஆரம் பிக் கப்பட்ட கோட்டை ரயில் நிலைய த்தில் தற்போது 13 நடை மேடைகள் ஸ்தாபிக்கப்பட் டுள்ளன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு நாளாந்தம் சுமார் 13 இலட்சம் பயணி கள் வருகை தருவதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட ரயில் கள் சேவையில் ஈடுபடுகின் றன.

கொழும்பு கோட்டை ரயில நிலையத்தின் 100 ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகளை நடத்துவத ற்கு ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது. (இ-7)

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

விளக்கேந்தும் உரிமை பட்டம் கட்டுதல்

மணமகளின் பின்புறம் மண மகளின் நாத்தனார் அல்லது முறைப்பெண் காமாட்சி அம்மன் விளக்கை ஏந்தி நிற்க வேண்டும்.

மங்கள நாண் பூட்டிய பிறகு முதலில் நாத்தனார் பட்டம் கட்ட வேண்டும். பிறகு அவரவர்கள் தங்கள் குலவழக்கப்படி பட்டம் கட்டிக் கொள்ளலாம். பட்டம் கட்டும் நோக்கம் தங்களது உறவு முறையை சமூகத்தினருக்கு தெரிவிப்பதற்காகவும் மணமகள் எங்கள் இல்லத்தரசி என்பதை தெரியப்படுத்து வதற்காக மட்டுமே. (தொடரும்)

சத்திய தரிசனம்

மனதைக் கட்ட என்ன வழி

❖ நாம் ஒவ்வொரு நாளையும் கடக்கும் போது வாழ்நாளில் ஒருநாளை விட்டு விடு கிறோம். காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறது. காலம் என்னும் தத்துவத்தைக் கடந்து நிற்பவர் கடவுள். காலம் முடிவதற்குள் கடவுள் பக்கம் மனதைத் திருப்ப முயலுங்கள்.

❖ வாழ்க்கையை ஒரு சத்திய சோதனையாக எடுத்துக் கொள்ளுங்கள். எண்ணம், வாக்கு, செயல் மூன்றிலும் உண்மையைக் கடைப்பிடியுங்கள். அப்போது சாந்தமும், தர்மமும், சௌபாக்கியமும் தானாக உங்களைத் தேடி வந்துவிடும்.

❖ மீண்டும் மனிதப்பிறவி நமக்கு கிடைக்கலாம். கிடைக்காமலும் போகலாம். அதனால் கிடைத்த பிறவியைப் பயனுடையதாக்கிக் கொள்வது நம் கடமை.

❖ மனதின் இயல்பு அமைதியற்று இருப்பது தான். ஒரு கணம் மனதால் சும்மா இருக்க முடியாது. சலனப்படும் மனதை கட்டுவதற்கு எளிதான ஒன்று தான் இருக்கிறது. அது கடவுளுடைய நாமத்தை இடைவிடாமல் ஜபிப்பதாகும். இதனால் மனம் ஒருமுகப்படத் தொடங்கும்.

உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

இலங்கைப் பெண்களை தாக்கும் புற்றுநோய்களில் அதிகளவு காணப்படும் புற்றுநோய், மார்பக புற்றுநோய் என்பது உங்களுக்குத் தெரியுமா?

பெண்களை தாக்கிய புற்றுநோய்களில் 27 சதவீதமானவை மார்பக புற்றுநோயாக 2010 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளது.

Be Breast Aware

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் உலக சுகாதார
வைத்திய அதிகாரி
பணிமனை,
யாழ்ப்பாணம்
மாநகர சபை

பத்மாவதிக்குக் கடும் கோபம் வந்தது.

ஐயோ பாவம் என்று பரிதாபப்பட்டு அவன் உயிரைக் காத்தாயே, அதன் பலனைப் பார்த்தாயா? என்று தோழிக ளும் எள்ளி நகையாடி னர்.

தன்னிடம் தகாத சொற்கள் கூறிய அந்த வேடனைக் கல்லால் அடித் துவிரட் டுமாறு தோழிகளுக்குக் கட்ட ளையிட்டாள் பத்மாவதி.

அரசகுமாரியின் தோழிகளும் அங்ஙனமே செய்தனர். ஸ்ரீநிவாசனின் மேனியெங்கும் கற்கள் தாக்கின. காயம் உண்டாகின. குருதி வழிந்தது. அடிபட்டும் ஸ்ரீநிவாசன் சிரிப்பு மாறாமல் அங்கிருந்து அகன்றான். (தொடரும்)

SHANTHIHAM
Association for Health & Counselling

உலக உளநல நாள்- ஒக்டோபர் 10



மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிரு ந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் வலந் தலை சந்தி, சிவகாமி அம்மன கோவிலடி, ஆலடி, மருதப ரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவி லடி, பொன்னாலை கிருஸ் ணன் கோவிலடி, பொன் னாலை வீட்டுத் திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணம் இறுதிப்போட்டி

யாழ். சென்றல் கே.சி.சி.சி.களத்தில்

மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டி 05.10.2017வியாழக்கிழமை (போயாதினம்) பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் யாழ்.சென்றல் அணியை எதிர்த்து கே.சி.சி.சி. அணி மோதவுள்ளது.யாழ்.சென்றல் அணிக்கும் D சுதர்ஸனும் கே.சி.சி.சி.அணிக்கு சாம்பவனும் தலைமை தாங்குகின்றனர்.

சைனிங்ஸ் அணியை வென்று கிண்ணம் பெற்றது உதயசூரியன்

வல்வை நேதாஜி விளையாட்டுக்கழகம் தனது 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திக் கொண்டிருக்கும் விளையாட்டுக்களின் வரிசையிலே பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி இடம்பெற்றது. வல்வை றெயின்போ மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதியது. இப் போட்டியில் உதய-சூரியன் 18:9 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது.

தேசிய குத்துச் சண்டையில் ஹாட்லிக் மாணவன் வெண்கலம்

48 ஆவது டி.பி. ஜெயா ஞாபகார்த்த தேசிய குத்துச் சண்டைப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிமாணவன்வெண்கலப் பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார். பாடசாலை குத்துச் சண்டை சங்கத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 48 ஆவது டி.பி.ஜெயா ஞாபகார்த்த தேசிய குத்துச் சண்டைப் போட்டி அகில இலங்கை ரீதியில் இடம்பெற்றது.

63 பாடசாலைகளைச் சேர்ந்த 267 வீரர்கள் பங்கு பற்றிய 16 பிரிவுகளைக் கொண்ட தேசியப் போட்டி தொடரில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ம.மதிவாணன் 52 கிலோ, 56 கிலோ எடைப் பிரிவில் காலிறுதிப் போட்டியில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவனுடன் மோதி 4:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

கடற்கரை கரப்பந்தாட்டம் தொண்டைமானாறு வீரகத்தி மூன்றாமிடம்

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான கடற்கரைக் கரப்பந்தில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

நேற்று நீர்கொழும்பு உல்லாசக்கடற்கரையில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் சீதுவ தவி சமீர வித்தியாலயத்திடம் 21:18, 22:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வி அடைந்த தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை அணி மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியை 21:11, 21:13 புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றது. பாடசாலை வரலாற்றில் தேசிய ரீதியில் முதல் தடவையாக பதக்கம் வென்றமை குறிப்பிடத் தக்கது. (60)

காளிஅம்பாள் நடத்தும் மாபெரும் தாச்சிப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டு கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகி எதிர் வரும் 13 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது.

இன்றைய இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் வசந்த ஸ்ரீ அணியை எதிர்த்து புவனேஸ்வரிஅம்பாள் அணி விளையாடவுள்ளது. தொடர்ந்து 8 மணிக்கு அதன்றல் அணியினை எதிர்த்து சிந்து அணி விளையர்டவுள்ளது. என காளிகாம்பாள் விளையாட்டுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கரவையின் கலங்கரை விளக்காக திகழ்கின்ற யா/விக்னேஸ்வரக் கல்லூரி இம் மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெறும் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 30.09.2017 அன்று பழைய மாணவர்களால் நடத்தப்பட்ட மென்பந்து உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் வைத்திய கலாநிதியுமான கனகரட்ணம் சிவசுதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட பழைய மாணவனும் ஓய்வுநிலை வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா, ஓய்வு நிலை அதிபர் V.சிவசிதம்பரம், பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.செல்வரட்ணம், பழைய மாணவனும் சட்டத்தரணியுமான பா.பார்த்தீபன், கிளிநொச்சி மாவட்ட செயலக சிரேஷ்ட முகாமையாளர் ஆ.இரகுநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். உதைபந்தாட்ட மற்றும் துடுப்பாட்ட அணிகளுடன் பிரதம விருந்தினர்களைப் படங்களில் காணலாம். (60)

புனித ஹென்றியரசர் கல்லூரியின் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய உடற்பயிற்சி அணியினை தெல்லிப்பழை புகையிரத நிலையத்தில் வைத்து கல்லூரி சமூகத்தினால் வரவேற்கப்பட்ட போது....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமஷ்டி தரப்பட்டு...

வரவேற்பதற்கு அவரை நாங்கள் ஜனாதிபதியாக ஆக்கினோம் என்பதற்காக மட்டும் அல்ல. புதிய அரசியல் அமைப்பை ஆக்குவதற்கு நாடாளுமன்றத்தை நாங்கள் ஒன்றாகத் திரட்டியிருக்கின்றோம்.

இதற்கு முன்பு ஆக்கப்பட்ட எல்லா அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் தமிழ் மக்களும், தமிழ் மக்களின் கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டன.

ஆனால், இப்போது இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டம் இந்த நாட்டினுடைய முழுமையான நாடாளுமன்றத்தால் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாகச் சொல்லப் போனால் சிறுபான்மை மக்களின் அதிலும் தமிழ் மக்களின் பங்களிப்போடு இந்த அரசியல் அமைப்புச் சட்டம் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சமஷ்டிக்கான விடயங்கள் அதிலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. பெயர் வேண்டாம் நமக்கு ஆனால் அதற்குள்ளே நாங்கள் சமஷ்டியைப் பொதியச் செய்திருக்கின்றோம். இதனை நாங்கள் மக்களுக்குச் சொல்லுவோம் என கே.துரைராசசிங்கம் தெரிவித்தார். (மு)

இனவாத நோக்கி...

ளிக்கக்கூடாது என்று தெரிவித்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி, நாட்டைப் பிரிக்கின்ற அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட்டால் அதற்கு தமது கட்சி முழுமையான எதிர்ப்பை வெளியிடும் என்றும் கூறினார்.

கொழும்பு-பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தியிடம், புதிய அரசியலமைப்பு தொடர்பில் பௌத்த பீடங்களின் தலைமைத்துவங்களுக்கு இடையிலும், வடக்கு மற்றும் தெற்கு அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் காணப்படுகின்ற கருத்து முரண்பாடுகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவினர்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி பிரிக்கப்படாத ஒற்றையாட்சிக்குள் தீர்விற்கு நாங்கள் எதிர்ப்பானவர்கள் அல்ல. ஆனால் நாட்டைப் பிரிக்கின்ற எந்தவொரு யோசனையும் புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டால் அதற்கு முழு எதிர்ப்பையும் வெளியிடுவோம். ஆனால் வாக்குகள் பெறமுடியாத நேர்மையற்ற அரசியாதிகள் சிலர் இனவாதத்தை கிளப்பி விட்டு அரசியலமைப்பை குழப்பமுயற்சிக்கின்றனர். இனவாதிகளுக்கு இனவாதத்தைப் போன்ற அரசியலமைப்பை உருவாக்க முடியாது. எனவே இனவாதப் பார்வையில் அரசியலமைப்பை உருவாக்க இடமளிக்க வேண்டாமென மதத்தலைவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். பழைய அரசியலமைப்புக்கள் ஆட்சியை தக்கவைக்கவும், இனவாத சிந்தனையிலும் உருவாக்கப்பட்டன. அதன் பிரதிபலனாக யுத்தம் ஏற்பட்டது. ஆகவே இந்த அரசாங்கம் ஒருபிரச்சினையை மறைக்க இன்னுமொரு பிரச்சினையை கொண்டுவருகிறது. வாழ்க்கைச் செலவு பிரச்சினையை மறைப்பதற்கு புதிய அரசியலமைப்பை கொண்டுவரலாம்.

அதேபோல அரசியலமைப்பை உருவாக்குவதை தவிர்க்கவும் இனவாதத்தை ஏற்படுத்தலாம். இறுதியில் இனவாதத்தை மறைப்பதற்கு ஜக்கியத்தை கொண்டுவர அரசாங்கத்தினால் முடியாது என்றார். (மு)

முல்லைத்தீவின்...

று 2ஆம் இடத்தையும் நெத்தலியாறு தமிழ் வித்தியாலய மாணவி ஜெகதீபன் நிலவுஜி 186 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தையும் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவன் சுரேஸ்குமார் கிசாளன் 185 புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 154 என்பதுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 154, மன்னார் 153, வவுனியா 154, கொழும்பு 156 மற்றும் மட்டக்களப்பு 154 என்பது குறிப்பிடத்தக்கது.(மு)

தமிழ் மக்களை...

அமைச்சர் பசில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் கூறியிருப்பது, தமிழ் மக்களின் இதயங்களை வெற்றி கொள்வதற்கான அரசியல் தந்திரம் என்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் சென்றிருந்த பசில் ராஜபக்ஷ படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்றும், ஆனால் சில தனிநபர்கள் குற்றங்களில் ஈடுபட்டிருக்கக் கூடும் என்றும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

தமிழ் மக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்காக பஷில் ராஜபக்ஷ முழு இராணுவத்தையும் காட்டிக் கொடுத்துள்ளார்.

ராஜபக்ஷக்களை சிறுபான்மை மக்கள் வெறுப்புடன் நிராகரித்தனர். தேர்தல் முடிவுகளில் இது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. இந்த நிலையை மாற்றி, பாசத்தை காட்டுவதற்காக, இராணுவத்தைப் பயன்படுத்தியுள்ளார் பஷில் ராஜபக்ஷ.

நாங்களும் கூட தமிழ் மக்களின் இதயங்களை வென்றிருக்கிறோம். ஆனால் நாங்கள் நியாயமான வழிமுறையைப் பயன்படுத்தினோம்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவைக் குற்றம்சாட்டி நான் வெளியிட்ட கருத்துக்கும், பஷில் ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்துக்கும் இடையில் வேறுபாடு உள்ளது.

நான் ஒட்டுமொத்த இராணுவத்தையும் குற்றம்சாட்டவில்லை. யாரையும் பெயரைக் கூறாமல் குற்றம்சாட்டவில்லை.

ஒருவர் மீது தெளிவாக எனது குற்றச்சாட்டை சுமத்தியிருந்தேன். எழுந்தமானமாக தனிநபர்கள் என்று கூறவில்லை.

ஜெனரல் ஜயசூரியவுடன் இருந்த கோப்ரல ஒருவரிடம் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. போர் முடிவுக்கு வந்து இரண்டு வாரங்களின் பின்னரும் ஜெனரல் ஜயசூரிய குற்றங்களில் ஈடுபட்டிருந்தார் என்று அவர் எனக்குத் தகவல் வழங்கினார்.

ஜயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டை நான் சுமத்திய போது, அதனைக் கடுமையாக விமர்சித்த தனிநபர்கள், அரசியல்வாதிகள், பிக்குகள் ஏன் பஷில் ராஜபக்ஷவின் அறிக்கைக்குப் பின்னரும் மௌனமாக இருக்கின்றனர்.

என்னை விரோதியாக சுட்டிக்காட்டியவர்கள் மற்றும் போர் வீரர்களின் பாதுகாப்பிற்காக பேசியவர்கள் இன்று அமைதியாக இருக்கிறார்கள். அவர்கள் இப்போது எந்த கண்ணீரும் சிந்தவில்லை.

குற்றமிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். யாராவது குற்றவாளிகள் என்று அறிந்தால், அவர்கள் நீதிக்கு முன்கொண்டு வரப்பட வேண்டும்.

தவறு செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், நாட்டுக்கு அவமானமே ஏற்படும்.

யாராவது ஒருவர் குற்றங்களைச் செய்ததற்கான ஆதாரங்களை மறைத்தால், அவர்கள் அதற்காக வெட்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (மு)

புலமைப் பரிசில்...

ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் தெரிவித்தார்.

இதேவேளை www.doenets.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பெறுபேறுகளை உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைத் தொழிற்சாலை...

ஆடைத் தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவு ஒவ்வாமை காரணமாகவே அவர்கள் மயக்கமுற்றிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்ட போதும்,

ஒரு வகை வாயுவை சுவாசித்தமையாலேயே அவர்கள் சுகவீனமுற்றதாக வைத்தியசாலை வட்டாரங்களும், ஆடைத்தொழிற் சாலையானது கண்ணாடிகளினால் மூடப்பட்ட நிலையில் காணப்படுவதாலும் 850 பேர் வரையில் கடமையாற்றும் நிலையில் சுவாசிப்பதற்கு போதுமான காற்று உள்வராமையாலும் வெப்ப கால நிலையாலும் இவ்வாறு மயக்க நிலை ஏற்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக நோர்வூட் பொலிஸாரும் தெரிவித்தனர். (மு)

கொழும்பு-தூத்துக்குடி...

வனமொன்றினால் கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையிலான கப்பல் சேவை 2011 ஜூன் மாதம் 13ம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

1200 பயணிகள் பயணிக்க கூடிய அக்கப்பல் வாரத்தில் இரு நாட்கள் சேவையில் ஈடுபட்டது. எதிர்பார்த்தவாறு பயணிகள், கப்பல் பயணத்தில் நாட்டம் கொள்ளாத நிலையில் அதே ஆண்டு நவம்பர் 18ஆம் திகதியுடன் சேவை நிறுத்தப்பட்டது.

குறித்த கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவே அமைச்சர் மகிந்த சமரசிங்க அமைச்சரவையில் அது தொடர்பான ஆவணங்களை முன்வைத்திருந்தார்.

இலங்கை-இந்திய பயணிகள் கப்பல் சேவை இரு மக்களுக்கிடையில் நெருக்கான தொடர்பினையும் கலாசார மற்றும் பொருளாதார தொடர்புகளையும் மேம்படுத்துவதற்கு உதவுவதோடு இரு நாடுகளுக்கிடையிலான கலாசார பொருளாதார தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் வர்த்தகம், சுற்றுலா மற்றும் புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் சந்தர்ப்பத்தை வழங்கும், என அமைச்சர் மகிந்த சமரசிங்க தனது அமைச்சரவை பத்திரத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் கொழும்பு-இராமேஸ்வரம் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க கேள்வி மனுவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும் அது தொடர்பில் உரிய பெறுபேறுகள் கிடைக்கவில்லை என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவரது அமைச்சரவை பத்திரத்தை ஏற்றுக் கொண்ட அமைச்சரவை உத்தேச திட்டத்திற்கு தற்போதுள்ள கேள்வி மனு நடைமுறைகளை ரத்து செய்துவிட்டு புதிதாக கேள்வி கோரப்பட்டு புதிய ஒருவரை நியமிப்பதற்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த சேவை தொடர்பாக இலங்கை-இந்திய அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

ஒற்றையாட்சி-பௌத்த...

சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் எட்டாவது மாநாட்டில் பிரதான சொற்பொழிவை நிகழ்த்தியபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மகாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

2030ற்குள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக தெற்காசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான களம் என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த மகாநாடு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும்.

சகல கட்சிகளும் சேர்ந்து சகலரதும் கருத்துக்களை உள்வாங்கக் கூடிய அரசியல் யாப்பை உருவாக்குவது நோக்கமாகும். இதற்குரிய இடைக்கால குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்து கருத்து வெளியிடும் வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம் இம்மாதம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இது எந்த வகையிலும் இறுதி ஆவணமாக மாட்டாதென்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஒற்றையாட்சிக்குள் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய அரசியல் யாப்பு தயாரிக்கப்படுகிறது. இதில் உச்சகட்ட அதிகார பகிர்வுக்கு இடமளித்து சகலருக்கும் உரிமைகள் கிடைக்கக்கூடிய வகையில் யாப்பு தயாரிக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறினார். (மு)

பிணை முறிகள்...

மக்கள் வங்கியின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ, தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அஸ்வின் டி சில்வா ஆகியோர் நேற்று ஆணைக்குழு முன்னிலையில் வழங்கிய சாட்சியத்தினூடாக இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

மூன்று அரச வங்கிகளின் ஏழு பிரதானிகள் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்துள்ள மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பொது முகாமையாளர் ஆகியோர் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு வருகை தந்துள்ளனர். (மு)

சமஷ்டி தரப்பட்டுவிட்டது...

நடைபெற்ற கலை விழாவில் கலந்து கொண்டு உரையாற் றுகையிலேயே இவ் வாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

இந்த நாட்டிலே தற்போது புரட்டப் பட்டிருக்கின்ற புதிய பக்கங்கள் எமது கனவை நனவாக்கு கின்ற செயற்பாட் டைசெய்து கொண்டி ருக்கின்றது.

60,70 ஆண்டு காலமாக தமிழ் மக் கள்தங்களுக்கு விடிவு கிடைக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு விதமான நடவடிக்கை யினை மேற்கொண்ட னர். புதிய சூழ்நிலை யை நாங்கள் 23☛

வலைத்தள உருவாக்கல்

மிகக்குறைந்த செலவில் உங்கள் நிறுவனங்கள், கல்விச்சாலைகள், ஆலயங்கள், தொண்டு நிறுவனங் கள் போன்றவற்றின் மேம்படுத்தலுக்கு உதவக் கூடிய வலைத்தளம் ஒன்றை உருவாக்கிக்கொள்ளுங்கள்.

நம்ப முடியாத விலை : ரூபா. 4499/= மட்டுமே

தொடர்புகளுக்கு :- 0703050007 (897)

யப்பான் சயிக்கிள்

விலை 10,000/= லிருந்து

யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
1.லேடிஸ் சயிக்கிள்கள்
2.யென்ஸ் சயிக்கிள்கள்
3.கியர் சயிக்கிள்கள்
4.மவுண்டன் சயிக்கிள்
5.மடக்கும் சயிக்கிள்கள்

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல் திருத்த
வேலைகள் இல்லை

"மின்னுவதெல்லாம் பொன் அல்ல" யப்பான் சயிக்கிள் ஒன்றை வாங்கி நீண்டகாலம் (10) வருடம் பாவிக்கலாம் (900)

மொத்தக் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு உண்டு

அன்ரன் என்ரபிறைசஸ்

பலாலி றோட், கோண்டாவில்.
(ப்ராம் ஸ்கூல் முன்பாக)

பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கும் கணனி நிலையம் ஒன்றுக்கு கீழ்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கணனி ஆய்வு கூட உதவியாளர் மற்றும் அலுவலகர் (பெண்கள்)

தகைமை : கணனி அறிவு
[வன்னிப்பிராந்தியத்தில் வசிப்போர் விரும்பத்தக்கது]

லிட்டில் ஏய்ட் கணனிப் பயிற்சி மையம்
கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி

மேலதிக விபரங்களுக்கு:
(C-9867) 0772999699

MATHS PERSONAL CLASSES

தரம் 6-11 வரையான கணித வகுப்புக்கள் பிரபல ஆசிரியரால் வீடுவந்து கற்பிக்கப்படும்.

தொடர்பிற்கு :- 0774540529 (908)

வேலை ஆட்கள் தேவை

தையல் நிலையம் ஒன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும்

தொடர்புகொள்ளவும் :-
076 740 3384 (910)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விருமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தருகப்படும் மோட்டார் சைக்கிள்கள் மெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9818)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS- 0768226240

- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
- சாவகச்சேரி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட
ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
அன் திருமண அழைப்பிதழ்கள்

விசேட விலைச் சலுகை : 03.10.2017 - 13.10.2017

Banner printing	: 30/=
Sticker printing	: 70/=
Backlit printing	: 70/=
Clear sticker printing	: 70/=
Normal Board	: 200/=
With out steel	: 150/=
Light Board	: 450/=

Mug Printing : 250/=

இல.10, கந்தசுவாமி கோவிலடி, கிளிநொச்சி.
தொ.பே: 071 211 5533

இல.252, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 221 3233

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பாராட்டி வாழ்த்துகின்றோம்

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த எமது மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஒலிம்பியா ஸ்போர்ட்ஸ்

273, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 222 3490, 0778060267 (C-9869)

குறிப்பு -: மாணவர்களை கௌரவிப்பதற்குரிய மெடல்ஸ் (பதக்கங்கள்), கேடயங்களை உங்கள் எண்ணம் போல் வடிவமைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

காணி விற்பனைக்குண்டு

ஆனைக்கோட்டை பழம் நோட் தெற் குப்பக்கமாக 3 பரப்பு கொண்ட துண்டு களாக பிரிக்கப்பட்ட 25 துண் காணிகள் விற்பனைக்குண்டு.

விரும்புவோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
077 615 3238 (893)

அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புகள் அதிகம்

0768226243

கடந்த வருடம் எம்மூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

அலுவலகங்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

2016 ல் எங்களூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் - வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.

மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர் (C-9864)

யாழ்ப்பாணம்	கிளிநொச்சி	சாவகச்சேரி	நெல்லியடி	பருத்தித்துறை	வல்வெட்டித்துறை
#49A, சப்பல் லேன்	A9 வீதி, பளைய கூலப்பந்திக்கு எதிரே	10,பேருந்து நிலையம்	முடக்காட்டு சந்தி	324,மாழ் பிரதான வீதி	யாழ் வீதி,வல்வெட்டி
0768226241	0768226240	0768226242	0776699892	0768226230	0776697960

கண்ணீர் அஞ்சலி

அமரர் செல்வநாயகம் சோதிராஜா

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
மகிழ்வான மக்கட்பேறு அடைந்து
மானிடரில் நம் மனிதராக உயர்ந்து
மனிதம் காத்த ராஜாவே
மரணமா உம்மை எம்மிடம் பிரிந்தது
மலைத்து நின்றோம் இன்பமுடைந்து
உம் ஆத்மா சாந்திபெற
இறைஞ்சுகின்றோம் ஆண்டவனை
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பலாலி வீதி, உரும்பிராய்.

வள்ளுவர் அக்கடமி கல்விச்சமூகம். (C-9866)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org